கல்கி

KALKI 24-4-1977 75 காசு



சாதாரணப் பவுடர்களால் துலக்கும்போது
பொடிக் கசடு தங்கிப்போகக் கூடும்.



மாசில்லாத பளபளப்பை வீசிட வைப்பது விம்.

இதன் துலக்கும் சக்தி 50% அதிகம்.

துலக்குவதற்கான வேறெந்தப் பவுடரையும் விட மிக அதிக அளவு டிட்டர்ஜெண்ட் அடங்கியது விம். ஆகவே தான், கூடுதலான துலக்கும் சக்தியோடு, பிசுக்குகளையும் கறைகளையும் அற்ப நொடியில் அகற்றுகிறது. பொடிக் கசடுகள் ஏதும் பின்தங்கும்படி விடுவதில்லை. மேலும், மிக மிக நைஸான பவுடராக இருப்பதால், கீறலே இல்லாத மழமழப்புக்கு உறுதி தருகிறது. தொட்டதையெல்லாம் தூய்மை பளிச்சிடத் துலக்குவது விம்.






இந்தப் பேக் வாங்கினால் உமக்கு 25% க்கும் அதிகமாக மிச்சமாகும்.

இந்துஸ்தான் லீவரின் இத் தரமான தயாரிப்பு 600 கிராம் மற்றும் 2.5 கிலோ பேக்கிங்குகளில் கிடைக்கிறது. உதிரியாக ஒருபோதும் கிடைப்பதில்லை.

லிண்டாஸ்-V.57-203 TM

ஹார்லிக்ஸ்



ஒவ்வொரு நாளும் ஆரோக்கியத்தைப் பாதுகாத்து, எதிர்ப்புச் சக்தியை வளர்க்கும் ஊட்டச் சக்தி.

ஒவ்வொரு நாளும் ஹார்லிக்ஸ் அருந்தினால், அது உங்கள் குடும்பத்தினருக்கு எதிர்ப்புச் சக்தியை வளர்க்கும் ஊட்டச் சக்தியை அளித்து, அவர்களை பூரண ஆரோக்கியத்துடன் விளங்கச் செய்கிறது.

உலகமெங்கிலும் டாக்டர்களால் சிபாரிசு செய்யப்படுவது ஹார்லிக்ஸ் ஒன்றுதான். தனிச்சிறப்பு மிக்க ஹார்லிக்ஸ் செய்முறை, ஹார்லிக்ஸில் அடங்கியுள்ள சத்துமிக்க, சுத்தமான பொருள்களை கலக்கும்பொழுது, அவற்றிலுள்ள இயற்கையான, நல்ல தன்மைகளை நிறுத்தி, அவற்றை எளிதில் ஜீரணிக்க வகை செய்கிறது. அதனால், மிகுந்த அளவில் ஊட்டச்சக்தியை அளிப்பதும் ஹார்லிக்ஸ் ஒன்றுதான்.

அதனாலேயே, சுசித்ரா ஹார்லிக்ஸை தனது குடும்பத்தினரது வாழ்க்கையின் ஒரு அம்சமாக்கி இருக்கிறாள்.

சுசித்ராவைப் போன்றே, உங்கள் குடும்பத்தினருக்கும் ஒவ்வொரு நாளும் ஹார்லிக்ஸ் அளித்து, அவர்கள் ஆரோக்கியமாகவும், வலுவுடனும் வளருவதைக் கவனியுங்கள்.

"ஊட்டச்சத்திற்கு ஹார்லிக்ஸ் ஒரு முக்கியமான மூலப்பொருள். உங்களுடைய குடும்பத்தினரின் எதிர்ப்புச் சக்தியை வளர்க்கவும், அவர்களை ஒவ்வொரு நாளும் ஆரோக்கியமாக வைத்திருக்கவும் நான் ஹார்லிக்ஸை சிபாரிசு செய்கிறேன்".



ஹார்லிக்ஸ் முழுமையான ஊட்டம்பெற

ஹார்லிக்ஸ் ஒரு பதிவு பெற்ற டிரேட் மார்க்



பாரதப் பெருமை பேசும்
சுகபோக சோப்புகள்
மைசூர்
ஸாண்டல்
GOVT. SOAP FACTORY
BANGALORE
கவர்மெண்ட் சோப் ஃபாக்டரி, பெங்களூர் அளிக்கும் தரமிக்க தயாரிப்பு
விற்பனை செய்பவர்கள்: மைசூர் சேல்ஸ் இண்டர்நேஷனல் லிட்., பெங்களூர்

MCA-SS-60 Tam



கல்கி

1977 ஏப்ரல் 24
பிங்கள ௵
சித்திரை 12


ராஜாஜி சிந்தனை

பரம்பொருளாராய்ச்சி

மனிதனுடைய புத்தி மிகச் சிறந்த அமைப்பாயினும், எதனில் அது ஒரு பாகமோ அம்முழு முதல் பொருளை அது தனக்குள் அடக்க முடியாது. எத்தனை அழகிய ஆழாக்கானாலும் அதில் உழக்குப் பிடிக்காது. எந்தப் பலகை மேல் ஒருவன் நிற்கிறானோ, அவன் அதன் மேல் நின்றுகொண்டே, அதைத் தூக்க முடியாது. மகா பலவானானாலும் எது அவனைத் தாங்குகிறதோ, அதையே அவனால் பெயர்த்தெடுக்க முடியாதல்லவா? அதை விட்டு இறங்கித்தான் தூக்க முடியும். வண்டியை இழுக்கும் குதிரையை வண்டிக்குள் ஏற்றிவிட்டால் அது வண்டியை இழுக்குமா? மனிதனுடைய புத்தி பரம்பொருளை விட்டுத் தனியாக நிற்க இயலாதது. ஆகலால் அப்பரம்பொருளையே அதனால் இழுத்துச் செல்ல முடியாது; அதாவது தன் அறிவெல்லைக்குள் கொண்டு வர முடியாது. வயிற்றுக்குள் இருக்கும் ஆகாரப் பை எத்தகைய உணவையும் ஜீரணம் செய்யும். ஆனால் தன்னைத் தானே ஜீரணம் செய்து கொள்ள இயலாது. ஓர் அளவு செய்யலாம். அதற்குள் அது தன் சக்தியை இழந்து அதற்கு மேல் வேலை செய்ய முடியாமல் நிற்கும். ஒரு பாம்புக்கு எவ்வளவு தான் கோரமான பசியும் ஆத்திரமும் உண்டானாலும் வாலைக் கவ்விக் கொண்டு தன்னைத் தானே விழுங்கிவிட முடியாது. அவ்விதமே அனைத்துக்கும் காரணமான பரம்பொருள் மானிட அறிவுக்கு அடங்காது.

—கண்ணன் காட்டிய வழி

இந்தக் கோடையில் வேர்க்குரு எங்கு தாக்கும்?



வேர்க்குரு எங்கு தாக்கினாலும், அதை முறியடிக்க உபயோகியுங்கள் ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர். ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடரில் மட்டுமே நிரூபணம் பெற்ற மருந்துக் கலவை அடங்கியுள்ளது. அது மூன்று வழிகளில் செயலாற்றுகிறது.

- வியர்வை உறிஞ்சுகிறது; சருமத் துவாரங்கள் அடைபடுவதைத் தடுக்கிறது.
- பாக்டீரியா கிருமிகள் பெருகுவதைத் தடுக்கிறது.
- சுகமும் குளுமையும் தந்து, உடனடி நிவாரணம் அளிக்கிறது.

ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடரைக் குளித்தவுடனும், படுக்கும் முன்பும் உடம்பின்மீது தாராளமாகத் தூவுங்கள். உடனடியாக வேர்க்குருவைத் தடுக்கும் மருந்து கலந்த வேர்க்குரு பவுடர் இது ஒன்றுதான்!



சந்தன மணத்திலும் கிடைக்கிறது.

ஜான்ஸன்ஸ்® ப்ரிக்லி ஹீட் பவுடர் மட்டுமே உடல் எரிச்சலை நிறுத்துகிறது, அரிப்பிலிருந்து நிவாரணமளிக்கிறது உடனடியாக.

ஒரு மோசமான சட்டம்

க. சந்தானம்

ஒரு மாநிலத்தில் ராஷ்டிரபதி ஆட்சி கொண்டு வருவது தாற்காலிக ஏற்பாடு தான். மக்கள் ஆட்சி மீண்டும் மலர்வதற்கு முன் அரசின் அன்றாட நடவடிக்கைகளைக் கவனிக்க உருவாவது. ராஷ்டிரபதிக்கு அம்மாநிலத்தில் சட்டங்கள் இயற்ற அரசியல் சாசன ரீதியாக உரிமை உண்டு. என்றாலும் அது வருவாய்த் துறை போன்ற அத்தியாவசியமான இனங்கள் பற்றிய சட்டங்களுக்கே பொருந்தும். மற்றய புரட்சிகரமான சட்டங்கள் மக்கள் ஆட்சி மலரக் காத்திருப்பதே முறை. அவ்வாறிருக்க, தமிழ்நாடு நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம் இங்கே ராஷ்டிரபதி ஆட்சி நிலவிய போது கொண்டு வரப்பட்டதானது விசனத்துக்குரியது. சில மாநில அரசுகளின் கோரிக்கையின் பேரில் நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேறியது உண்மைதான். ஆனால் அத்தகைய சட்டத்தை நாடாளுமன்றம் நிறைவேற்றிவிட. இங்கு முன்பு அமைந்திருந்த மக்கள் அரசு ஒப்புதல் வழங்கவில்லை. ஆகவே தமிழகத்தில் தேர்தல் நடந்து புதிய மக்கள் ஆட்சி அமையும் வரை காத்திருந்திருக்கலாம். அதுவே புத்திசாலித்தனமாக இருந்திருக்கும். இச் சட்டத்தை நிறைவேற்றத் தலைபோகிற அவசரம் ஏதுமில்லை.

அதுபோக சட்டத்தின் யோக்கியதையைப் பார்க்கும் போது அது மோசமான சட்டம் என்று தெரிகிறது. எல்லா காலி மனைகளுக்கும் ஐந்நூறு சதுர மீட்டர் (இரண்டு கிரவுண்டு) உச்சவரம்பு விதிக்கப்பட்டுள்ளது. நகரில் தெருவை யொட்டியுள்ள பல வீடுகள் நாலு, ஐந்து கிரவுண்டு மனைகளில் கட்டப்பட்டுள்ளன. இங்கெல்லாம் உச்சவரம்பை அமல்படுத்துவது முடிவற்ற தொந்தரவாகும். அயல் மாநிலங்களிலும் அயல் நாடுகளிலும் பணியாற்றும் தமிழகத்தைச் சேர்ந்த பலர், தாங்கள் ஓய்வு பெற்ற பின் வந்து வீடு கட்டி வாழ்வதற்கென இங்கே மனை வாங்கிப் போட்டிருக்கிறார்கள். இவர்களில் பலர் தங்கள் சேமிப்பின் பெரும் பகுதியை அதில் முடக்கி யிருக்கிறார்கள். சட்டமோ அதிகப்படி நிலத்துக்கு நஷ்டஈடாக அதிகபட்சம் ஒரு சதுர மீட்டருக்குப் பத்து ரூபாய் அதாவது சதுர அடிக்கு ஒரு ரூபாய் கொடுப்பதாகக் கூறுகிறது. சென்னையில் மயிலாப்பூர், திருவல்லிக்கேணி போன்ற பகுதிகளில் சதுர அடி பத்து ரூபாய் பெறும். நகரின் சுற்றுப்புறங்களில் கூட சதுர அடி ஆறு ஏழு ரூபாய்க்குக் குறையாது. ஆக, நஷ்டஈடு என்பது பெயரளவில்தான்; உண்மையில் இது பறிமுதலே. இப்போது அடிப்படை உரிமைகள் மக்களுக்குத் திரும்ப வழங்கப்பட்டுள்ளதால் இது பொருத்தமற்றதாகிறது. சட்ட ரீதியான நோக்கினை ஒதுக்கி விட்டாலும் ஏதோ பெயரளவுக்கு ஒரு நஷ்டஈடு கொடுத்துவிட்டு, மதிப்புமிக்க வீட்டு மனைகளை எடுத்துக் கொள்வது அநீதியாகும்.

தமிழகத்தில் சீக்கிரமே தேர்தல்கள் நடக்கப் போகின்றன. எனவே இச் சட்டத்தை அமலாகாமல் அதிகாரிகள் நிறுத்தி வைப்பது உசிதம். புதிதாக உருவாகும் தமிழ்நாடு சட்டசபை இவ் விஷயத்தை ஆராய்ந்து தேவையான மாறுதல்களைச் செய்ய வாய்ப்பிருக்க வேண்டும்.

இச்சட்டத்தில் வேறு பல குறைபாடுகளையும் காண்கிறேன். உச்சவரம்புக்கு உட்பட்ட நிலத்தைக்கூட விற்பதோ அல்லது அத்துடன் வாங்கிச் சேர்ப்பதோ அல்லது வேறு ஏதும் செய்வதோ முடியாமல் சிரமமாக உள்ளது. இதற்கு அனுமதி பெறுதல் பெரிய உபத்திரவமான காரியமாகிறது.

வேறு பல மாநிலங்களும் இச் சட்டம் குழப்பமாகவும் சிக்கலாகவும் இருப்பதாக உணரலாம். புதிய சட்ட அமைச்சர் இவற்றைக் கவனித்து அகில இந்திய ரீதியில் ஏதேனும் மாறுதல்கள் தேவையா என்று யோசிப்பார் என நம்புகிறேன்.

இச்சட்டத்தின் துரதிருஷ்ட வசமான ஒரு விளைவு சென்னை நகரிலும், மற்றப் பெரு நகரங்களிலும் வீடு கட்டுமானத்

கல்கி மலர் 36 இதழ் 39

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற — எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

தொழில் படுத்துவிட்டதுதான். எல்லோருக்கும் சொந்தத்தில் வீடு கட்டிக் கொண்டு விட முடியாது. எனவே சொந்தமாக வீடு கட்டிக் கொள்வதை எவ்வளவு வரவேற்க வேண்டுமோ அவ்வளவுக்கு வாடகைக்கு விட வீடு கட்டுவதையும் வரவேற்க வேண்டும்.

கூட்டுப் பொறுப்பு கேலிக்கூத்தான கதை!

நெருக்கடி நிலைப் பிரகடனத்தில் ஜூன் 25ந் தேதி ராஷ்டிரபதி கையெழுத்திட்டார். அதனை மறுநாள்தான் மந்திரி சபை அங்கீகரித்தது. இதனை உள்துறை அமைச்சர் திரு சரண் சிங் நாடாளுமன்றத்தில் கூறியுள்ளார்.

இது சட்ட, அரசியல் ரீதியான முக்கிய பிரச்னையைக் கிளப்புகிறது. மத்திய அமைச்சரவைக்கு நியமனங்கள் தவிர மற்ற எல்லா அம்சங்களிலும் ராஷ்டிரபதி, அமைச்சரவையின் யோசனைப்படி மட்டுமே நடக்க வேண்டியவராகிறார். ஒரு யோசனை தம்மிடம் வரும் போது அது அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்றதா என்று அவர் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அமைச்சரவையின் ஒப்புதல் இல்லை யெனில் அதன்படி உத்தரவுகளைப் பிறப்பிக்க அவர் மறுத்து அமைச்சரவைக்கே யோசனையைத் திருப்பி அனுப்ப வேண்டும்.

முதலில் அமைச்சரவையின் ஒப்புதலைப் பெறாமல் ராஷ்டிரபதியை ஒரு பிரகடனத்தில் கையெழுத்துப் போடச் சொன்னது அன்றையப் பிரதமர் செய்த மாபெரும் தவறாகும். அது ராஷ்டிரபதியையும், அமைச்சரவையையும் ஒருங்கே அவமதித்ததாகிறது.

இதை விட விசனத்துக்குரியது என்ன வென்றால், அரசியல் சாசனத்தை அலட்சியப் படுத்துவதான இந்தக் காரியத்துக்கு அமைச்சரவையினர் பணிந்து போனதுதான். அப்படி அவர்கள் பணியாதிருந்திருந்தால் அமைச்சரவையில் ஓர் இக்கட்டான நிலை தோன்றியிருக்கும் என்பது உண்மையே. சராசரி மனிதர்களுக்கு உரிய பலவீனங்களுடன் பதவி ஆசையும், கட்சிப் பற்றும் அவர்களை அத்தகையதொரு தீவிர நடவடிக்கை பற்றிச் சிந்திக்க அனுமதிக்கவில்லை என்று கருதலாம். ஆனால் ஏறத்தாழ மூன்று மாத காலத்துக்குப் பிறகாவது நெருக்கடி நிலைப் பிரகடனத்தை ரத்து செய்ய வேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தி விருப்பார்களேயானால் சுயமரியாதையை அவர்கள் எளிதாகத் திரும்பப் பெற்றிருக்கலாம். அனுபவம் வாய்ந்த அத்தனை அமைச்சர்களும் தங்களை அவமரியாதையுடன் நடத்த அனுமதித்தார்கள். கடைசியில் ஜகஜீவன்ராம் ஒருவரைத் தவிர மற்ற எல்லாரும் அந்த அவமரியாதையைப் போகிற போக்கில் இலேசாக ஏற்றுக் கொண்டு விட்டார்கள். இது இந்தியாவின் பொது வாழ்வில் பேரவமானமான ஒரு நிகழ்ச்சி.

அன்றையப் பிரதமர் நெருக்கடி நிலைப் பிரகடனம் செய்ய மேற்கொண்ட வழிமுறை முழுவதுமே அரசியல் சாசனத்துக்கு முரணானது எனினும் இதற்குச் சட்ட பூர்வமான பரிகாரம் ஏதும் கிடையாது. ஏனெனில் ராஷ்டிரபதிக்கு அமைச்சர்கள் கூறும் எந்த யோசனையையும் எந்த நீதிமன்றமும் பரிசீலிக்கக் கூடாது என்று விதிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்திலாவது இது போன்ற நிலைமை ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டும். இதற்கு எளிய வழி இதுதான்: எந்த யோசனையாயினும் அமைச்சரவை அதனை ஏற்றதாக ஒரு தீர்மானம் போட்டு, அத்தீர்மானத்தின் நகலில் பிரதமரும் அமைச்சரவைக் காரியதரிசியும் கையெழுத்திட்டு ராஷ்டிரபதியிடம் தரவேண்டும்; அத்தீர்மானம் நிறைவேறிய தேதி, நேரம் அதில் காணப்பட வேண்டும். இத்தகைய தீர்மான நகல் வந்தாலொழிய எந்த யோசனையையும் ஏற்று உத்தரவுகளில் ராஷ்டிரபதி கையெழுத்திடக் கூடாது. இப்படி ஒரு சட்டம் இயற்ற வேண்டும். அதோடு இரண்டு மூன்று அமைச்சர்கள் கூடிப் பேசுவது அமைச்சரவைக் கூட்டம் என்று பெயர் பெற்று விட அனுமதிக்கலாகாது. ஒவ்வொரு அமைச்சருக்கும் அமைச்சரவைக் கூட்டம் நடப்பது பற்றி முன்னறிவிப்புத் தரப்பட வேண்டும். அமைச்சரவைக் கூட்டம் செல்லுபடியாக அமைச்சரவையில் உள்ளோரில் பாதிப் பேருக்கு மேலாவது அக்கூட்டத்துக்கு வந்திருக்க வேண்டும். இதற்கெல்லாம் உரிய வழிமுறைகளை ஏற்படுத்துதல் அவசியம்.


அமைச்சரவைக்குக் கூட்டுப் பொறுப்பு உண்டு. அவர்களைக் கலந்தாலோசியாமலே அவர்களைப் பொறுப்பாளிகளாக்குவது கேலிக்கூத்து. முக்கிய விஷயங்களில் தம்மைக் கலந்தாலோசிக்காது போனால் அது தம் சுயகௌரவத்துக்கு இழுக்கு; தம்மால் அமைச்சரவையில் நீடிக்க முடியாது என்று ஒவ்வொரு அமைச்சரும் நினைப்பது நடைமுறைப் பழக்கத்துக்கு வரவேண்டும். — க. சந்தானம்

மற்றும் ஒரு சாந்தாகுரூஸ்!

தங்களுடைய 31-10-76 கல்கி இதழில் சாந்தா குரூஸ் என்ற பெயருடைய இடங்களில் நடந்த இரு விமான விபத்துக்களைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தீர்கள். ஒன்று பம்பாய் சாந்தாகுரூஸ்; மற்றது தென் அமெரிக்க பொலிவியா நாட்டின் சாந்தா குரூஸ். சமீபத்தில் ஒரு டச்சு விமானமும் அமெரிக்க விமானமும் மோதி 563 பேர்களைப் பலிகொண்ட இடத்தின் பெயரும் 'சாந்தா குரூஸ்'. இது ஸ்பெயினுக்குச் சொந்தமான கானரி தீவுகளில் உள்ளது. விமானங்களுக்கு சாந்தா குரூஸ் என்ற பெயரைக் கண்டாலே அலர்ஜி போலும்! -பி. பாஸ்கரன்




ஜனநாயக காங்கிரஸ் தனிக் கட்சி
ஜெ.பி
ஜனநாயக காங்கிரஸ் தனிக் கட்சி
ஜனதா
ஒத்துழைப்பு
மக்களின் ஆத்திரம்
அம்மா தாயே! ஆட்டைப் பலி கொடுக்கிறோம்! எங்களை எல்லாம் விட்டு விடு!
பன்ஸிலால்
காங்கிரஸ்


மு.க அளிக்கும் ராஜிமா அல்லது வாபஸ் ஸ்பெஷல் நாடகம்!
என்னய்யா நாடகம் போட்டீட? 'சப்'புன்னு போச்சு! 'ஸஸ்பென்ஸே' இல்லே!
செழியன்

அவளுக்கோர் ஆசை!

கணவன் அலுவலகம் விட்டு வருவதற்குள் புத்தம் புது மலர் போல் காட்சியளிக்க வேண்டும் என்று எண்ணி, தூங்கி எழுந்த முகத்தில் இன்னும் நிலைத்திருந்த நித்திரை சுவடுகளைத் துடைத்தெறிந்து, 'கசகச'வென்றிருந்த உடலில் இதமாக நீரைக் கொட்டி அலுப்புத் தீரக் குளித்துவிட்டுக் குளியலறை விட்டு வெளியில் வந்து அவள் உடை மாற்றிக் கொண்டிருந்த போது 'டிர்ர்ர்ரிங்'' பாடியது காலிங் பெல்.

வந்து விட்டார்! வாயில் கவ்வியிருந்த சேலை நுனியைக் கையில் எடுத்து அழகாகக் கொசுவம் வைத்து மடித்து இடுப்பில் செருகியபடியே, அதற்குள் ஒருமுறை அடித்த மணிக்கு ''இதோ வந்து விட்டேன்'' என்று பதில் கூறியபடி கதவருகில் சென்றாள்.

கதவைத் திறந்த மனைவியைப் பார்த்துப் புன்னகை செய்தபடியே நுழைந்தான் சுரேந்திரன்.

''என்ன இன்று மாலை நேரத்தில் குளியல்?'' என்று வினவினான் அவன்.

''சும்மா தோன்றியது குளித்தேன்'' என்றவள் ''கையில் என்ன பார்சல்?'' என்று கேட்டாள்.

''அதை இப்போது காட்ட மாட்டேன். அப்புறம்தான்...'' அவள் காதருகில் குனிந்து அவன் என்ன சொன்னானோ, தெரியவில்லை, 'களுக்' என்று சிரித்து அவன் கன்னத்தை நிமிண்டினாள் அவள்.

''ஊகூம். இப்போதே காண்பித்தால் தான்!'' பார்சலை லபக்கென்று அவனிடமிருந்து பிடுங்கிக் கொண்டு படுக்கையறைக்குள் சென்று கட்டிலில் அமர்ந்தாள் நளினா.

பார்சலைப் பிரித்தாள் அவள். உள்ளே இருந்த 'நைட் கவுன்' மிகவும் அழகாகக் காட்சியளித்தது.

சுரேந்திரன் அவளைப் பார்த்துச் சொன்னான். ''உன்னிடம் இப்போது இல்லாதது இது ஒன்றுதான். அதனால்தான் நானாக 'ஐடியா' பண்ணிப் பல கடைகளை அலசிக் கடைசியில்.....''

''ஐயே, என்ன ஐடியா! குப்பை'' என்றாள் நளினா கிண்டலாக.

''ஏன் பிடிக்கவில்லையா? நன்றாக இல்லையா?''

நளினா பதில் சொல்லவில்லை. எழுந்து சென்று பீரோவைத் திறந்தாள். அதற்குள்ளிருந்து இன்னும் எடுத்துப் பிரிக்காமல் அப்படியே இருந்த புத்தம் புதிய 'நைட் கவுன்' ஒன்றை எடுத்து ''ம்....பாருங்கள்'' என்றாள் அவனிடம்.

தன் தலையில் கை வைத்தான் சுரேந்திரன். ''இதையாவது எனக்காக விட்டு வைத்திருக்கக்கூடாதா உன் அம்மா? ஒன்று பாக்கியில்லாமல் கல்யாணத்துக்கு முன்பே இப்படி வாங்கித் தந்து உன்னை என்னிடம் அனுப்பி விட்டார்களே, நான் ஆசைப்பட்டுப் புதிதாக உனக்கு என்ன வாங்கித் தர முடிகிறது?'' சந்தோஷத்திலும் ஓர் அங்கலாய்ப்பை வெளியிட்டான் சுரேந்திரன்.

''இப்படி பணத்தை ஏன் வீணாக்குகிறீர்கள்? எதையும் வாங்குவதற்கு முன் அது இருக்கிறதா என்று என்னிடம் ஒரு வார்த்தை கேட்டிருக்கக் கூடாதா?'' நளினா செல்லமாகக் கோபித்துக் கொண்டாள் தன் கணவனை.

நளினா அவள் பெற்றோருக்கு ஒரே பெண். வீட்டில் நல்ல செல்வநிலை. அவள் சிறுகுழந்தையாய் இருக்கும்போதே கடையில் ஒரு பொருளைப் பார்த்து, ''அது என்னப்பா?'' என்று கேட்டு விட்டால் போதும். அதை வாங்கிக் கொடுத்து விட்டுத்தான் மறு வேலை பார்ப்பார் அவள் தந்தை. அவள் அம்மாவும் அதே மாதிரி. நளினா வளர வளர, அவள் வளர்ச்சிக்கேற்ப, அந்த வளர்ச்சியை ஒட்டி வளர்ந்து வரும் அவள் ஆசைகளின் வடிவங்களுக்கு ஏற்ப, புதிய புதிய பொருட்களை வாங்கிக் கொடுத்தார்கள் அவள் பெற்றோர்.


கல்யாண வயதில் காலடி எடுத்து வைத்தாள் நளினா. அன்றிலிருந்தே ஆரம்பித்தவள் தான் அவள் அம்மா. தன் மகள் புதிதாகக் குடித்தனம் போனால் அவளுக்கு ஒரு குறையும் என்று இருக்கக் கூடாது என்று எண்ணி என்ன என்ன வேண்டியிருக்குமோ அதையெல்லாம் இப்போதே வாங்கிச் சேகரிக்க ஆரம்பித்து விட்டாள் அவள். அம்மி ஆட்டுக் கல்லில் ஆரம்பித்தவள், அலங்காரப் பொருட்கள் வரையில் எதையும் விட்டு வைக்கவில்லை. நைட் கவுன் முதற்கொண்டு தன் பெண்ணுக்குச் சீதனமாகக் கொடுத்த தாய் அவள் ஒருத்தியாகத்தான் இருக்க வேண்டும்.

அவளுக்குப் பார்த்திருக்கும் மாப்பிள்ளை டெல்லியில் பெரிய வேலையில் இருக்கிறான் என்று கேட்ட போது பூரிப்பும் பெருமையும் தாங்கவில்லை அவளுக்கு. ஆனாலும் அவ்வளவு தூரம் போய் விட்டால் அடிக்கடி தன் மகளைப் பார்க்க முடியாதே என்ற வருத்தம் வேறு. எப்படியோ அவள் நன்றாக வாழ்ந்தால் சரிதான் என்று எண்ணி, சுரேந்திரனுக்கு மனைவியாக்கி மகிழ்ந்தார்கள் அவள் பெற்றோர்.

கல்யாணம் பண்ணி வந்ததில் இருந்ததே அவளுக்கு ஒரு குறையும் வைக்கவில்லை சுரேந்திரன். அவள் விரும்பிய இடத்துக்கெல்லாம் அவளை அழைத்துச் சென்றான்.

இதுவரை தன் மனைவியினிடத்தில் இல்லாத அதே சமயத்தில் அவள் விருப்பத்துக்கேற்றாற் போல அவளுக்குப் பயனுள்ள ஒரு புதிய பொருள் வாங்கித் தர முடியவில்லை என்பதை நினைத்தால் அவனுக்கே ஏக்கமாக இருந்தது.

நாட்கள் ஓடிக் கொண்டிருந்தன. நளினாவுக்குக் கடிதம் வந்தது அவள் அம்மாவிடமிருந்து ஒருநாள். அதைப் படித்துவிட்டுத் தன் கணவனிடம் சொன்னாள்: ''பக்கத்து வீட்டில் ஒரு பாப்பா அம்மாவை 'பாட்டி, பாட்டி' என்று அழகாகக் கூப்பிடுகிறதாம்...



அம்மா பூடகமாக எழுதியிருக்கிறாள்.'' அதைச் சொல்லும் போது அவள் குரலில் வெட்கம் இழையோடியது.

சுரேந்திரன் சிரித்துக் கொண்டான்.

''உங்களுக்கு... ஒரு நல்ல செய்தி சொல்லப் போகிறேன்.'' அவன் தோள்களைப் பிடித்துக் கொண்டு குழைந்தாள் நளினா.

''என்ன நளினா?''

''அம்மா எழுதியிருந்தாளே..?''

சுரேந்திரன் புரியாமல் அவள் முகத்தைப் பார்த்தான். ''அம்மாவும் பாட்டியாகப் போகிறாள் இப்போது'' என்றாள். நளினாவை அப்படியே வாரி அணைத்துக் கொண்டான் சுரேந்திரன்.

சுரேந்திரன் கேட்டான்: ''உனக்குத் தற்போது ஏற்படும் ஆசையைக் கட்டாயம் நிறைவேற்ற வேண்டுமாம். எங்கே சொல் பார்க்கலாம்?'' ஆர்வம் குதித்தது அவன் குரலில்.

''நான் கேட்பதை நீங்கள் நிச்சயம் நிறைவேற்றுவீர்களா?'' — ஆதங்கம் ததும்பியது அவள் குரலில்.

''அப்பாடா! உன் விருப்பத்தை நிறைவேற்றும் ஒரு சந்தர்ப்பமாவது கிடைத்ததே. சீக்கிரம் சொல்'' என்றான்.

''இது விஷயத்தை எங்கள் அப்பா, அம்மாவுக்குத் தெரிவிக்கக் கூடாது. நானும் எழுத மாட்டேன்.''

''என்னது உனக்குப் பைத்தியமா பிடித்து விட்டது? அவர்களுக்கு எழுதாமல் வேறு யாருக்கு எழுதுவதாம்?''

''உண்மையாகத்தான் சொல்கிறேன். தயவு செய்து தெரிவிக்க வேண்டாம். அதற்குத்தான் முதலிலேயே கேட்டேன். நீங்கள்தான் எதுவானாலும் சரி என்றீர்களே!''

''இதென்ன தர்ம சங்கடம் நளினா? நீ சொல்வதற்குக் காரணம் இருந்தால் நான் அப்படி இருக்கிறேன். இல்லையென்றால் இதென்னது அர்த்தமில்லாமல்?''

''காரணமில்லாமலா? அப்புறம் சொல்கிறேன்.''

''அப்புறம் என்றால் எப்புறம்?''

''பொறுங்களேன்.''

''ஊகூம். அது ரொம்பத் தப்பு. இப்போதே நான் ஊருக்குக் கடிதம் எழுதி...''

''ப்ளீஸ்...ப்ளீஸ்....'' கெஞ்சினாள் நளினா.

''சரி'' என்று அரை மனத்தோடு ஒப்புக் கொண்டான் சுரேந்திரன்.

ஊரிலிருந்து அவர்களுக்கு வந்த எல்லாக் கடிதங்களிலும் பேரக் குழந்தையைப் பற்றிப் பட்டும் படாமலும் ஆசையைத் தெரிவித்திருந்தார்கள் அவள் பெற்றோர்கள். ஆனால் தாங்கள் எழுதிய எந்தக் கடிதத்திலும் வளர்ந்து வரும் சிசுவைப் பற்றி இவர்கள் இருவருமே குறிப்பிடவில்லை.

இன்னும் இருபதே நாட்களில் குழந்தை பிறந்து விடும் என்று எண்ணிச் சொல்லி விட்டார் டாக்டர். சுரேந்திரன் நளினாவிடம் ரொம்பவும் சீரியஸாகவே சொன்னான்: ''நளினா! நீ செய்வது எனக்கு மிகவும் தப்பாகத் தெரிகிறது. உடனடியாக ஊருக்குக் கடிதம் எழுது. நானும் உன் பேச்சைக் கேட்டு விளையாட்டுத் தனமாக இருந்து விட்டேன். பெரியவர்கள் பின்னால் நம்மைக் கோபித்துக் கொள்வார்கள்.''

''உஸ். பேசாமல் இருங்கள். கோபித்தால் கோபிக்கட்டும். ஒன்றும் எழுத வேண்டாம்'' என்று பிடிவாதமாகக் கூறினாள் நளினா.

ஒரு நாள் அதிகாலை நேரம். முதல் நாள் இரவு வலி கண்டு விட்டதால் நளினாவைப் பக்கத்து வீட்டுப் பெண்ணின் துணையுடன் நர்ஸிங் ஹோமில் சேர்த்து விட்டுத் திரும்பினான் சுரேந்திரன்.

மனம் சமாதானப்படவில்லை. நளினாவின் பெற்றோருக்கு என்ன பதில் சொல்வது என்று குழம்பினான். இனியும் காலம் தாழ்த்துவது தவறு என எண்ணி டெலிபோனில் நம்பரைச் சுழற்றினான்.

வெளியில் டாக்ஸியிலிருந்து மாமனார், மாமியார் இருவரும் மூட்டை முடிச்சுக்களுடன் உள்ளே நுழையவும் ஒரு நிமிடம் அவன் மூச்சே நின்று விட்டதைப் போன்ற உணர்ச்சி.

''வாருங்கள், வாருங்கள்'' என்று அவர்களை வரவேற்ற சுரேந்திரன், ''என்ன இது ஒரு கடிதம் கூடப் போடாமல் இப்படி.....'' என்று இழுத்தான்.

''ஆமாம், மாப்பிள்ளை. திடீர் வருகை தான்'' என்று சொல்லிவிட்டு, ''நளினி எங்கே?'' என்று கேட்டார்.

''நளினாவா? இருக்கிறாள்... நன்றாகத்தான் இருக்கிறாள்'' என்று தடுமாறினான்.

''என்ன குழறுகிறீர்கள்? நளினாவுக்கு என்ன?'' என்று பதறினார்கள் இருவரும்.

''அவளுக்குப் பிரசவ நேரம். நர்ஸிங் ஹோமில் சேர்த்திருக்கிறேன். இப்போது தான் உங்களுக்கு டிரங்கால் 'புக்' பண்ணிக் கொண்டிருக்கிறேன்'' என்று கூறவும், டெலிபோன் மணி அலறியது.

ஆவலுடன் ஓடிய சுரேந்திரனுக்கு நர்ஸிங் ஹோமில் இருந்து வந்த செய்தி தேனாக இனித்தது. ''உங்கள் மனைவிக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது'' என்ற செய்தி தான் அது.

தன் கணவனுடன் உள்ளே நுழைந்த தன் பெற்றோரைப் பார்த்ததும் ஆச்சரியம் தாங்கவில்லை நளினாவுக்கு.

''என்னம்மா நளினா, உன் மேல் எவ்வளவு ஆசை வைத்திருக்கிறேன். உனக்கு என்னென்னவோ செய்யத் துடித்துக் கொண்டிருந்தேன். ஒரு வரி எழுதக் கூடாதா? மாப்பிள்ளையைக் கேட்டால் விழிக்கிறாரே?'' என்றாள் தாய்.

தாய்க்குப் பதில் கூறாமல் நமட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டே தன் கணவனை அருகில் அழைத்தாள் நளினா.

''நம் குழந்தைக்கு நீங்கள் முதலில் சென்று ஒரு ஃபீடிங் பாட்டிலும் தேவையான இதர பொருட்களும் வாங்கி வாருங்கள். அம்மாவுக்குத் தெரிந்தால், குழந்தைக்குக்கூட நாமாக ஒரு சாமானும் வாங்க முடியாது. பேரனுக்குத் தேவையானவை முழுதும் இதற்குள் கொண்டு வந்து குவித்திருப்பாள்'' என்று தன் ரகசியத்தை வெளிப்படுத்தினாள்.

''நல்ல பெண்ணம்மா நீ. உனக்கு நாங்கள் எவ்வளவு வாங்கித் தந்திருந்தாலும், நாங்கள் வாங்கவே முடியாத ஒரு செல்லத்தைத்தான் நீ எங்களுக்குக் கொடுத்து விட்டாயே?'' என்று கலகலவென்று சிரித்துக் கொண்டே பேரனை மிகுந்த ஆவலுடன் குனிந்து பார்த்தார் அவள் தந்தை.



லண்டன் கச்சேரிகள்



பேர்லின் கலைவிழாவில் பங்கேற்கச் சென்றிருந்த திரு கே. வி. நாராயணசாமியும், திரு ரமணியும் அங்கிருந்து லண்டனுக்கும் சென்றனர். பாரதீய வித்யா பவன் லண்டன் கேந்திரத்தில் அவர்களுடைய கச்சேரிகள் நிகழ்ந்தன. கச்சேரிகளுக்கு வரவேற்பு மிக நன்றாக இருந்ததென்றும், இம்மு நல்தரக் கலைஞர்களின் இசையில் மெய் மறந்து ரசிகர்கள் ஈடுபட்டிருந்தனர் என்றும் பாரதீய வித்யா பவன் லண்டன் கேந்திரத்தின் நிர்வாகி திரு மத்தூர் கிருஷ்ணமூர்த்தி எழுதுகிறார். பக்கவாத்தியம் வாசித்துச் சிறப்பித்தவர்கள் பாலக்காடு ரகு, திருப்பாற்கடல் வீரராகவன்.


சிலர் ஒரு சிறந்த ஃபேனை வாங்குவதில் திருப்தி அடைவதில்லை

அவர் விரும்புவது அனைத்திலும் சிறந்த ஃபேன்—ராலிஃபேன் டீலக்ஸ்

கூடுதல் விலை கொடுத்தாலும், மிகச் சிறந்த ஃபேனையே வாங்கிட நீங்கள் தயாராக இருக்கும்போது, அதில் தனிப்பட்ட சிறப்புகளை எதிர்பார்ப்பதில் தவறில்லை. பொறி இயல் நுணுக்கச் சிறப்போடு உருவாக்கப்படும் ராலிஃபேன் டீலக்ஸ், பல்லாயிரம் மணி நேரம் ஓடிய பின்னும், அதன் செயலாற்றல் சீரான தன்மையோடு திகழ்கிறது.

- நூதன பிளேட் காண்டூர் அமைப்பு பரந்த சுற்றளவிற்குக் குளுமையான காற்றோட்டமளிக்கிறது.
- பிளேடுகள் கச்சிதமாகச் சமனிலைப் படுத்தப் பட்டிருப்பதால், மோட்டார் நெடுங்காலம் உழைக்கிறது.
- எந்தக் கோணத்திலும் ஆட்டங் கொடுக்காமல், சத்தமின்றி இயங்கும்படி ஸ்டாண்ட் சரிநிலைப்படுத்தப்பட்டுள்ளது.
- ஆதார பாகம் எடை குறைந்தது, எனினும் வலுவானது. அத்துடன் வேகத்தைக் கூட்டிக் குறைக்க, எளிதான பியானோ கீ ஸ்விட்ச்.
- தேர்ந்தெடுக்க 5 வண்ணங்கள்.

வேறெந்த ஃபேனும் இத்தகைய சொகுசான சுகம் தருவதில்லை!



U RTF 26 TAM

ராலிஃபேன் டீலக்ஸ்

கவர்ச்சி குன்றாமல் காலத்தை வென்று சுழல்வது!



அவர்கள் வருங்காலம்...

உங்களது பொறுப்பு

அவர்களின் வருங்காலத்தின் பாதுகாப்பிற்கு நீங்கள்
இன்றே சேமிக்க வேண்டும். அவர்கள்
எந்த வயதினராயிருந்தாலும் சரி, உங்கள்.
சேமிப்பை தொடங்க இதுவே தருணம். அவர்களின்
ஒளிமயமான எதிர்காலத்திற்கு இன்றே திட்டமிடுங்கள்.
லக்ஷ்மி விலாஸ் பேங்கின் பல திட்டங்களில் ஒன்றைத்
தேர்ந்தெடுங்கள். உங்கள் தேவைக்கேற்ற சீரிய திட்டங்கள்,
எளிதாகச் சேமிக்க, LVB-யின் சேவை.

LVB

லக்ஷ்மி விலாஸ் பேங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம்	நிர்வாக அலுவலகம்
கரூர் 639001	சென்னை 600 086

மணி ஆலே	D. வர்த்தமானன்
ஜெனரல் மேனேஜர்	சேர்மன்

Kripama/LVB/1002

"ஆறுகால்" ஸ்தோத்திரம் 16



ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி சங்கராசாரிய ஸ்வாமிகள்

சமம், தமம் என்பனவற்றை 'சமாதி ஷட்க ஸம்பத்து' என்பதாக ஆத்ம ஸாதகனுக்கு இருக்க வேண்டிய ஆறு ஸம்பத்துக்களில் நம் ஆசாரியாள் வைத்திருக்கிறார்.

'சம'த்தோடு சேர்ந்த நிலைதான் 'சாந்தி'; 'தம'த்தோடு சேர்ந்த நிலை 'தாந்தி' எனப்படும். இப்போது 'சாந்தி' என்ற வார்த்தை நம் எல்லோருக்கும் தெரிகிறது. 'தாந்தி' என்ற வார்த்தை அவ்வளவாகத் தெரியாது. மடத்து ஸ்வஸ்தி வசனம் தெரிந்தவர்களானால், அதிலே ஆசாரியாளைச் சொல்கிறபோது 'சாந்தி தாந்தி பூம்னாம்' என்று வருவதைக் கவனித்திருப்பீர்கள். "ஷட்பதீ" ஸ்தோத்திரத்தில் பகவத்பாதாள் பகவானிடம் சாந்தி, தாந்தி இரண்டையும் பிரார்த்திக்கிறார்.

விநய மனப்பான்மை என்பது இருந்தால் தான் இந்த இரண்டுமே வரும். அதனால் முதலில் 'அவிநயம் அபநய' என்று ஆரம்பித்தார். அப்புறம் 'விஷ்ணோ!' என்று கூப்பிட்டுப் பகவானைப் பக்கத்தில் நிறுத்தி வைத்துக் கொண்டு

தமய மன:
சமய விஷய ம்ருக த்ருஷ்ணாம்

என்கிறார். "மனஸுக்கு 'தாந்தி', 'தமம்' வேண்டும்; அதைப் பண்ணு. என் மனஸை அடக்கு. விஷய ஸுகம் என்கிற கானல் நீரைத் தேடி ஓடுகிற இந்திரியங்களுக்கு 'சாந்தி' வேண்டும்; அவற்றை அடக்கி, 'சம'த்தை உண்டு பண்ணு" என்கிறார்.

"தமய மன:" என்பதும், "சமய விஷய" என்பதும் இத்தனை நேரம் நான் சொன்னதிலிருந்து உங்களுக்குப் புரிந்திருக்கும். "ம்ருக த்ருஷ்ணா" என்று வருகிறதே, அது என்ன என்று சொல்கிறேன்.


"ம்ருக த்ருஷ்ணா" என்றால் "கானல் நீர்" என்று அர்த்தம். ஏன் அப்படி அர்த்தம் என்று சொல்கிறேன்: இதிலே 'ம்ருகம்', 'த்ருஷ்ணா' என்று இரண்டு வார்த்தைகள் இருக்கின்றன. 'மிருகம்' என்றால் விலங்கு என்பது பொது அர்த்தம். அதோடு கூட ஸம்ஸ்கிருதத்தில் 'மிருகம்' என்றாலே, விலங்கினத்தில் குறிப்பாக மான் என்ற ஓர் இனத்தை விசேஷமாகக் குறிக்கும். ஸம்ஸ்கிருத வார்த்தைகளைத் தமிழில் வழங்குகிறபோது சிலதில் அர்த்தத்தில் வித்தியாசம் ஏற்படுகிறது. தமிழில் மிருகம் என்றால் பொதுவான விலங்கினம் மட்டும்தான். ஆடு, மாடு, கழுதை, குதிரை, மான், புலி, சிங்கம் எல்லாமே நமக்கு மிருகம்தான். ஸம்ஸ்கிருதத்தில் இந்த அர்த்தம் இல்லாமலில்லை. ஆனாலும் மானை மட்டும் குறிப்பாக மிருகம் என்று சொல்வது ஸம்ஸ்கிருத வழக்கு. "ம்ருக பாணி" "ம்ருகதரன்" என்றெல்லாம் பரமசிவனுக்கு ஏன் பெயர் இருக்கிறதென்றால், அவர் கையிலே ஒரு மானைப் பிடித்துக்கொண்டிருப்பதால்தான். இது மாதிரி இன்னொரு வார்த்தை "பசு" என்பது. "பசு" என்றால் தமிழில் மாடு, ஆனினம் ஒன்றைத்தான் நினைப்போம். ஆனால் ஸம்ஸ்கிருதத்தில் "பசு" என்றால் அது ஆடு, மாடு, குதிரை, கழுதை, புலி, சிங்கம், மான் ஆகிய எந்த விலங்கையும் குறிக்கும். ஆனாலும் மாட்டை விசேஷமாகக் குறிக்கும். மனித ஜீவனையும் 'பசு' என்று சொல்வார்கள். அதனால்தான் காளை மாட்டை வாஹனமாக வைத்துக் கொண்டிருப்பதோடு, ஜீவாத்மாவுக்கெல்லாம் மேலான பரமாத்மாவாகவும் இருப்பதால் ஈச்வரனைப் "பசுபதி" என்பது. அவர் ம்ருகபாணி, பசுபதி இரண்டாகவும் இருக்கிறார்.

மானினத்தை மட்டும் விசேஷமாகக் குறிப்பிடும் "ம்ருக" என்ற சொல்லால் நாம் எல்லாப் பிராணிகளையும் குறிப்பிடுகிறோம் என்றால், இதற்கு மாறாக எல்லாப் பிராணிகளையும் குறிப்பிடுகிற "பசு" என்ற சொல்லால் மாடு ஒன்றை மட்டுமே குறிப்பிடுகிறோம்.

இங்கே "ம்ருக த்ருஷ்ணா" என்கிறபோது 'ம்ருகம்' என்றால் 'மான்' என்று அர்த்தம். 'த்ருஷ்ணா' என்றால் 'தாகம்', 'நீர் வேட்கை' என்று அர்த்தம். Thirst என்ற வார்த்தையும் 'த்ருஷ்ணா'விலிருந்துதான் வந்திருக்கும் போலிருக்கிறது. "ம்ருக த்ருஷ்ணா" என்றால் "மானின் தாகம்" என்று அர்த்தம்.

மானின் தாகத்துக்கும் கானல் நீருக்கும் என்ன சம்பந்தம்? அதைக் கொஞ்சம் பார்ப்போம்.

(தொடரும்)



[1932ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய உரைகள், ஸ்ரீமுகங்கள், கட்டுரைகளிலிருந்து தொகுத்தது]



dCA/GL/39 M TAM.

பார்த்திபன் கனவு

(அத்தியாயம் 16

ஆற்றங்கரையில்

குந்தவியின் முகத்தில் தோன்றிய மாறுதலை மகேந்திரன் கவனித்தான்.

''என்ன தங்காய்! என்ன!'' என்றான்.

தனித்து வந்த குதிரையை வெறித்து நோக்கிய வண்ணம் இருந்தாள் குந்தவி. அவள் வாயிலிருந்து வார்த்தை ஒன்றும் வரவில்லை. இதைக் கவனித்த மகேந்திரன், ''தங்காய்! அதோ வருகிறது குதிரைதானே? புலி, சிங்கம் அல்லவே? எதற்காக இப்படிப் பயப்படுகிறாய்?'' என்று கேட்டான்.

குந்தவிக்கு ரோஷம் பிறந்தது; பேச்சும் வந்தது. ''புலி, சிங்கமாயிருந்தால்தானென்ன, அண்ணா! — நீ பக்கத்திலே இருக்கும்போது?'' என்றாள்.

''பின் ஏன் இப்படி வெறித்துப் பார்க்கிறாய்! — பேய் பிசாசுகளைக் கண்டதைப் போல!''

''அண்ணா! அந்தக் குதிரை யாருடைய குதிரை தெரியுமா?''

''தெரியாது; யாருடையது?''

''அப்பாவினுடையது!''

''என்ன?''

''ஆமாம், இதேமாதிரி உயர் ஜாதிக் குதிரைகள் இரண்டு அப்பாவிடம் இருக்கின்றன. இது புஷ்பகம்; இன்னொன்று பாரிஜாதம்.''

அமரர் கல்கி

''அப்படியா? இது எப்படி இங்கே தெறிகெட்டு வருகிறது? அப்பாவிடம்தான் நாம் காஞ்சியில் விடைபெற்றுக்கொண்டு கிளம்பினோமே? அவர் இந்தக் குதிரையில் வந்திருக்க முடியாது.''

''செண்பகத் தீவின் இரத்தின வியாபாரிக்கு அப்பா தம் குதிரையைக் கொடுத்ததாகச் சொன்னார்.''

''ஓஹோ!''


இதற்குள் குதிரை மிகவும் நெருங்கி வந்து விட்டது. மகேந்திரன் கட்டளைப்படி உடன் வந்த வீரர்களில் ஒருவன் குதிரையைப் பிடித்துக் கொண்டான். அதைத் தன்னருகில் வரும்படி குந்தவி கூறி, அதன் முதுகைத் தடவிக் கொடுத்தாள். குதிரை உடம்பைச் சிலிர்த்துக் கொண்டு கனைத்தது. பிறகு அக் குதிரையையும் பிரயாணக் கோஷ்டியோடு கொண்டு போனார்கள்.

''அண்ணா! அந்த இரத்தின வியாபாரிக்கு என்ன நேர்ந்திருக்கும்?'' என்று குந்தவி மிக்க கவலையுடன் கேட்டாள்.

இரத்தின வியாபாரியை விக்கிரமன் என்பதாகக் குந்தவி சந்தேகிக்கிறாள் என்னும் விஷயம் மகேந்திரனுக்குத் தெரியாது. ஆகையால், அவன் அலட்சியமாக, ''பல்லவ சக்கரவர்த்தியைச் சுமந்த குதிரை கேவலம் ஒரு வியாபாரியைச் சுமக்குமா? எங்கேயாவது கீழே தள்ளிக் குழியும் பறித்துவிட்டு வந்திருக்கும்!'' என்று கூறிச் சிரித்தான்.

குந்தவியின் உள்ளம் துடித்தது. ஆனால் ஒரு நிமிஷத்துக்கெல்லாம் ஓர் ஆறுதலான எண்ணமும் உண்டாயிற்று. உண்மையிலேயே இந்தக் குதிரை அவனைத் தள்ளிவிட்டு வந்திருக்குமானால் அவன் சோழ ராஜகுமாரனாக இருக்க மாட்டான். சாதாரண வர்த்தகனாய்த்தான் இருப்பான். ஆனால் அந்த இரத்தின வியாபாரியின் தீரத்தைப் பற்றியும் போர்த் திறமையைப் பற்றியும் அப்பா ரொம்பச் சொன்னாரே? ஐயோ! அவனுக்கு என்ன நேர்ந்திருக்கும்? — இவ்வளவு அறிவுள்ள பிராணியான குதிரைக்குப் பகவான் பேசும் சக்தி மட்டும் கொடுக்காமல் போய்விட்டாரே? அந்தச் சக்தி இருந்தால் இரத்தின வியாபாரிக்கு என்ன நேர்ந்தது என்ற இரகசியத்தை அது வெளியிடுமல்லவா? — புஷ்பகத்துக்குப் பேசும் சக்தி திடீரென்று ஓர் அற்புதத்தினால் வந்துவிடக் கூடாதா என்று ஆசைப்பட்டவளைப்போல் குந்தவி அதன் முதுகை அடிக்கடி தடவிக் கொடுத்துக் கொண்டு வந்தாள்.

இப்படிப் பிரயாணம் நடந்துகொண்டிருக்கையில் கொஞ்ச நேரத்துக்குப்




பிறகு சுற்றுப்புறக் காட்சியின் தோற்றத்தில் ஒரு மாறுதல் காணப்பட்டது. தரை ஈரமாக இருந்தது. அங்கங்கே பள்ளமான இடங்களில் நீர் தேங்கியிருந்தது. மரங்கள் பனிச்சென்று இருந்தன. காற்றும் குளிர்ந்து வந்தது.


''தங்காய்! நேற்று இங்கெல்லாம் பெரு மழை பெய்திருக்கிறது. காஞ்சியில் ஒரு துளிக்கூட விழவில்லையே!'' என்றான் மகேந்திரன்.

அதைப் பற்றியேதான் குந்தவியும் சிந்தித்துக் கொண்டிருந்தாள். ஒருவாறு அவளுக்கு உண்மை புலப்பட ஆரம்பித்தது. நேற்று மாலை திடீரென்று இந்தப் பக்கத்தில் பெரும்புயலும் மழையும் அடித்திருக்கிறது. அதில் புஷ்பகமும் இரத்தின வியாபாரியும் அகப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். குதிரை எப்படியோ தப்பிப்பிழைத்து வந்திருக்கிறது. இரத்தின வியாபாரி—ஐயோ! பாவம்! அவனுக்கு என்ன நேர்ந்ததென்பது வழியில் எங்கேயாவது தெரிய வருமா? விபத்து நடந்த இடத்தைப் புஷ்பகம் காட்டுமா? ஒருவேளை உயிர்போன அவனுடைய உடலைக் காணும்படியாக நேருமோ?.. சிவ சிவ!.... அந்தச் சகிக்க முடியாத நினைப்பினால் குந்தவி கண்களை மூடிக் கொண்டாள்.

இவ்விதம் ஈரமானபிரதேசங்கள் வழியாக அரைக் காத தூரம் போனபிறகு, சூரியன் அஸ்தமிக்க ஒரு







பள்ளி, கல்லூரி ஆசிரியர்களுக்கு

விடுமுறை தொடங்குகிறது. உங்களுக்குக் கொஞ்சம் அவகாசம் கிடைக்கும்.

கல்வி போதிக்கும் முறையில் நீங்கள் ஏதாவது புதிய பரிசோதனை செய்து வெற்றி கண்டீர்களா? உங்கள் நகரில் அல்லது கிராமத்தில் சமூக நலன் பயக்குமாறு ஏதேனும் செய்து நற்பெயர் பெற்றீர்களா? ஏதேனும் ஓர் உத்தியைக் கையாண்டு வழி தவறிய மாணவன் ஒருவனைத் திருத்தினீர்களா?

உங்கள் அனுபவத்தில் ஏற்பட்ட சுவையான சம்பவத்தைச் சுருக்கமாக எழுதி அனுப்பினால் பிரசுரிக்கிறோம்.

ஆசிரியர் சமூகமே அதனால் பயனடையும், பெருமையுறும்.

முடிவு தேதி: மே 31உ

சன்மானம் உண்டு; கடிதப் போக்குவரத்து கிடையாது; பிரசுரத்துக்கு ஏற்காத கடிதக் கட்டுரைகளைத் திருப்பி அனுப்புவதற்கில்லை. உறையின் மேல் ''கல்விப்பணி'' என்று குறிப்பிடவும்.

ஆசிரியர், கல்கி, சென்னை - 600 031

நாழிகைப் பொழுது இருக்கும் சமயத்தில் காட்டாற்றங்கரைக்கு வந்து சேர்ந்தார்கள். நேற்று மாலை அந்தக் காட்டாறு அளித்த காட்சிக்கு இப்போதைய காட்சி நேர்மாறாயிருந்தது. நேற்று அங்கே ஊழிக் காலத்து மகாப் பிரளயத்தைப் போல, கண்ணுக்கு எட்டிய தூரம் ஒரே ஜலப் பிரவாகமாய், பிரும்மாண்டமான சுழல்களுடன் 'ஹோ' என்ற பேரிரைச்சலுடன் அலை மோதிக் கொண்டு போன வெள்ளம் பார்க்கப் பீதிகரமான காட்சியை அளித்தது.

இன்று அதே பிரதேசம் பிரளயத்துக்குப் பிறகு ஏற்படும் புது உலக சிருஷ்டியின் நவ மோகனத்தைப் பெற்றிருந்தது. காட்டாற்றின் மத்தியில் முழங்காலளவு ஜலம் சலசலவென்ற சத்தத்துடன் போய்க் கொண்டிருந்தது. அஸ்தமன சூரியனின் பொற் கிரணங்கள் பசுமரக் கிளைகளின் வழியாக வந்து ஓடும் ஜலத்தில் தவழ்ந்து விளையாடி வர்ண ஜாலங்களைக் காட்டின. நதிக் கரைப் பறவைகள் மதுர கானம் செய்து கொண்டு மரங்களிலுள்ள கூடுகளை நோக்கி வந்தன. அழகும், அமைதியும், ஆனந்தமும் அங்கே குடிகொண்டிருந்தன.

ஆனால் குந்தவியின் உள்ளத்திலோ நேற்று அங்கே அடித்த புயலும் மழையும் இப்போது குமுறிக் கொண்டிருந்தன. நேற்று அந்தக் காட்டாற்றில் பெரு வெள்ளம் பெருகியிருக்க வேண்டும் என்று அவள் தெரிந்துகொண்டாள். நதிக் கரை மரங்களின் அடிமரத்தில் தண்ணீர்ப் பிரவாகத்தின் புது அடையாளம் நன்றாகப் பதிந்திருந்தது. தாழ்ந்த கிளைகளில் வெள்ளத்தில் வந்த வைக்கோல் முதலியவை சிக்கிக்கொண்டிருந்தன. காட்டாற்று வெள்ளமாதலால் மள மளவென்று பெருகியிருக்க வேண்டும். இரத்தின வியாபாரியின் கதியை ஒருவாறு குந்தவி இப்போது ஊகித்தாள். காட்டாற்று வெள்ளத்தின் சக்தியை அறியாமல் அவன் நதியில் இறங்கி யிருப்பான். அல்லது அவன் இறங்கிய பிறகு பிரவாகம் திடீரென்று பெருகி யிருக்கும். குதிரை எப்படியோ தப்பிக் கரையேறியிருக்கிறது. பாவம்! அது வெகு நேரம் கரையிலேயே இரத்தின வியாபாரியை எதிர்பார்த்துக் காத்திருந்திருக்கும். அவன் கரைக்கு வராமல் போகவே காஞ்சியை நோக்கிக் கிளம்பியிருக்கிறது. இரத்தின வியாபாரி— ஐயோ! — பிரவாகத்துக்கு இரையாகியிருக்க வேண்டும். அடாடா! தாயாரைப் பார்ப்பதற்காக அவசரமாக உறையூருக்குப் போவதாகச் சக்கரவர்த்தியிடம் சொன்னானே? அவனுக்கு இந்தக் கதியா நேர வேண்டும்?..

இப்படிக் குந்தவி எண்ணமிட்டுக் கொண்டிருக்கையில் பல்லக்கு நீரோட்டத்தின் அருகில் வந்தது. எல்லோரும் ஜலத்தில் இறங்கினார்கள். ஆனால் புஷ்பகம் மட்டும் நீரில் இறங்கத் தயங்கிற்று. நதிக் கரைக்கு வந்ததிலிருந்தே அதனுடைய தயக்கம் அதிகமாக இருந்ததை எல்லோரும் கவனித்தார்கள். அதைப் பிடித்து வந்த போர்வீரன் நீரோட்டத்தில் இறங்கும்படியாக அதைப் பலவந்தப்படுத்தினான். குதிரையும் இறங்கிற்று. அவ்வளவுதான்; உடனே அது ஒரு திமிறு திமிறிக் கொண்டு போர்வீரனுடைய பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டது. வந்த கரையை நோக்கித் திரும்பி ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து ஓடியது. கரையை அடைந்தும் அது நிற்கவில்லை. வேகம் இன்னும் அதிகமாயிற்று. வில்லிலிருந்து கிளம்பிய இராம பாணம் என்பார்களே, அது மாதிரி நாலு கால் பாய்ச்சலில் பறந்து ஓடி எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே காஞ்சி செல்லும் சாலையில் கண்ணுக்கு எட்டாத தூரம் வரையில் சென்று மறைந்தது.

''புஷ்பகம் என்று அப்பா பெயர் வைத்தது சரிதான். தரையில் அதன் கால்கள் தொட்டதாகவே தெரியவில்லையே!'' என்றான் மகேந்திரன்.

(தொடரும்)



daCunha/CS/20 N TAM

ஸ்ரீமத் பகவத்கீதையும் ஸ்ரீ சங்கர பகவத் பாதாசாரியார் அருளிச்செய்த பாஷ்யமும்

பகவான் தமது பெருமையை விளக்கிக் காட்டுவதற்கு விசுவரூபம் எடுப்பது போல் அவருடைய உபதேசமான பகவத் கீதையும் பாஷ்யங்களின் வடிவிலும், அவற்றின் பற்பல பதிப்புக்களின் மூலமும் விசுவரூபம் எடுக்கிறது எனலாம்.

உலக மொழிகளிலெல்லாம் எண்ணிறந்த பதிப்புக்கள் வெளியாகி யிருந்த போதிலும் ஆதி சங்கரருடைய உரைக்குத் தனிச் சிறப்பு உண்டு. அவ்வுரையின் தமிழாக்கம் சிறந்த வேதாந்த விற்பன்னரான அமரர் பெரிய குளம் த. சுந்தரராஜ சர்மா அவர்களால் எழுபது ஆண்டுகளுக்கு முன் முதன் முதலாக வெளியிடப்பட்டது. தற்போது அதன் புதிய பதிப்பு பிரசுரமாகி யுள்ளது. கடினமான இடங்களில் குறிப்புரைகள் தரப்பட்டிருக்கின்றன. முதல் நூலிலுள்ள செறிவும் பொலிவும், கம்பீரமும், நயமும் இம்மொழி பெயர்ப்பில் பிரதிபலிக்கின்றன. 'கர்மத்தில் அகர்மத்தையும், அகர்மத்தில் கர்மத்தையும் எவன் காண்கிறானோ, அவனே மனிதருளுள் புத்திமான்' 'தானே தனக்கு உறவினன், தானே தனக்குப் பகைவன்' என்று இவ்வாறான புதிர் போன்ற வாக்கியங்களுக்கு அருமையான விளக்கங்களை இங்குபோல் எங்கும் காண முடியாது.

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

சுவாமி விவேகானந்தர் நிறுவிய ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் தமிழக மக்களுக்குப் பல விதங்களிலும் தொண்டாற்றி வருகிறது. அதன் ஓர் அம்சமாகத் திகழ்வது ''ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்''.

கடந்த ஐம்பத்தேழு ஆண்டுகளாகத் தமிழகத்தின் சமய வளர்ச்சிக்கு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் சார்பாக 'விஜயம்' தொண்டு புரிந்து வருகிறது. தமிழில் வெளிவரும் இம்மாதப் பத்திரிகை, ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் குரலாக விளங்கி, மத உண்மைகளைப் புகட்டுகிறது.

மகான்களின் வாழ்க்கையில் நடைபெற்ற சுவையான நிகழ்ச்சிகள், அன்றட



படித்தோம், சொல்கிறோம்!

பகவானுடைய விசுவரூபத்தை நம்முடைய ஊனக் கண் கொண்டு பார்க்காமல், அவர் தரும் ஞானக் கண் கொண்டு பார்க்க வேண்டும் என்பதுபோல் பகவத்கீதையின் உட்கருத்தையும் நம்முடைய சிற்றறிவைக்கொண்டே பார்க்க முயலாமல் ஆசாரியர்களுடைய பாஷ்யத்தைக் கொண்டு அறிய முயல வேண்டும். அதற்கு இந்நூல் பெரிதும் உதவியாயிருக்கும்.

திருக்கோவிலூரில் சமீப காலம் வரையில் வாழ்ந்த ஸ்ரீ ஞானானந்த குரு கீதைக்கு நடமாடும் உரை போலிருந்தவர். அவர் தம்முடைய வாழ்க்கையாலும், உபதேசத்தாலும் ஆயிரக் கணக்கான ஆடவர்க்கும் பெண்டிர்க்கும், இந்நாட்டினருக்கும் பிற நாட்டினர்க்கும் ஆன்ம ஞானத்துக்கு வழி காட்டியவர். அவரைப் பின்பற்றிய சந்நியாசிகள் இதை வெளியிடுவது மிகவும் பொருத்தமாகும். நூல் மிகவும் அழகாக அச்சிட்டுப் பைண்டு செய்யப்பட்டுள்ளது. விலையும் அதிகமில்லை. தமிழ் நாட்டில் ஆன்ம வாழ்க்கையில் ஆர்வமுள்ளவர்கள் எல்லோரும் இந்நூலை வரவேற்றுப் பயன் பெறுவார்கள் என்பதில் ஐயமில்லை.

— அண்ணா

தமிழ் மொழிபெயர்ப்பு: ஸ்ரீ த. சுந்தரராஜசர்மா, வெளியிடுபவர்கள்: சந்நியாஸிகள் ஸ்ரீ ஞானானந்த தபோவனம், திருக்கோவிலூர், பக்கங்கள் 482, விலை ரூ. 17-50

வாழ்க்கையில் மதத்தின் பங்கும் பயனும், சாஸ்திரங்களின் உட்பொருள் விளக்கங்கள், ஆத்ம தத்துவம் குறித்த ஆராய்ச்சி, வேதாந்தம், சித்தாந்தம், சமயசமரசம், சுவையான தத்துவக் கதைகள், உபநிஷத உண்மைகள், சைவ வைணவக் கருத்துக்கள் ஆகிய இத்தனையும் விஜயத்தில் இடம் பெற்று 'இராமகிருஷ்ண மணம்' கமழ்கிறது.

தற்கால மக்களுக்கு ஏற்ற எளிய நடையில் கட்டுரைகள் எழுதப் பெறுகின்றன.

ஆண்டுக்கு ஒரு முறை இந்தப் பத்திரிகையின் சிறப்புமலர் வெளிவருகிறது. சந்தாதாரர்களுக்கு அதற்கென தனி விலை இல்லை. இப் பத்திரிகையின் சந்தாதாரர்கள், சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் வெளியீடுகளை ஐந்து சத விகித சலுகையில் வாங்கலாம்.

ஆண்டு சந்தா: ரூ. 7—00; ஆயுள் சந்தா ரூ. 100—00; தனிப் பிரதி 0—70 காசு.

முகவரி: ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம், ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்; மயிலாப்பூர், சென்னை-600 004.

—பிரும்மச்சாரி நிரஞ்சன சைதன்யா

கோபல்ல கிராமம்

இருநூறு அல்லது முந்நூறு ஆண்டுகளுக்கு முன் தெலுங்கு நாட்டில் நாயக்கர்

நடுவில் ஓர் அழகிய பெண் இருந்தாள். அவள் அழகில் மயங்கி ஒரு முஸ்லிம் மன்னன் அவளை மணந்துகொள்ள விரும்பினன். வேறு வழியின்றி அவன் விருப்பத்துக்கு இணங்கி, அவனுக்குத் தன் பெண்ணை மணம் முடிக்கச் சென்ற இடத்தில், அம்மன்னன் மாட்டிறைச்சி வைத்து அவர்களுக்கு விருந்து படைக்க ஏற்பாடு செய்திருக்கிறன் என்று தெரிந்தது! உடனே ரகசியமாக அத்தனை பேரும் அவ்விடத்தை விட்டுப் பெயர்ந்து, தமிழ் நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் கரிசல் காட்டில் காடு திருத்தி நாடாக்கி வாழ்ந்தார்கள். அவர்கள் சந்ததியார் இன்னும் இருக்கிறர்கள். இப்படி உருவாகிய ஊர் தான் கோபல்ல கிராமம்.

கோபல்ல கிராமத்து நாயக்கர் மக்களிடையே நிலவி வரும் பலப் பல கர்ண பரம்பரைக் கதைகளையும், வாழ் முறைகளையும் தனியான குண நலன்களையும் தொகுத்து ஒரு புது வகையான இலக்கியம் படைத்திருக்கிறர் கி. ராஜநாராயணன். ஆம், இது நாவலுமல்ல; கட்டுரையுமல்ல. மக்களின் உயிர்த் துடிப்புள்ள வாழ்க்கையைப் பார்க்கிறேம். இதுவரையில் கேட்டிராத ரஸமான நகைச்சுவைக் கதைகளைப் படிக்கிறேம். சில இடங்களில் ஆசிரியர் வசன நடையில் கவிதை நயம் துலங்குகிறது. சில இடங்களில் வாக்கிய அமைப்பு நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது.

இத்தகைய அபூர்வ இலக்கியப் படைப்பைப் பிரசுரித்துத் தமிழிலக்கியத்துக்கு அரும் பணியாற்றியுள்ள வாசக வட்டத்தினர் தமிழ் தெரிந்த நல்ல பதிப்பாசிரியர்களைக் கொண்டிருந்தால் பக்கத்துக்குப் பக்கம் காணப்படும் பிழைகள் தவிர்க்கப்பட்டிருக்கலாம்.

ஆசிரியர்: கி. ராஜநாராயணன், பிரசுரம்: வாசகர் வட்டம், 14, தணிகாசலம் செட்டித் தெரு, தியாகராய நகர், சென்னை-600017 விலை ரூ. 11-50.

இந்திய சுதந்திரப் போர்

நான் வீட்டுக்கு மூத்த பிள்ளை. அதனால் என் தந்தை என்பேரில் தனிப் பாசமும் வாஞ்சையும் வைத்திருந்தார். ஆஷ் கொலை வழக்கில் என் தந்தை குற்றவாளி தரப்பில் பதின்மூன்ருவது சாட்சி. நீதிபதி சாட்சிக் கூண்டில் ஏறி நின்ற என் தந்தையைப் பார்த்து, ''சம்பாதித்துக் குடும்பப் பொறுப்பை ஏற்க வேண்டிய உங்கள் ஜேஷ்ட புத்திரன் அரசாங்கத்துக்கு விரோதமாய்ச் செயல்படுவதை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா? ஏன் தடுக்கவில்லை?'' என்று வினவினர்.


உடனே என் தந்தை, ''என் மகன் சம்பாத்தியம் எனக்கொன்றும் பெரிதல்ல. அவனுடைய தேசத் தொண்டைப் பெரிதாக மதிக்கிறேன். அதனால் பெருமையும் அடைகிறேன்'' என்று வீரத்துடன் பதிலளித்தார்.

மேற்படி நிகழ்ச்சியைக் கூறியவர் இன்று கர்நாடக மாநிலத்தில் நந்திமலைக்கு அண்மையில் ஆசிரமம் அமைத்துக் கொண்டு துறவு வாழ்வு நடத்தும் சாது ஓம்கார்தான். யார் இந்தச் சாது ஓம்கார்? இவர்தான் நீலகண்ட பிரம்மச்சாரி, திருநெல்வேலி புரட்சிக் குழுவின் தலைவர்.

ஆஷ் கொலை வழக்கில் முதல் எதிரியாக விசாரிக்கப்பட்டவர் நீலகண்ட பிரம்மச்சாரி தான். நீலகண்ட பிரம்மச்சாரியின் சாகஸச் செயல்களை இன்றும் திருநெல்வேலிச் சீமையில் பழம் தேசபக்தர்கள் கதை கதையாகச் சொல்வார்கள். ஆனல் ஆரம்பத்தில் குறிப்பிட்ட நிகழ்ச்சி நீலகண்ட பிரம்மச்சாரி மட்டுமின்றி அவரது தந்தையும் எப்படிப்பட்ட தேசபக்தராக இருந்திருக்கிறர் என்பதை நமக்குக் காட்டுகிறது. இப்படிப் பெரும்


கி. ராஜநாராயணன்

ராமகிருஷ்ண மடத்தில் பூஜை அறை.



''இந்திய சுதந்திரப் போர்'' — மேலட்டை.





அட்டைப்பட விளக்கம்:

முதல் மூவர்



வித்யா



வத்ஸலா

''எனது சகோதரன் ராஜகோபாலனுக்கு டேபிள் டென்னிஸ் ஆடத் தெரியும். அவன்தான் எனக்கு டேபிள் டென்னிஸ் மட்டை வாங்கி வந்து தந்தான். அதிலிருந்து அந்த ஆட்டத்தில் எனக்கு ஆர்வம் பிறந்தது. ஆறு மாத காலம் டேபிள் டென்னிஸ் 'கோச்' திருவேங்கடத்திடம் சிறந்தையாகப் பயிற்சி பெற்றேன்!'' என்று தாம் டேபிள் டென்னிஸ் ஆடத் தொடங்கிய விதத்தை விளக்குகிறார் அட்டைப் படத்தில் காட்சி தரும் குமாரி ராஜலக்ஷ்மி.

''விளையாட்டுப் பயிற்சியினால் உங்களுக்கு விளைந்தது நன்மையா தீமையா?''

''நான் எஸ். ஐ. ஈ. டி. கல்லூரியில் பி.ஏ. பொருளாதாரப் பட்டம் பெற்றேன். எனது டேபிள் டென்னிஸ் விளையாட்டுத் தேர்ச்சிக்காகவே சுங்க இலாகாவில் எனக்கு உத்தியோகம் கிடைத்தது. இந்த நன்மை போதாதா?'' என்று கேட்கிறார் குமாரி ராஜலக்ஷ்மி.

அலகாபாத்தில் சமீபத்தில் நடைபெற்ற முப்பத்தெட்டாவது தேசிய டேபிள் டென்னிஸ் போட்டியில் தமிழக ஆட்டக்காரிகளான ராஜலக்ஷ்மியும் காஞ்சனாவும் குவார்ட்டர் ஃபைனல் ஆட்டம் வரை வந்து ஆடினர். குவார்ட்டர் ஃபைனலில் மகாராஷ்டிரக் குழுவிடம் தோற்றனர்.

தமிழகப் பெண்மணிகள் டேபிள் டென்னிஸ் வரிசையில் முதல் இடம் பெறுபவர் குமாரி பி. வத்ஸலா. இவர் கீழ்ப்பாக்கம் வைத்தியக் கல்லூரி நான்காவது வருஷ மாணவி. இரண்டாவது இடத்தைப் பெற்றிருப்பவர் குமாரி பி. வித்யா. இந்தச் சிறுமி ஸ்டெல்லா மேரி கல்லூரியில் பி. யூ. ஸி. மாணவி. குமாரி ராஜலக்ஷ்மி தமிழக டேபிள் டென்னிஸ் வீராங்கனைகளுள் மூன்றாவது இடத்தை வகிக்கிறார்.

''டேபிள் டென்னிஸ் ஆட்டத்தில் ''Pen hold grip'' ''Shake hand grip'' என்று இரு வகை 'பிடி'களுண்டு. ஜப்பான், சீன ஆட்டக்காரர்கள் இந்த 'Pen hold grip' முறையில் தேர்ச்சி பெற்று உலக வல்லுநர்களாகத் திகழ்கிறார்கள். இந்திய நாட்டில் 'Shake hand grip' விளையாட்டு முறையே பிரபலமாயிருக்கிறது'' என்கிறார் தமிழக டேபிள் டென்னிஸ் காரியதரிசி வி. டி. துரைராஜ். - குண்டுமணி

மேலட்டை வண்ணப்படம் எடுத்தவர்: எச். நாராயணன்.

தேசபக்தப் பரம்பரை நம் நாட்டில் 1757ம் ஆண்டிலிருந்தே அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடி வந்திருக்கிறது. ஜான்ஸி ராணி லட்சுமி பாய், தாந்தியா தோபே, தியாகி மங்களபாண்டே முதலியவர்களும் பின்னர் காங்கிரஸ் மகாசபை தோன்றிய பிறகு திலகர், காந்தி மகான் முதலியோர் தலைமையில் நடைபெற்ற இயக்கங்களில் ஈடுபட்ட பெரியோர்களும் பட்ட கஷ்டநஷ்டங்கள், புரிந்த தியாகங்கள் எல்லாம் பாரத நாட்டின் சுதந்திர வரலாறு ஆகும்.

திருச்சி ஜில்லா சுதந்திரப் போராட்ட வீரர்கள் காங்கிரஸ் கமிட்டியார், பாரத நாட்டு சுதந்திர வரலாற்றையும் அதனில் தமிழ் நாட்டின் — திருச்சி ஜில்லாவின் முக்கிய பங்கையும் மிக அழகாகத் தொகுத்து ஆயிரம் பக்கங்கள் கொண்ட நூலாக வெளியிட்டிருக்கிறார்கள். சாது ஓம்கார் அவர்களைச் சந்தித்து அவர் வாய்மொழியாகவே அவர் வாழ்க்கை வரலாற்றைக் கேட்டு எழுதப்பட்டுள்ள கட்டுரை எங்கும் கிடைத்தற்கரிய பொக்கிஷம். வேதாரண்ய உப்புச் சத்தியாக்கிரகத்தைப் பற்றிய கட்டுரையும் அருமையானதொன்று. திருச்சி சிறையிலிருந்த தேசத் தலைவர்களைப் பற்றி, கல்கி அவர்களின் ''மூன்று மாதக் கடுங்காவல்'' என்ற நூலிலிருந்து சுவையான பகுதிகள் தேர்ந்தெடுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. பாரதிதாசன், பாரதியாரைச் சந்தித்தது பற்றிய கட்டுரை மிகச் சுவையானது.

''இந்நூலிலுள்ள வரலாறுகளையும் விவரங்களையும் சேகரித்து அவற்றைத் தொகுத்துப் பிரசுரிக்க எவ்வளவு முயற்சி எடுக்கப்பட்டிருக்க வேண்டுமென்று நினைக்கும்போது நாம் ஆச்சரியப்படாமலிருக்க முடியாது. தமிழ் நாட்டில் ஒவ்வொரு வீட்டிலும் இந்தப் புத்தகம் இருக்க வேண்டும்'' என்று ஸ்ரீ க. சந்தானம் கூறியிருப்பதற்கு மேல் சிறப்பித்துச் சொல்வதற்கு ஒன்றுமில்லை. இந்நூலைத் தயாரித்த ஆசிரியர் அரியலூர் எஸ். சபாபதி தமிழ் மக்களின் பாராட்டுக்குரியவராகிறார். — எஸ். வி. எஸ்.

கிடைக்குமிடம்: பழனியப்பா பிரதர்ஸ், தெப்பக்குளம், திருச்சி - 620 002; விலை: ரூ. 50.00.

குடும்பம், நீதிமன்றம் இரண்டிலும் வி. ஆர். தம் இதயத்தைப் பறி கொடுத்திருந்தாலும் அவரது ஆன்மா முழுவதையும் அவை ஆக்கிரமித்துக் கொண்டு விடவில்லை. அவரது உணர்ச்சிகள் அவரையும் அறியாமல் இந்தியாவின் அரசியல் நிலையுடன் பின்னிக் கிடந்தன. அதனைத் தவிர்க்க அவரால் முடியவில்லை. தேசத்தின் கௌரவத்தையும் பெருமையையும் கருதும்போது அதனை விடுதலை பெறச் செய்ய வேண்டும்தான். ஆனால் அது நடக்கிற காரியம்தானா?

ஜப்பான் ருஷ்யாவை எதிர்த்துப் போரிட்டு வெற்றி பெற்று வந்த தருணத்தில் — தமது இருபத்தைந்து, இருபத்தாறும் வயதுகளில் — அங்கே கூடியவர்களிடம், 'காந்தி உருவத்தில் சிறியவர் ஆனால் அவர் உள்ளம், சேலத்திலிருந்து நீங்கள் பார்க்கும் சேர்வராயன் குன்றுகளை விடப் பெரிது' என்று சொன்னார்.''— இப்படி ஆர். வி. கிருஷ்ணய்யர் எழுதியிருக்கிறார்.[3]


இதன் பிறகு ஒரு சமயம் வி. ஆர். தமது நண்பர் நரசிம்மய்யர் மேஜை மீதிருந்த—ஹென்றி தோரோ எழுதிய ''சட்ட மறுப்பு'' (Civil Disobedience) என்ற நூலை யதேச்சையாகப் பார்த்து விட்டு படிப்பதற்குப் பெற்றுச் சென்றார். அந்த நூல் மிக சுவாரஸ்யமாக இருக்கக் கண்டார்.[4] காந்தி நடைமுறையில் செய்து வந்த காரியங்களுக்

ராஜாஜி

வாழ்க்கை வரலாறு

வி. ஆர். ஆயுதப் புரட்சி பற்றி எண்ணிப் பார்த்ததுண்டு. ஆனால் பிரிட்டிஷ் அரசைப் போர்க்களையில் வெற்றி கொள்ள முயல்வது நடக்காத காரியம்![1] என்று சீக்கிரமே புரிந்து போயிற்று.

1908—9-ல் வெடிகுண்டு தாசர்கள் பலர் தோன்றியிருந்தனர். ஆனால் இந்தப் போக்கினால் நற்பயன் ஏதும் உண்டாகும் என்று வி. ஆருக்குத் தோன்றவில்லை. இருபது முப்பது பேர்களைக் கொன்று விடுவதால் என்ன பிரயோஜனம்? அவர்கள் இடத்தில் மேலும் பலர் வருவார்கள். புதிதாக வருபவர்கள் முன்னவரைக் காட்டிலும் அதிகக் கண்டிப்பும் உறுதியும் காட்டுவார்கள்; ஏன் மோசமானவர்களாயும் விளங்குவார்கள்.[2] தேசத்தில் அரசியல் மாறுதல் என்ற அம்சத்தைப் பொறுத்தமட்டில் வி. ஆர். அடியோடு நம்பிக்கை இழந்திருந்தார்.



குஜராத்திலிருந்து வழக்கறிஞர்

எனினும் தென்னாப்பிரிக்காவுக்கு ஏதோ ஒன்று புத்துயிரூட்டிக் கொண்டிருப்பதை வி. ஆர். உணர்ந்தார். 1906 முதல் எம். கே. காந்தி என்று அழைக்கப்பட்ட குஜராத்தி வழக்கறிஞர் ஒருவரைப் பற்றிய செய்திகளை நாளிதழ்கள் பிரசுரித்து வந்தன. தென்னாப்பிரிக்காவில் அவர் இந்தியர்களின் உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டிருந்தார். அந்த விவரங்கள் வி. ஆர். உள்ளத்தில் பதிந்தன.

''தென்னாப்பிரிக்காவிலிருந்து நாடு கடத்தப்பட்ட ஓர் இந்தியர் சேலத்துக்கு விஜயம் செய்தார். 1908-ல் என்று நினைக்கிறேன். வி. ஆர். வீட்டில் அவர் சில காலம் தங்கினார்.

1. C. Rajagopalachar Chats Behind Bars, S. Ganesan, Madras. 1931, P.46.
2. மேற்படி.
3. ஆர். வி. கிருஷ்ணய்யர், கல்கி, டிசம்பர் 8, 1957.
4. C. Rajagopalachar, Chats Behind Bars, S. Ganesan, Madras, 1931, P.46.

ருக் கொள்கை விளக்கங்களை அது தருவதாகத் தோன்றியது. சீக்கிரமே இன்னொரு புத்தகம் அவரிடம் ஒரு பாதிப்பை ஏற்படுத்தியது. காந்தியின் ''இந்திய சுயாட்சி'' (Indian Home Rule) என்ற அந்த நூலுக்குத் தென்னாப்பிரிக்காவில் தடை விதிக்கப்பட்டிருந்தது. தென்னாப்பிரிக்காவிலிருந்து நாடு கடத்தப்பட்ட ஒருவர் கர்னூலில் 1910-ல் ஸி. ஆரைச் சந்தித்திருந்தார். அவர் அந்த நூலை ஸி. ஆருக்கு அனுப்பி வைத்தார்.

அந்தப் புத்தகத்தைப் பேரார்வத்துடன் படித்தார் ஸி. ஆர். காந்தி சாத்வீக எதிர்ப்புக்கு ஆதரவாக வாதாடியிருந்ததை விட அதிகமாக ஸி. ஆரைக் கவர்ந்த விஷயங்கள் காந்தியின் அச்சமின்மையும் ஆங்கிலேயரை உயர்ந்தவர்கள் என்று அவர் அங்கீகரிக்க மறுத்ததும்தான்.[5]

''இந்திய சுயாட்சி'' என்ற அந்தப் புத்தகம் நூலாசிரியருக்கும் ஒரு நண்பருக்கும் இடையே நடந்த உரையாடலை விவரிக்கிறது. நூலாசிரியர் அதில் ஒரு பத்திரிகையாசிரியராக வர்ணிக்கப்படுகிறார். அவர் சாத்வீகப் போராட்டத்தை ஆதரித்துப் பேசுகிறார். அவர் நண்பரை வாசகர் என்று நூல் வர்ணிக்கிறது. அவர் பலாத்காரத்தில் நம்பிக்கை கொண்டவராக அடிக்கடி வாதாடுகிறார். இந்த நூலுக்கு இந்தியாவில் முதன் முதலாக விமர்சனம் எழுதியவர் ஸி. ஆர்.தான் என்று தெரிய வருகிறது.

ஒரே ஒரு வாக்கியம் மட்டுமே இன்று அகப்பட்டுள்ள அந்த விமர்சனத்தில் ஸி. ஆரினால் இண்டலேத் தவிர்க்க முடியவில்லை. ''இருவரில் பத்திரிகாசிரியரே விவாதத்திறனில் சிறந்தவராய் இருப்பது இயல்புதானே'' என்று எழுதினார்.[6] பலாத்காரத்தின் சார்பில் வாதங்கள் நிரம்பச் சமர்ப்பிக்கப்படவில்லை என்று உட்பொருள்.

பலாத்காரத்தைப் பயன்படுத்துவது தவறு என்று இன்னும் முழுமையான நம்பிக்கை பிறக்கவில்லையாதலால்[7] ஸி. ஆர். காந்தியைப் புரட்சியாளர்களுடன் சேரும்படி செய்து விடலாம் என்று கூட எண்ணினார். காந்தியிடம் உள்ள குணாதிசயங்கள் அவர்களை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்லும் என்று கருதினார்.



1906ல் எம். கே. காந்தி



டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன்

ஒளியூட்டியவர்

இந்தக் கட்டத்தில் மிதவாதிகளின் அரசியல் பெருத்த ஏமாற்றமளித்ததன் விளைவாகப் புரட்சியாளர்களின் வாய்ப்புக்கள் பற்றிப் பலரும் யோசிக்கத் தொடங்கினார்கள். சேலத்தில் நடந்த ஒரு விவாதத்தின் போது ஒருவர், ''இனி விமோசனமே இல்லை; புரட்சியாளர்கள் எல்லாரும் நசுக்கப்பட்டு விட்டார்கள்'' என்று கூறியதும், டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் உடனே அதனை மறுத்தார். அவர் லண்டனுக்குப் போயிருந்தபோது அங்கே சில புரட்சியாளர்களை மட்டுமின்றி காந்தியையும் சந்தித்து விட்டுத் திரும்பியிருந்தார். ''அதெல்லாமொன்றுமில்லை; காந்தி இந்தியாவுக்கு வரும் வரை காத்திருங்கள்'' என்றார். அந்த விவாதத்தின் போது ஸி. ஆர்., டாக்டர் ராஜன் கூறுவது ஒருவேளை சரியாக இருக்கலாம் என்று எண்ணினார்.[8]

எப்படியானாலும் காந்தி ஒளியூட்டிக் கொண்டிருந்தார். காந்திக்கு ஏற்பட்ட அனுபவங்களை அறிந்ததன் பயனாக ஸி. ஆர். தம் நண்பர்களிடம் ''நாம் கேழ்வரகு சாப்பிடப் பழகிக் கொள்வது அவசியம்'' என்றார். ஒருவேளை சிறைவாழ்க்கை மேற்கொள்ள நேர்ந்தால் அதற்குத் தயாராக இருக்க வேண்டாமா? போலீஸ் இலாக்காவின் விளையாட்டுப் போட்டிகளின் போது நடந்த ஒரு சம்பவம் தென் ஆப்பிரிக்காவில் காந்தி காட்டிய முன்னுதாரணங்களின் அடிப்படையில் நிகழ்ந்திருக்கலாம். ஆங்கிலேயரான போலீஸ் சூப்பரின்டென்டெண்ட் சேலம் நகரப் பிரமுகர்கள் பலரை விளையாட்டுப் போட்டிக்கு அழைத்திருந்தார். அங்கே வந்து சேர்ந்த பிறகு, பார்வையாளர் அமருமிடத்தில் பிரிட்டிஷாருக்கும் இந்தியருக்கும் தனித் தனிப் பகுதிகள் ஒதுக்கப்பட்டிருப்பதைக் கண்டார் ஸி. ஆர். எல்லா வழக்கறிஞர்

---

5. மேற்படி பக்கம் 48.
6. பியாரேலால் நய்யார் கொடுத்த ராஜாஜியின் வார்த்தைகள்.
7. C. Rajagopalachar, Chats Behind Bars, S. Ganesan, Madras, 1931, P.48
8. மேற்படி.

ராஜ்மோகன் காந்தி



ராமசாமி: பஸ்ஸில் போய்க் கொண்டிருந்தேன். டிக்கெட் பரிசோதகர் டிக்கெட் எங்கே என்று கேட்டார்.
முனுசாமி: நீ என்ன சொன்னாய்?
ராமசாமி: கண்டக்டரிடம்தான் எல்லா டிக்கெட்டுகளும் இருக்கும் என்றேன்.

— எஸ். சந்திரசேகர்

களும் வெளிநடப்பு செய்ய வேண்டும் என்று கூறி அதற்குத் தலைமையும் தாங்கினார்.

''போதாது இந்த வெய்யில்''

இந்தக் கால கட்டத்தில் ஸி. ஆரின் மன நிலையை அவர் ராமராவிடம் விவரித்த ஓர் உரையாடல் வெளிப்படுத்துகிறது.

ஸி. ஆருடன் ரயிலில் முதல் வகுப்புப் பெட்டியொன்றைப் பகிர்ந்து கொண்ட ஓர் ஆங்கிலேயன், ''அப்பப்பா இன்றைக்கு ரொம்ப வெய்யில்'' என்றான். ''இந்த வெய்யில் போதாது'' என்றார் ஸி. ஆர்.

''போதாதா? என்ன சொல்கிறாய் நீ?''

''ஆமாம்; வெய்யில் போதாது தான்'' என்றார் ஸி. ஆர். புன்னகை புரிந்து கொண்டே. ''உங்களைப் போன்ற கனவான்களை இந்த நாட்டுக்குள் நுழையாமல் தடுக்கும் அளவுக்கு வெய்யில் தகிக்கவில்லையே!''[9]

எவ்வாறாயினும் பிரிட்டிஷ் ஆட்சியின் நம்பிக்கைகள் சிறிதும் மாறவில்லை. இதனை மனத்தில் பதியுமாறு செய்தது, தில்லியில் 1911-ம் ஆண்டு டிசம்பர் 12ல் நடந்த தர்பார். சாம்ராஜ்யாதிபதி ஐந்தாம் ஜார்ஜ் சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தார். வங்கப் பிரிவினை கைவிடப் பட்டது. தில்லி புதிய தலைநகராக அறிவிக்கப்பட்டது. ஆனால் இந்தியர்களின் அதிருப்திக்குச் சமாதானம் கிட்டவில்லை.

ஓராண்டுக்குப் பிறகு, தில்லி சாந்தினிசௌக் வீதியில் புதிய ராஜப் பிரதிநிதி ஹார்டிஞ்ச் பிரபு மீது ஒரு குண்டு வீசப்பட்டது. பதவி ஏற்பு வைபவத்தையொட்டி நடந்த ஊர்வலத்தில் அவர் யானை மீது அமர்ந்திருந்தார். அவருக்குச் சிறிய காயங்கள் ஏற்பட்டன. ஆனால் ஆட்சியை அசைக்க முடியவில்லை.

காந்தியைப் பலாத்காரப் புரட்சி இயக்கத்தில் சிக்க வைக்கலாம் என்று நம்பவே இடமில்லை என்பதைச் சீக்கிரமே ஸி. ஆர். அறிந்தார்.[10] தமது மூன்று சிறைவாசங்கள் பற்றி காந்தி எழுதி கல்கத்தா மாடர்ன் ரெவ்யூவில் 1913-ல் பிரசுரமான கட்டுரைகள் அதனைச் சந்தேகத்துக்கிடமில்லாமல் செய்து விட்டன. மேலும், சேலத்தில் வாழ்ந்து தென்னாப்பிரிக்காவுடன் தொடர்பு கொண்டிருந்த ஒரு பாதிரியார், டோக் என்ற மதகுரு எழுதிய காந்தி பற்றிய ஒரு நூலை ஸி. ஆருக்குப் படிக்கக் கொடுத்தார். அதுவும் மேற்படி முடிவுக்கு வரவே உதவியது.

சிறைவாச அனுபவங்கள்

ஸி. ஆரின் உள்ளத்திலிருந்து ஒரு தவறான நம்பிக்கை இப்போது நீங்கிற்று. அதே நேரத்தில் அப்பழுக்கற்ற ஒரு நேர்மையாளர் தமக்குத் தாமே தருவித்துக் கொள்ளும் துன்பங்களை மனத்திரையில் பார்த்தபோது அவர் இதயம் சிலிர்த்தது. காந்தியின் மனைவியும் இளைஞர்களான பிள்ளைகளும் நிறபேத அடிப்படையில் விதிக்கப்படும் ஒரு வரியை அமைதியான முறையில் எதிர்த்ததற்காகக் கைது செய்யப்பட்டார்கள் என்பதை 1913 செப்டம்பரில் கேள்விப்பட்ட போது ஸி. ஆரின் மனம் மீண்டும் நெகிழ்ந்தது.

''காந்தியின் சிறைச்சாலை அனுபவங்கள்'' என்ற நூலை ஸி. ஆர். தாமே தமது சொந்தப் பணத்தையும் உழைப்பையும் கொண்டு மறு பிரசுரம் செய்தார். சர உழைப்பையுமே நல்கினார். ட்ரெடில் அச்சு இயந்திரத்துக்கு முன் தாமே நின்று, தாமே அதனை இயக்கி அச்சிறு பிரசுரத்துக்கு உண்டான தாள்களை அச்சிட்டார். தென் ஆப்பிரிக்க இயக்கத்துக்கு நிதி உதவி கோரும் ஸி. ஆரின் முகவுரை அவர் மனம் எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டிருந்தது என்பதை உணர்த்தியது. அவர் எழுதினார்:

''நமது இல்லங்களில் நாம் சந்தோஷமாக உட்கார்ந்து கொண்டிருக்கப் போகிறோமா? அல்லது நமது கண்ணீரை மட்டும் காணிக்கையாக வழங்கப் போகிறோமா? எம். கே. காந்தியிடம் உள்ளது போன்ற சக்தியை வெளிப்படுத்த எல்லோருக்கும் கொடுத்து வைத்திருக்காது. அவரை அவதாரங்கள் வரிசையில் சேர்க்க வேண்டும்.....

''நாம் சில சுக போகங்களை விட்டுக் கொடுப்போம். அவர்கள் மீண்டும் நடத்தத் தீர்மானித்துள்ள புனிதப் போராட்டத்தில் அவர்களுக்கு ஆதரவு கொடுப்போம். அது நம்மிடம் கட்டுப்பாட்டைத் தோற்றுவிக்கும். அங்குள்ள வீரர்களான நமது தேசத்தவர்களுடன் நேரடியான ஒரு புதிய பிணைப்பை ஏற்படுத்தும்.''[11]

ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் சேகரித்த ஸி. ஆர். அதனை இதயபூர்வமான மரியாதையுடன், காந்தியின் அபார மதிப்பைப் பெற்றிருந்த பூனாத் தலைவர் கோபாலகிருஷ்ண கோகலேக்கு அனுப்பி வைத்தார்.[12] கோகலே அத்தொகையை காந்திக்கு அனுப்பினார்.

காந்தியின் போராட்டம் அச்சமயம் தென் ஆப்பிரிக்காவில் மட்டுமே மையப்பட்டிருப்பதாகத் தோன்றினாலும் அதுபற்றிய தகவல்கள் இந்தியாவிலும் நாம் கையாளக்கூடிய ஓர் ஆயுதம் பற்றிய எண்ணத்தை ஸி. ஆரிடம் உருவாக்கின.[13]

(தொடரும்)

தமிழாக்கம்: **இ. ராஜேந்திரன்**

9. மாஸ்தி வெங்கடேச அய்யங்கார். Rajaji-93, பக்கம் 113 - 114.
10. C. Rajagopalachar, Chats Behind Bars, S. Ganesan, Madras, 1931, P.49.
11. Mr. Gandhi's Jail Experiences, Reprinted at T A C Press, Salem, 1913.
12. கோகலேக்கு ஸி. ஆர். எழுதியது, 26-11-1913, கோகலே தாள்கள், தேசிய காப்பகம்.
13. C. Rajagopalachar Chats, Behind Bars, S. Ganesan, Madras 1931, P.46.

ஆஹா, ஆஸாத் ரோடு!

பாராளு மன்றத் தேர்தலுக்கு ஒரு வார காலத்துக்கு முன்னால் ஒரு நாள். சாந்தினி சௌக்கும், கானாட் சர்க்கஸும், கரோல் பாக்கும் ஒரே சந்தடியிலும் களேபரத்திலும் தேர்தல் பிரசார வேகத்தில் மூழ்கியிருந்தாலும் ஆஸாத் ரோட் பகுதி எப்போதும்போல அமைதியில் மூழ்கியிருந்தது. அந்த ஆஸாத் ரோட் ஆறும் நம்பர் இல்லத்தில்தான் தாற்காலிக ஜனாதிபதி திரு ஜாட்டி வசிக்கிறார் உப ஜனாதிபதியின் இல்லம் அது.



தாற்காலிகமாக ஜனாதிபதிப் பொறுப்பை அவர் சூழ்நிலையின் காரணமாக ஏற்றுக் கொள்ள வேண்டி வந்தாலும் ஜனாதிபதி மாளிகை வாசத்தை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. அவசியம் நேரிடும்போது அவர் ஆஸாத் ரோடிலிருந்து ராஷ்டிரபதி பவன் போய்த் திரும்புகிறார்.

மார்ச் மாதம் பன்னிரண்டாம் தேதி பகல் ஒரு மணிக்கு அவரைச் சந்தித்துப் பேசலாம் என்று அவருடைய பத்திரிகைத் தொடர்புக் காரியதரிசி அறிவித்திருந்தார். பன்னிரண்டே முக்காலுக்கே வரவேற்பு அறையில் போய் அமர்ந்து விட்டேன்.

ராஷ்டிரபதி பவனிலுள்ள கெடுபிடியும் பந்தோபஸ்தும் இங்கு இல்லை. சொல்லப் போனால் துப்பாக்கி தாங்கிய காவலர் யாரையுமே இங்கே நான் பார்க்கவில்லை. அங்கே பத்தடி தூரத்துக்கு இரண்டு காவலர்களைப் பார்க்கலாம்.

நான் போனபோது, மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த ஒரு நிலக்கிழாரும், கன்னட மாநிலத்தைச் சேர்ந்த கணவன் மனைவி ஜோடியும் திரு ஜாட்டியைச் சந்திக்கக் காத்திருந்தார்கள்.

அலுவலர் ஒருவர் என் முறை வந்தபோது என்னை அழைத்துப் போனார். தோட்டத்தைச் சுற்றிப் பக்கவாட்டில் நடந்தோம். எந்தக் காவலும் இல்லாத ஒரு நுழைவாயில். அந்த அறையைத் தாண்டி உள்ளே பெரிய ஹாலாக திரு ஜாட்டியின் காரியாலய அறை இருக்கலாம் என்பது என் கற்பனை. ஆனால் நுழைந்த உடனேயே நீண்ட வராந்தா போலிருந்த அறையின் ஒரு பக்கத்தில் எளிய மேஜைக்குப் பின்னால் தாற்காலிக ஜனாதிபதி அமர்ந்திருந்தார். முன்னால் சற்றுத் தள்ளிக் கீழே அமர்ந்து ஒரு கடைநிலை ஊழியர் தபால்களைப் பிரித்துக் கொண்டிருந்தார். எனக்கு ஒரே திகைப்பு. இப்படி ஒரு காந்திய எளிய சூழ்நிலையை அந்தப் பதவியுடன் இணைத்துப் பார்க்க என்னால் முடியவில்லை!

புன்னகையுடன் தலையை அசைத்து வரவேற்ற அவர் முதுகின் பின், 'தாமரை போல் வாழ்க்கை நடத்து' என்று கூறும் ஆங்கில வாசகத்தை (Lead a lotus like life) கொண்ட ஒரு கண்ணாடிச் சட்டமிட்ட படம் தொங்குகிறது.

• • •

என்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறேன். அன்று நிலவும் சூழ்நிலையில் அரசியல் பற்றிப் பேசமாட்டேன் என்று அவருக்கு நம்பிக்கை ஊட்டிய சூட்டோடு, அவர் பின் காணப்படும் ஆங்கில வாசகத்துக்கு விளக்கம் கேட்கிறேன்.

'' 'தாமரைப் பூ போன்ற வாழ்க்கை' என்பது எனக்குப் புரியவில்லையே! தமிழ் நாட்டில் இப்படி ஓர் உதாரணம் கேள்விப் பட்டதாக நினைவில்லையே?'' என்று பேச்சை ஆரம்பித்து வைக்கிறேன்.

அவர் இலேசாகச் சிரிக்கிறார். ''இங்கே காணப்படும் தாமரை என்ற பதம் தாமரைப் பூவைக் குறிக்கவில்லை. தாமரை இலையைக் குறிக்கின்றது! தாமரை இலைத் தண்ணீர் போல எதிலும் ஒட்டிக் கொள்ளாத பற்றற்ற வாழ்க்கை நடத்த இந்த வாசகம் பணிக்கிறது'' என்று கணீரென்று ஆங்கிலத்தில் விளக்கம் கொடுக்கிறார். அதைத் தொடர்ந்து வேதாந்த ரீதியாகவே பேச்சுத் தொடர்கிறது. உடனே கோவில் என்ற தத்துவத்தை விளக்க பஸவேசுவரரின் கன்னடக் கவிதைகளைப் பொழிகிறார்.

''உங்கள் வாழ்க்கையில் நீங்கள் பலவித பதவிகளில் பல இடங்களில் அமர்ந்திருக்கிறீர்கள். உங்களுக்கு மிகவும் மன அமைதியையும் சாந்தியையும் கொடுத்த இடம் எது?'' என்கிறேன்.

பளிச்சென்று பதில் வருகிறது. ''பாண்டிச்சேரியில் நான் லெப்டினெண்ட் கவர்னராக இருந்த நேரம் பொன்னான நேரம். அரவிந்தர் ஆசிரமம். அவ்வப்போது அன்னையின் தரிசனம். ஞாயிறுதோறும் நண்பர்களுடன் கூடிச் சமய இலக்கியப் பேச்சு. இவைகளெல்லாம் அற்புதமான மனச் சாந்தியைக் கொடுத்தன. என்னுடைய பாண்டிச்சேரி வாழ்க்கையை மறக்க முடியாது!'' என்கிறார்.

மைசூர் மாநில பீஜப்பூர் மாவட்டத்தில் 1912ம் ஆண்டில் பிறந்த பாஸப்ப தானப்ப ஜாட்டி சட்டப் படிப்புப் படித்து வழக்கறிஞராக ஜாம்காந்தியில் வாழ்க்கையைத் தொடங்கினார். பிறகு பம்பாய் மாநிலத்தில் அமைச்சரானார்.

மொழி வாரி மாநில சீரமைப்பு ஏற்பட்டபோது திரு ஜாட்டி மைசூர் மாநிலச் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1958லிருந்து 62 வரை மைசூர் மாநில முதலமைச்சராக இருந்தார். 62லிருந்து 67 வரை நிதி, உணவுத் துறை அமைச்சராகவும் இருந்திருக்கிறார்.

1968லிருந்து 72 வரை புதுவை மாநிலத்தில் லெப்டினென்ட் கவர்னராகப் பதவி வகித்தார். பிறகு சுமார் ஒன்றரை வருட காலம் ஒரிஸ்ஸா கவர்னராகவும் இருந்தார்.

1974ம் ஆண்டு ஆகஸ்ட் இருபத்தி ஏழாம் தேதி பாரதத்தின் உதவி ஜனாதிபதியானார்.

● ● ●

சுமார் நாற்பத்தி ஐந்து நிமிடங்கள் அரசியலைத் தவிர மற்ற அனைத்து விஷயங்களையும் பேசிக் கொண்டிருந்துவிட்டு விடைபெறுகிறேன்.

நான் காத்திருந்த அறையில் காணப்பட்ட ஆடம்பரங்களில் கால்வாசிகூட நான் பேசிக் கொண்டிருந்த அறையில் இல்லை. ஆனால் காந்தியின் [illegible] இருந்தது.

- ஜி. எஸ். என்.

இப்படிப் பாடலாமோ?



இந்திரா காந்தி:	நீயில்லே ஒரு சினிமா என்று [illegible] எங்கேயோ [illegible] இருக்க எனக்கு வந்து ஏன் பிறந்தாய் - அசட்டு மகனே!
சஞ்சய் காந்தி:	அம்மைக்குத் தெரிந்த காரியம் - உனக்கு அடக்கத் தெரியாதா?
கருணாநிதி:	நானே உங்களை ஆளவேண்டும் - உடன்பிறப்புகளே இந்தக் கழகம் முழுதும் [illegible] வேண்டும் - [illegible] மலர்களே!
எம். ஜி. ஆர்.:	அதிருஷ்டம் அமைவதெல்லாம் அன்னை கொடுத்த வரம் [illegible] [illegible]
ஜகஜீவன்ராம்:	நானும் ஒரு நாளை நாயகன் நாளைய ஆட்சியின் நாயகன்.
ராஜ்நாராயண்:	நினைத்ததை நடத்தியே முடிப்பவன் நான் நான் நான். [illegible] நான் நான்.

(ஒரிஜினல் சாகித்திய கர்த்தாக்களுக்கு நன்றி)












Bayer Chemistry

promotes human progress in many spheres









Our multipurpose factory at Thana (Maharashtra) manufactures a wide range of

- **Agricultural pesticides** for increasing food production
- **Household pesticides** to rid houses of vermin
- **Rubber chemicals** to meet the increasing demands of the Rubber industry
- **Pharmaceuticals** for the improvement of public health

Bayer thinks of tomorrow–today

Bayer (India) Limited
Express Towers, Nariman Point,
Bombay **400 021**

Bayer

BAYER

DPS-3

மகம்மதியர்கள் கி.பி. 1330ம் ஆண்டு மதுரையைக் கொள்ளை அடிக்கப் புகுந்தபோது: கோயில் ஸ்தானிகர்கள் சுவாமி கோயில் சிவலிங்கத்தைக் கருவறையில் மூடி. ஒரு கிளிக் கூட்டை அமைத்து அதன் மேல் மணலைப் பரப்பி, கருவறை வாயிலையும் கற் சுவரால் அடைத்தனர்.

48 ஆண்டுகளுக்குப் பிறகு கற் சுவர் இடிக்கப்பட்டு, மணல் மேடும் அப்புறப்படுத்தப் பட்டது. கிளிக் கூடும் அகற்றப்பட்டது. என்ன ஆச்சரியம்!

சிவலிங்கத்தின் மீது சாத்தப்பட்டிருந்த சந்தனமும் செண்பகப் பூமாலையும் அன்று காலையில் சாத்தியதுபோலக் காட்சியளித்தன. இரு வெள்ளிக் குத்து விளக்குகள் 48 ஆண்டுகள் அணையாமல் எரிந்து கொண்டிருந்தன.

தகவல்: **சீதளப் புத்தகம்**

17

பூர்ணத்தின் திட்டம் தவிடுபொடியாயிற்று. பச்சைப் புடவையைக் கட்டிக் கொண்டு வைரத் தோடும் மூக்குத்தியுமாக ஜொலித்த ஓர் இளம் பெண்ணைச் சென்னையில் தற்செயலாகப் பார்த்து விட்டு, அவள் மீனாட்சியை ஞாபகப் படுத்துகிறாள் என்று பரவசப்பட்டு ஓடிவந்தவன் தரிசனம் முடிந்த உடனேயே மறு ரயிலில் சென்னைக்குத் திரும்பி விடவேண்டும் என்றுதான் இருந்தான். ஆனால் அவனது திட்டம் சீதாமணியால் முறியடிக்கப்பட்டது. பூர்ணத்தின் உள்ளம், சற்றே ஏமாற்றத்தினால் வாடினாலும், இன்னும் பல தடவைகள் மீனாட்சியைத் தரிசனம் செய்யலாம் என்று பூரித்தது. டோப்பாத் தலையால் 'சரி' என்று அவசியத்துக்கு அதிகமாகவே ஆட்டினான்.

''அப்போ நானும் இவரும் மெட்ராஸுக்கு வந்து உன்னோடு க்வார்ட்டர்ஸிலே தங்கிக்கிறதிலே உனக்கும் ஒண்ணும் ஆட்சேபணை இல்லேன்னு நீ சொல்றே, இல்லியா பூர்ணம்?'' என்று கேட்டாள் சீதாமணி சாதத்தைப் பரிமாறிக் கொண்டே...

பூர்ணத்துக்கு ஒரு கெட்ட பழக்கம். சாப்பிடும்போது பேச மாட்டானாம். சாதம் என்றால் அமுது.. அமுது என்றால் அமிர்தம். அமிர்தம் பாற்கடலிலிருந்து வந்தது. அதைத் தெய்வம் தந்ததால் சாதம் அமிர்தத்துக்கு ஒப்பானது. தெய்வப் பிரசாதம். ஆகையால் பயபக்தியுடன் மௌனமாக அந்தப் பிரசாதத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அவன் வியாக்கியானம் செய்வான். இந்தக் காலத்து ரேஷன் அரிசியைப் பகவான் பரந்தாமன் உண்டாக்கவில்லை; கலப்பட அசுரர்கள் மலையை உடைத்துப் பொடிக் கற்களாக்கி அரிசி ரூபத்தில் அனுப்பினதுதான் என்று எதிர்ப் பதில் சொன்னால் பூர்ணம் ஏற்றுக் கொள்ள மாட்டான்.

தான் கேட்ட கேள்விக்கு அவன் சாப்பிட்டுக் கை கழுவும் வரையில் பதில் வராது என்று தெரிந்ததும், தன்னுடைய மனத்தின் அவசரத்தில் கேள்விகளைத் தொடர் வண்டியாக ஓட்டிக் கொண்டே போனாள் சீதாமணி.

''அயனாவரத்திலிருந்து அடையாறு அப்படி ஒண்ணும் ரொம்பத் தூரம் இல்லியே?''

''இன்னும் கொஞ்சம் கூட்டுப் போட்டுமா?'' (இக் கேள்விக்குப் பூர்ணம் தலையால் பதில் சொன்னான்.)



மதுர நாயகி

''மெட்ராஸிலே ஒரு பிளாட் வாங்கிப் போட்டிருக்கியே, எப்போ வீடு கட்டறதா உத்தேசம்?''

''கல்யாணம் பண்ணிண்டு சமர்த்தாக் குடித்தனம் வைக்கலேன்னு எதுக்குப் பிளாட் வாங்கினே?''

''சாகிறதுக்கு முன்னலே அப்பா உங்கிட்டே என்ன சொன்னர்?''

பாணம் பாணமாக வந்த கேள்விகளை நெஞ்சிலே தாங்கிக் கொண்ட பூர்ணம் ஒரு வாறு சாப்பிட்டு முடித்தான். எல்லாக் கேள்விகளும் மனத்தில் பதிந்திருந்தாலும் அதே வரிசையில் பதில் சொல்லணுமா இல்லே தாராதரம் பார்த்துச் சொல்லுவதா என்று வாய் கொப்புளிக்கையில் யோசித்தான்.

அவன் ஒரு முடிவுடன் திரும்பி வந்தான். ஆனல் அதை அவன் செயல் படுத்துவதற்குள், ''சமையல் நன்னு யிருந்ததோ, பூர்ணம்?'' என்று கேட்டாள் சிதாமணி.

''திவ்யமா இருந்தது. சாம்பாரிலே புளி கொஞ்சம் தலையைக் காட்டி யிருக்கு. நீங்க ஒரு அச்சு வெல்லத்தைப் போட்டு அடக்கி யிருக்கேள்.... சாம்பார்லே வெல்லம் போட்டால் எனக்குப் பிடிக்கும். உடுப்பிக்காரன் போடுவான்.''

சிதாமணி ஏற்கனவே கேட்ட கேள்விகளில் சிலவற்றை மீண்டும் கேட்டாள்.

''அத்தே, இன்னமே இந்த மாதிரி அசட்டுப் பிசட்டுன்னு கேள்வியைக் கேட்காதேயுங்கோ... அப்பா போனப்புறம் வீடு வெறிச்சுன்னு இருக்கு. நான் காலங்கார்த்தாலே சைக்கிளை எடுத்துண்டு போனேன்னு அவ்வளவுதான், சாயங்காலம் வரையிலே எட்டிப் பார்க்க ஆளில்லே. என்னைக் கேட்டா நீங்க மெட்ராஸிலேயே குடியேறிடலாம்னு கூட நான் சொல்லுவேன்...''

''அதெப்படியடா பூர்ணம் முடியும்? சங்கரி இங்கே சம்பாதிக்கிறு. அவ வரமாட்டா...''



''இந்தச் சம்பாத்தியத்துக்கு மெட்ராஸிலே இல்லாத வழியா? அத்திம்பேருக்கு ஆபரேஷனை அடையாறிலே வைச்சுப்போம். அதுக்கு முன்னாடி ஒரு நடை வைத்தீசவரன் கோயிலுக்குப் போய் வரலாம்...நானே அழைச்சுண்டு போறேன்...''

''நீ சொல்றதைக் கேட்கக் கேட்க எனக்கு உடம்பெல்லாம் புல்லரிக்கிறது, பூர்ணம்.''

''உங்களுக்குப் புல்லும் அரிக்க வேண்டாம், பூண்டும் அரிக்க வேண்டாம். அத்தே.... இதுக்கு முன்னாலேயே ஏன் இந்த யோசனை என்னோட மர மண்டையிலே உதிக்கலைன்னு தான் ஆச்சரியமா யிருக்கு... நான் முடிவாச் சொல்றேன். இன்னும் ஏழெட்டு நாட்களிலே நல்ல நாளாப் பார்த்துப் பாண்டியன் எக்ஸ்பிரஸ்லே எல்லோரும் ஏறுங்கோ... ஆமாம் சொல்லிட்டேன்.''



''எங்களாலே பாவம் ரொம்பச் சிரமம் உனக்கு!''

''இதுதானே அத்தே வேண்டாங்கறது... எனக்கு மனுஷான்னு யாரும் இல்லே... அப்பாவுக்குச் சொந்தத் தம்பி, தங்கை இல்லை. ஒண்ணு விட்ட சொந்தத்திலே சொல்லும்படியா இருக்கிறது நீங்கதான்... அம்மா பக்கத்திலே ரெண்டு மாமா இருக்கா. அப்பா செத்ததுக்கு எழுதினேன். ஒரு கார்டு கூடப் போடலை.''

''அப்பா சாகிறபோது என்ன சொன்னார்?''

''உயிரோடு இருக்கறப்போ தினம் தினம் என்ன சொல்லி என் பிராணனை வாங்கினாரோ அதைத்தான் சொன்னார். ஆனால் சொன்னப்புறம் அன்னிக்கு அவர் பிராணன் தான் போச்சு!''

''என்ன சொன்னார், பூர்ணம்?''

'''பூர்ணம், நீ ஒரு கல்யாணத்தைப் பண்ணிண்டாத்தான் என் மனசு குளிரும்டா. மதுரையிலே அத்தை இருக்கா. அவ பெண்ணைப் பண்ணிக்கோடா'ன்னார்... ஏன் அத்தை நான் கேக்கறேன், மூணு நாள் கண்ணைத் தொறக்காமக் கிடந்தாரே, அவர் கண்ணைத் தொறந்தது எதுக்கு? போயிட்டு வரேன்னு சொல்லத்தானே? போற மனுஷன் மரணப் படுக்கையிலே இப்படி ஓர் ஆசையை வெளியிடலாமோ?''

சீதாமணியின் கண்கள் கனத்தன.

''அண்ணா பேர்லே தப்பு இல்லேடா பூர்ணம். நீ ஒரே பிள்ளை. உனக்குக் கல்யாணம் ஆகி, குழந்தைகள் பொறந்து வீடு கோலாகலமா இருக்கணும்னு அண்ணா ஆசைப் பட்டார்.''

''பெரிய ஆசை!''

''சாறதுக்கு முன்னாலே ஆசைப்பட்டதை நிறைவேத்தி வைக்கணும்னு சொல்லுவா!''

''நியாயமான ஆசையா யிருந்தால் சரி... அப்பா பேத்தினதெல்லாம் ஆசையாயிடுமா?''

''பூர்ணம்!''

''என்ன அத்தே?''

''நான் தெரியாமத்தான் கேக்கறேன். நீ ஏன் கல்யாணம் வேண்டாம்னு பிடிவாதமா நிக்கறே?''

''இப்ப மனசு நிம்மதியா யிருக்கு...ஒரு கவலை இல்லே. கல்யாணம்னு வந்தா, பெண்டாட்டி, குழந்தை... கூடவே பாசம், கவலை, வேதனை... எதுக்கு அத்தே இல்லாத கஷ்டத்தை விலை கொடுத்து வாங்கணும்?''

''டேய், வாழ்க்கைன்னா எல்லாம் இருக்கணும்டா... உனக்கு இப்ப ஒரு பிரச்னையும் இல்லை. வாய் புளிச்சதோ மாங்காய் புளிச்சதோன்னு பேசவே..... ஒண்ணுக்கு மேலே ஒண்ணா பிரச்னை வரணும். நீ எதிர்த்துச் சமாளிக்கணும். ஒவ்வொரு பிரச்னையைத் தீர்க்கறதுக்குப் பகவானோட அனுக்கிரகத்தை வாங்கிக்கணும்..... இதிலே தான்டா, பூர்ணம், நீ மனுஷன்னு காட்டிக்க வாய்ப்பு இருக்கு.''

''என்னைக் குழப்பாதேங்கோ, அத்தை.''

''நீ வேணும்னு கல்யாணம் பண்ணிக்கோ உன் அப்பா சொன்னாரேங்கறதுக்காக நான் பேசலை. இன்னும் பத்துப் பன்னிரண்டு வருஷம் போனா வயசு நாப்பதாயிடும். அப்புறம்



''ஏணி எதற்கு?''

''மீண்டும் நிமசி பஸ் ஸ்டிரைக் ஏற்பட்டு, லாரியில் ஏறச் சொல்வார்களானால், லாரியில் ஏறப் படிக்கட்டு!''

நியாக அலைஞ்சாக்கூட, நல்ல இடத்திலேந்து பெண் கிடைக்காது.''

''என் மனசைக் கலக்கறேள். நான் கோயிலுக்குப் போறேன்!''

''இப்பக் கோயில்லே என்னடா இருக்கும்? மணி பன்னிரண்டாயிடுத்து. உச்சி பூஜையெல்லாம் முடிஞ்சாச்சு!''

''இல்லே அத்தே... முக்குருணிப் பிள்ளையார் பக்கத்திலே போய்க் கொஞ்ச நேரம் உட்கார்ந்துக்கிறேன்.''

பூர்ணம் ஓர் அசடா அல்லது விவேகியா என்று சீதாமணிக்குப் புரியவில்லை. அவன் எப்படி இருந்தால் என்ன, அயனாவரத்தில் அவனுடைய வீடு சௌகரியமாகக் கிடைக்கிறது. அவன் சொன்னபடி அவள் சென்னைக்குக் குடும்பத்துடன் கண்டிப்பாகக் குடியேற மாட்டாள். ஆபரேஷன் முடிந்து கணவனை மதுரைக்கு மீட்டுக்கொள்ளும் வரையில் சென்னையில் இருந்தாக வேண்டும். இப்போது எதற்காக அவனுடைய கல்யாண விஷயத்தைப் பெரிய பிரச்னையாக்கி, அவன் மனத்தை நோகச் செய்ய வேண்டும்? அதனால் அவள் மீது அவனுக்கு மனத்தாங்கல் கூட உண்டாகலாம்.

பூர்ணம் ஜிப்பாவை அணிந்து கொள்ளவும் நீலா வேகமாக உள்ளே வரவும் சரியாக இருந்தது.

''வேலை கிடைச்சாச்சு அம்மா, வேலை கிடைச்சாச்சு!''

நீலாவுக்கு மூச்சு வாங்கியது. பொத்தானில் கை வைத்திருந்த பூர்ணம் கையை மறந்து நீலாவையே பார்த்தான். அவளுடைய கண்களின் கூர்மை, அமைதியாக இறங்கி வரும் மூக்கின் சரிவு, உதடுகளுக்கு மேல் முத்துக் கட்டிய வியர்வை, துடிக்கும் உதடுகள் எல்லாம் யாரையோ ஞாபகப் படுத்தின.

எந்த ஊர் அம்மன்?

''ரமணி சார் வரச் சொன்னார்னு சொன்னேனே, அவர் இன்னிக்கே வேலையை ஒப்புத்துக்கச் சொன்னார். உங்கிட்டே சொல்லி, உன்னை நமஸ்காரம் பண்ணிட்டு வரேன்னு ஓடிவந்தேன்.... அக்கா எங்கே, சுந்து எங்கே, அப்பா எங்கே?''

அவள் பூர்ணத்தை இலட்சியமே செய்யவில்லை. என்னதான் கல்யாணம் வேண்டாம் என்ற பிடிவாத குணம் பூர்ணத்திடம் இருந்தாலும், பெண்கள் என்றால் தலை குனிந்து கொள்ளுகிறவன் அல்ல அவன். இப்போது நீலா அவனிடமும் விஷயத்தைச் சொல்லி, அவனுடன் சேர்ந்து மகிழ்ச்சியைப் பங்கு போட்டுக் கொள்ளாதது கோபத்தைக் கூட உண்டாக்கியது. ஆனால் பக்தியையே வெளிக் காட்டிப் பழக்கப்பட்ட அவன் கோபத்தை அடக்கிக் கொண்டான்.

''நீலா, விவரமாகச் சொல்லுடி... எங்கே வேலை? என்ன சம்பளம்?'' என்றாள் சீதாமணி.

''மொதல்லே உன்னை நமஸ்காரம் பண்றேன்...''

''பூர்ணம்; நீயும் என்கூட நில்லுடா... நீலா, பூர்ணம் இந்த வீட்டிலே கால் வைச்ச வேளை உனக்கு வேலை கிடைச்சிருக்கு!''

''அப்படியா சொல்றே... சரி, பூர்ணம் சார்... நில்லுங்கோ!''

பூர்ணத்தின் கோபம் இன்னும் அடங்கவில்லையாயினும் அவன் சீதாமணிக்கு அருகே வந்து நின்றான்.

''நன்னாயிருடீ நீலா... உன் அப்பாவுக்கு நல்லபடியா எல்லாம் குணமாகணும்...'' பெண்ணை ஆசீர்வாதம் செய்யும்போதும், கணவனின் க்ஷேமம்தான் அவள் நினைவில் நின்று, தெய்வத்தை இறைஞ்சியது.

''அம்மா, மாதம் மூந்நூற்றைம்பது ரூபாய் சம்பளம்... அட்வகேட் ராமையா ஆபீஸிலே குமாஸ்தா!''

''என்னடீ, வக்கீல் குமாஸ்தாவா?''

''ஏன் இருக்கப்படாதோ?''

''ஆம்பிளை செய்யற வேலை.''

''பொம்மனாட்டி வக்கீலா இருக்கலாம்னா பொம்பளை குமாஸ்தாவும் இருக்கலாம். நான் இருக்கப் போறேன்... ஒண்ணு பார்த்தாயா அம்மா... பகவான் எல்லாத்தையும் நன்னாக் கவனிச்சுண்டு வர்றாங்கறதுக்கு நம்ம வீடே ஓர் உதாரணம்....அப்பாவுக்கு வேலை போன கவட்டிலேயே எனக்கு வேலை கிடைச்சிருக்கு. சாயங்காலம் கோயிலுக்குப் போகணும் அம்மா!''

''உன் அம்மாஞ்சி இப்பவே போறான்... முக்குருணிப் பிள்ளையார்கிட்டே உட்கார்ந்து தவம் செய்யப் போறான்...''

''என்ன பூர்ணம் சார்! அம்மா என்னவோ சொல்றாளே?'' என்றாள் நீலா.

''நீலா, ஒண்ணு என்னைப் பூர்ணம்னு கூப்பிடு.......இல்லாட்டி அம்மாஞ்சின்னு சொல்லு. இந்தப் பூர்ணம் சார் வேண்டாம்!''

''மரியாதை இல்லாமல் பேசப்படாதேன்னு அப்படிக் கூப்பிட்டேன். அம்மா நான் வர்றேன். போற வழியிலே மொட்டை ஆத்துக்குப் போய் அவளோட அம்மா கிட்டேயும் சொல்லணும்!''

திடீரென்று இரண்டு நாட்கள் முன், அவன் வந்து சேர்ந்த அன்று மொட்டை சொன்ன வார்த்தைகள் பூர்ணத்தின் காதில் ஒலித்தன. 'நீலாவை எனக்குப் பண்ணி வைக்கணும்னு எங்க அம்மா துடிக்கறா...' அப்படித் துடிக்கிற அந்த அம்மாவைப் பார்க்கவா நீலா இப்போது போகிறாள்!

திடீரென்று மொட்டைமீது ஓர் எரிச்சலும், அவன் இதுவரை உணர்ந்தறியாத பொறாமையும் அவனுள் பிறந்தன. (தொடரும்)

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் அளிக்கிறது: உங்கள் தேவைக்கேற்ற ரப்பர் வடிவம்.

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸில் நாங்கள் உங்கள் தேவைக்கேற்ப ரப்பரை வார்த்துத் தருவதில் தனித்திறமை பெற்றுள்ளோம். வடிவமைப்பு, குறிப்பிட்ட அளவுகள், எடை மற்றும் உருவம்—உங்கள் தேவைக் கேற்ப இயற்கை மற்றும் செயற்கை ரப்பரைக் கொண்டு உருவாக்கித் தருகின்றோம். மோட்டார் மற்றும் சரக்குத் தொழில், எலக்ட்ரானிக்ஸ் மற்றும் நெசவுத் தொழில், இவ்வாறு பரந்த பல தொழில் களுக்கேற்ப ரப்பரை வார்த்துத் தருகின்றோம்.

தேவைக்கேற்ப வார்க்கிறோம்.

எமது இரு அண்மைக் கால வெற்றிகள்: திருச்சியில் பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸுக்காக ட்ரன்னியன் ஷாஃப்ட் புஷ்ஷிங் ஸஸ்பென்ஷன்கள், பங்களூரில் பாரத் எலக்ட்ரானிக்ஸுக்காக ஷாக் அப்ஸார்பர்கள். அவர்கள் கேட்டுக்கொண்ட அளவுகளுக்கேற்ப மிகவும் நுண்ணிய மாகக் கவனித்து வார்த்துத் தந்துள்ளோம்.

இவை எங்களைப் பொறுத்தவரையில் நீண்ட பட்டியலில் இரு புதிய சேர்க்கைகள்தான்: அதாவது ரப்பர் வார்ப்பில் நாட்டின் சுய தேவை பூர்த்தியாகும்.

எங்கள் பங்கு பல தொழில்களில்

ஒவ்வொரு தொழிலுக்கும் ஏற்ப ரப்பர் வார்ப்பு உறுப்புகள். டெல்கோ, மைக்கோ, ப்ரீமியர், அசோக் லேலண்ட் மற்றும் புகழ் பெற்ற உற்பத்தியாளர்களுக்காக தனியே வார்க்கப்படும் உறுப்புகள். ஸைரப்பர் உறுப்புகளைப் பலதரப்பட்ட வாடிக்கையாளர்கள் விரும்பி வாங்குகின்றனர்.

நீங்கள் விரும்பி வாங்கவேண்டிய புத்தகம்

அது ''ஸைரப்பர் — உங்கள் தேவைக்கேற்ப வடிவுகொள்கிறது''. ரப்பரைக் கொண்டு நாங்கள் என்ன செய்கிறோம், எவ்வாறு செய்கிறோம் எனக்கூறுவது.

ஒரு வரி எழுதுங்கள். ஒரு பிரதி அனுப்புகிறோம்.

SIRUBBER

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
உசிலம்பட்டி ரோடு
கோச்சடை
மதுரை 625 016.



SAA/SI/2540





மதுரை மாநாடு

மதுரையம்பதிக்கு எத்தனையோ இதிகாச, புராண வரலாற்றுப் பெருமை உண்டு. இறைவன் திருவிளையாடல் புரிந்த திருத்தலம், நல்லிலக்கியம் பேணிய தமிழ்ச் சங்கம், செங்கோல் ஓச்சி அறநெறி வளர்த்த பாண்டிய ராஜ்யம் - இப்படியாகப் பழம் பெருமை தேடிக் கொண்ட இந்த நகரம், சமீபத்தில், உலக சமய கலாச்சார தத்துவ மகாநாடு நடத்திப் புதுப் பெருமையையும் சேர்த்துக் கொண்டுள்ளது.

சர்வ சமயங்களும் சமரஸம் செய்து கொண்டு சன்மார்க்கத்தைப் பேண வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் ஸ்ரீ காஞ்சி முனிவரின் அடியொற்றிக் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் இம் மகாநாட்டுக்கு வித்திட்டார். உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் பேரறிவாளர்கள் பலர் கலந்து கொண்டு, இம்மகாநாட்டின் மூலம் உலக சமயங்களின் ஒற்றுமையை ஆராய்ந்தார்கள். பேசும் மொழிகள் பலவாயினும், பழக்க வழக்கங்கள் வெவ்வேறாயினும், உள்ளுறை பொருளாக ஊற்றெடுத்துக் கசியும் பரம்பொருள் ஒன்றே என்பதைக் கண்டு மகிழ்ந்தார்கள்.

ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின் முன்னிலையில், பக்தர்களின் பெருவெள்ளத்துக் கிடையே ஒரு வாரம் மதுரை மாநகரம் திருவிழாக் கோலம் பூண்டிருந்தது.


நேபாள மன்னர் விரேந்திரவீர் விக்ரம் சகாதேவர் தொடங்கி வைத்த மகாநாடு அருமையான சொற்பொழிவுகள், கலை நிகழ்ச்சிகளோடு இனிது நிறைவேறியது.

ஆசாரிய சுவாமிகளின் அருளுரைக்குக் காத்திருக்கும் மக்கட் பெரு வெள்ளத்தையும், அவர்களைத் தரிசித்து மகிழும் மன்னர் தம்பதிகளையும், மதுரை விஜயத்தின் நினைவு என்றென்றும் பசுமையாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அரசருக்கு வழங்கப் பெறும் பரிசுப் பொருளையும் இப் பக்கத்தில் உள்ள படங்களில் காணலாம்.





விமல்மித்ர



தமிழாக்கம்: ரா. வீழிநாதன்

8. பூசை வேளையில்....

சரயுவைப் பற்றி எல்லாம் தெரிந்தாற் போலப் பேசவே, "ஆமாம், அவன் மனைவி இப்பொழுது சுகமாக வாழ்கிறளா? அவளைப் பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?" என்று மல்லிக் சாஹப்பிடம் கேட்டேன்.

"சுகமாக ஏன் வாழமாட்டாள்? அவளுக்கு இப்பொழுது சொந்தவீடு இருக்கிறது. வண்டி இருக்கிறது. கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்று கேட்க வேலைக்காரன்-வேலைக்காரி இருக்கின்றனர். அவள் கையாலே ஒரு துரும்புகூட எடுத்துப் போட வேண்டிய அவசியம் இல்லை. தொல்லை, தொந்தரவு ஏதும் இல்லாமல் நிம்மதியாக வாழ்கிறள்!" என்றார் மல்லிக் சாஹப்.

"நிசிகாந்தன் அங்கே போகிறதில்லையா?"

"போகாமல் என்ன? போய்ப் பழியாகக் கிடக்கிறன், கல்லடி மங்கன் மாதிரி! ஆனால் கழுத்தில் கை வைக்காத குறையாக விரட்டியடிக்கப்படுகிறன்; சீப்பட்டுத் திரும்புகிறன். இல்லை யென்றால் கெட்டுச் சீரழிந்த இந்தப் பயலுக்கு வெற்றிலை பாக்கு வைத்து வரவேற்பார்களோ? தலை நிமிர முடியாமல் அவமானப்படுத்தித்தான் அனுப்புவார்கள். அத்தனையும் துடைத்துப் போட்டு விட்டு இவன் போய் நிற்பான். நீங்களேதான் சொல்லுங்களேன்! இந்த மாதிரிப் பயல்களுக்குத் தினம் தினம் யார்தான் எங்கிருந்து பணம் கொடுப்பார்கள்? குடிகாரனின் தேவைக்கு ஏதாவது முடிவு உண்டா? கையில் காசு வந்து விட்டால் போதும், அவனைச் சாராயக் கடையில்தான் பார்க்க முடியும். அத்தனை காசையும் தண்ணீராக்கிய பின் வீடு திரும்புவான். சுத்த விடியா மூஞ்சிப் பயல்! அவன் முகத்தில் விழிப்பவர்களுக்குச் சோறு கிடைக்காது. அத்தனை துக்கிரி!"

இத்தனை கூறிவிட்டு மல்லிக் சாஹப் புறப்பட எழுந்தார். 'நல்ல நேரத்தில் எச்சரித்தாரோ, பிழைத்தோம்!' என்று நிம்மதியாக மூச்சு விட்டேன். 'அநுதாபப்பட்டு நிசிகாந்தனுக்கு நாம் ஏதாவது ரூபாய் கொடுத்தால், அதன் பயன் பூஜ்யமாகியிருக்கும்; நம் பணமும் வீண் விரயமாகியிருக்கும்' என்று எண்ணிய கையோடு மல்லிக் சாஹப்பை மனத்துக்குள் மனமாறப் பாராட்டினேன். அதோடு இன்னுமோர் எண்ணமும் எழவே, புறப்பட்ட மல்லிக் சாஹபை நிறுத்தி, "ஆமாம், உங்களுக்கு ரொம்ப நஷ்டமாகப் போய்விடுமே, வீட்டு வாடகை உங்களுக்குக் கிடைக்காதே! என்ன செய்வீர்கள்?" என்றேன்.

"அது சார், எனக்கு எப்படியுமே கிடைக்கப் போகிறதில்லை. நீங்கள் அவனுக்குக் கடன் கொடுத்தாலுமே என் பணம் எனக்கு வந்து சேரப்போவதில்லை. வீணில் உங்கள் பணம் தான் விரயமாகும். நான் ஒருவன் நஷ்டப்படுவது போதாதா? நீங்களும் எதற்காகத் தெரிந்தே கண்ணைக் குத்திக் கொள்ள வேண்டும்?" என்று கேட்ட மல்லிக் சாஹப் சற்று ஏதோ யோசிக்கிறற்போல் நின்றார். பிறகு, "அவன் மனைவியிடம் போய் இந்த விஷயத்தை யெல்லாம் சொல்லி விட்டுத் தான் வந்திருக்கிறேன்!" என்றார்.

"அப்படியானால் அவன் மனைவியை அடிக்கடி நீங்கள் சந்திப்பதுண்டு என்று சொல்லுங்கள்!"

மல்லிக் சாஹப் பொருள் பொதியச் சிரித்தார். "உங்களுக்கு உடைத்தே சொல்லி விடுகிறேனே! உண்மையிலே எனக்கு ஒரு தம்பிடிகூட நஷ்டம் ஏற்படுவதில்லை. நிசிகாந்தனிடம் போய் இதைச் சொல்லி விடாதீர்கள். அவன் மனைவி மாதா மாதம் எனக்கு வாடகைப் பணத்தைச் சரியாகக் கொடுத்து விடுகிறள்!" என்றார்.

இதைக் கேட்டு நான் பெரு வியப்பில் ஆழ்ந்தேன். இவருக்கு வாடகைப் பணம் குன்றமல் குறையாமல் கிடைத்து விடுகிறது என்றால், அன்று தேநீர்க் கடையிலே அவர் நிசிகாந்தனை அப்படிச் சாடி ஏன் அவமானப் படுத்த வேண்டும்? விந்தை பொதிந்த ரகசியமாக இருக்கிறதே! எல்லாமே ரகசியம் தான்! சரயுவை மோகாமா காட் ரயில்வே ஸ்டேஷனில் பார்த்த நாள் முதலே இந்த

ரகசியம் எப்படி யெப்படியோ என்னைத் தொடருகிறது என்பதை நான் உணர்ந்தேன்.

டாலி கஞ்ச் ஃப்ளாட்டை விட்டு விட்டு நான் இப்பொழுது மாணிக் தலாவில் குடியேறி யிருந்தேன். அங்கே வந்த பிறகுகூடத் தற்செயலாக நிசிகாந்தனைச் சந்திக்கும் வாய்ப்பு எப்படியோ கிட்டி விட்டது. இந்தச் சம்பவங்களைத் தேடி நான் ஓடவில்லை. ஆனால் அவை என்னைத் தேடி ஓடி வந்து கொண்டிருந்தன. என்ன ரகசியமோ?

இந்தச் சம்பவத்தை வைத்துக் கொண்டு ஒரு கதை எழுதினால் எப்படி இருக்கும் என்று எண்ணிப் பார்த்தேன். நான் இப்படித்தான் என் நவீனங்களுக்கும் கதைகளுக்கும் இது வரை பிளாட் தேடியிருக்கிறேன். அப்புறம் அதில் கற்பனையைத் தூவிக் குழைத்துச் சுவாரஸ்யமாகக் கதை பின்ன முயன்றிருக்கிறேன். கடைசியில் என் சார்பில் அருங் குறிப் பொன்றையும் இணைத்து விட்டிருக்கிறேன்.

மல்லிக் சாஹப்புக்கும் எனக்கும் சந்திப்பு ஏற்படாமல் இருந்திருந்தால் இந்த விஷயங்கள் இவ்வளவு சிக்கல் மிகுந்தவையாகவும் ரகசியம் நிறைந்தவையாகவும் ஆகியிராது என்பது உண்மை. மல்லிக் சாஹப் நிகழ்ச்சியின் போக்கையே திசை திருப்பி விட்டு விட்டார். அதன் ஆழத்தைக் கண்டுவிட வேண்டும் என்ற ஆர்வத்தில், ''மல்லிக் சாஹப்! என்ன, இவ்வளவு சீக்கிரம் எழுந்து விட்டீர்கள்!'' என்று கேட்டேன்.


''உழைத்தால்தான் இந்தக் கட்டைக்குச் சோறு கிடைக்கும். ஒரு நிமிஷம் கூட உட்கார எனக்குப் பொழுதிருப்பதில்லை, சார்!'' என்றாரே ஒழிய, மல்லிக் சாஹப் மீண்டும் உட்கார்ந்து விட்டார். 'இரவு பகல் இருபத்து நான்கு மணி நேரமும் உழைத்தால் ஒழியச் சாப்பாடு கிடைக்காது என்று கூறுகிறவரை உட்கார வைக்க நமக்கு ஒரு முறைக்கு மேல் இரண்டாம் 'முறை அடித்துச் சொல்ல வேண்டிய அவசியம்' ஏற்படவில்லையே! இது என்ன விந்தை!' என்று வியந்தேன்.

''என்ன சாப்பிடுகிறீர்கள்? தேநீர் வரவழைக்கட்டுமா?'' என்று கேட்டேன்.

''தேநீர் அருந்தத் தடை யொன்றும் இல்லை. இருந்தாலும் உங்களுக்கு எதற்கு வீண் சிரமம்?'' என்றார் மல்லிக் சாஹப்.

''சிரமமா? நன்றாகச் சொன்னீர்களே!'' என்றவன் காவுமியைக் கூப்பிட்டுத் தேநீரும் பிஸ்கட்டும் கொண்டு வரச் சொன்னேன்.

மல்லிக் சாஹப் வினயமே உருவாக அமர்ந்திருந்தார். ''பிஸ்கட் எதற்கு? வெறும் தேநீர் மட்டும் போதுமே!'' என்றார். ஆனாலும் கொண்டு வந்து வைத்த பிஸ்கட்டையோ



டீ தேநீரையோ கடைசிவரை விடவில்லை. பிஸ்கட்டைத் தேநீரில் தோய்த்துத் தோய்த்துக் கலைத்துக் கலைத்துக் கவாரசியமாகச் சாப்பிட்டார். தேநீர் அருந்தி முடித்ததும், "எல்லா விஷயங்களையும் உங்களுக்கு விரிவாகக் கூறினால் ஆபத்தாக முடியும். ஏனென்றால், சொல்வதையெல்லாம் கேட்டுக்கொண்டு அப்படியே நீங்கள் கதை எழுதி விடுவீர்கள். அப்புறம் நான்தான் உங்களுக்கு எல்லா விஷயங்களையும் சொல்லி விட்டதாக ஜனங்கள் எண்ணுவார்கள். எதற்கு இந்த வீண் வம்பு?" என்றார்.

"அந்த அச்சம் உங்களுக்கு வேண்டாம். அப்படி நான் கதை எழுதினாலும் ஊர்-பெயர் எல்லாவற்றையும் மாற்றித்தான் எழுதுவேன். கதையைப் படித்துப் பார்த்தால் உங்களுக்கே இது நீங்கள் சொன்ன கதையாகப் படாது. அவ்வளவுக்கு உருத் தெரியாமல் மாற்றித் தந்து விடுவேன். தைரியமாகச் சொல்லுங்கள். நிசிகாந்தனின் மனைவி சரயுவை நீங்கள் சந்திப்பதுண்டா?" என்று கேட்டேன்.

"சந்திப்பதுண்டு. இல்லா விட்டால் எனக்கு வீட்டு வாடகை எப்படிக் கிடைக்கும்? வீட்டு வாடகை மட்டும் என்ன? நிசிகாந்தன் மாதந்தோறும் உணவு விடுதிக்குத் தரவேண்டிய சாப்பாட்டுக் கடன், தேநீர்க் கடைக்குத் தரவேண்டிய பாக்கி எல்லாவற்றையும் அவன் மனைவி என் கையில்தானே தருகிறாள்? நிசிகாந்தன் படும் கடன்களைப் பைசா பாக்கியில்லாமல் தீர்த்து விட்டு, அவள் செய்யும் அந்தக் காரியம் யாருக்குமே தெரியக் கூடாது என்று என்னை எச்சரித்தும் அனுப்புகிறாள். அதனால் நான் ஹோட்டல்காரனையும் தேநீர்க் கடைக்காரனையும் கண்டித்து வைத்திருக்கிறேன், நிசிகாந்தனுக்கு இந்த விவரம் தெரியவே கூடாது என்று! அதோடு கடன் பாக்கியைக் கேட்டு அடிக்கடி நிசிகாந்தனை நெரிக்குமாறும் அவர்களுக்குச் சொல்லிவைத்திருக்கிறேன். இதையெல்லாம் விட இன்னொரு முக்கியமான விஷயம் என்ன, தெரியுமா? நிசிகாந்தனை எப்படியாவது சாராயம் குடிக்கவொட்டாமல் தடுக்க வேண்டும் என்றும் அவள் என்னைக் கேட்டுக் கொண்டிருக்கிறாள். போகும்போதெல்லாம் அவள் இதைத்தான் படித்துப் படித்துச் சொல்லுவாள். அவள் அவன் கண்ணில் பணத்தைக் காட்டுகிறதே இல்லை! அவன் கையில் அவள் ரொக்கமாகப் பணம் கொடுக்காததற்கு இதுதான் காரணம்" என்று விளக்கினார் மல்லிக் சாஹப்.

"அப்படியென்றால், நிசிகாந்தன் இப்பொழுதெல்லாம் சாராயம் குடிப்பதில்லையா?" என்று கேட்டேன்.

"குடிக்கிறதில்லையா? வேண்டியது குடிக்கிறான். அவனுக்குக் காசு எப்படியோ கிடைத்து விடுகிறது. உங்களைப் போன்ற புண்ணியவான்களிடம் வாடகை கொடுக்க வேண்டும் என்ற சாக்கில் கடன் கேட்கிறான். இரக்கப்பட்டுக் கொடுத்து விட்டால் அவனுக்கு ஒரே குஷி! அவன் நேரே நடையைக் கட்டுவது சாராயக் கடைக்குத்தான். உங்களுக்குக் கொஞ்சமாவது தெரியுமா இதைப் பற்றி?" என்று கேட்டார் மல்லிக் சாஹப்.

"ஆமாம், நான் பணம் கொடுப்பேன் என்று உங்களுக்கு எப்படித் தெரிந்தது?"

"ஏன்? அவனேதான் சொன்னான். வாடகைப் பணத்துக்காக நான் அவனை நெருக்கியபொழுது, நீங்கள் அவனுக்குக் கடன் தரச் சம்மதித்திருப்பதாக அவன் வாயிலிருந்து தானாகவே வந்தது!" என்றார் மல்லிக் சாஹப்.

கேட்கக் கேட்க எனக்கு எல்லாமே வெகு விந்தையாகப் பட்டது; வேடிக்கையாகப் பட்டது. நிசிகாந்தனை வேண்டாம் என்று விட்டு விட்டுப் போன மனைவி, அவன் நலனில் ஏன் இத்தனை நாட்டம் காட்டுகிறாள்? நிசிகாந்தன் கொஞ்சமும் கஷ்டப்படக் கூடாது என்பதற்காக, மல்லிக் சாஹப்பின் கையில் பிறர் அறியாமல் வாடகைப் பணத்தை வைக்கிறாள்! அவன் பட்டினி – பசி கிடந்து துன்புறக் கூடாது என்பதற்காகச் சாப்பாட்டு ஹோட்டலுக்கும் தேநீர் விடுதிக்கும் படி அளக்கிறாள்! அவளுக்கு அவனிடம் ஒரே ஒரு விஷயம்தான் பிடிக்கவில்லை. அதைத்தான் எதிர்க்கிறாள். அதாவது குடிக்கிற கெட்ட பழக்கத்தை அவனிடமிருந்து எப்படியாவது அகற்றிவிட வேண்டும் என்று பார்க்கிறாள், நல்ல விந்தைப் பெண்! அதைக் காட்டிலும் அவன் நடத்தும் தாம்பத்திய வாழ்க்கை இன்னும் விசித்திரமாக இருக்கிறது! அவன்தான்



வாட்டர்கேட்

திரைப்படமாகிறது!



''ராக்கி'' (Rocky) சென்ற ஆண்டின் சிறந்த அமெரிக்கப் படமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. சிறந்த இயக்குநர் (ஜான் அவில்ஸ்டன்) சிறந்த படத் தொகுப்பு ஆகியவற்றுக்கான ஆஸ்கார் பரிசுகளும் அதே படத்துக்குக் கிடைத்துள்ளன.

வெளியில் அதிகம் தெரியாத குத்துச் சண்டை வீரர் ஒருவர், அத்தி பூத்தாற்போல் திடீரென்று 'சாம்பியன்' பட்டம் பெறுவது பற்றிய கதை இது. தனி மனித மாண்பினை விளக்கும் ஒரு நல்ல படம். நகைச்சுவையும், மதி நுட்பமும் மிளிரும் ஓர் அரிய படைப்பு.

அமெரிக்காவிலேயே தலைசிறந்த திரைப்படப் பரிசு, ஆஸ்கார்.

''ஆல் தி பிரஸிடெண்ட்ஸ் மென்'' (All the President's Men) என்ற படத்துக்கு நான்கு ஆஸ்கார் பரிசுகள் கிடைத்தன. வாட்டர்கேட் ஊழல்களை எவ்வாறு இரு செய்தி நிருபர்கள் அம்பலப்படுத்தினர் என்பது பற்றிய படம் இது. இத்திரைப்படத்தில் வரும் ஒரு காட்சியையே இங்கே காண்கிறீர்கள்.

அந்த வீட்டை வேண்டாம் என்று உதறிவிட்டு வந்து விட்டாளே, அப்புறம் அந்த வீட்டோடு அவளுக்கு இத்தனை பந்தபாசம் ஏன்? கொண்ட கணவன் சரியில்லை என்று வந்தவளுக்கு அத்தனை அக்கறை ஏன்? அவளுக்குத் தான் ஒரு புதுத் துணை கிடைத்து விட்டதே! அவனோடு இன்பமாக இருக்கலாமே! நல்ல வீடு, நேர்த்தியான உடை, சுவையான உணவு —எல்லாமே கிடைத்து விட்ட பின், பழங் கஷ்டங்களை மறந்து புது இன்பத்தில் திளைக்கலாமே! ஒருவேளைச் சோற்றுக்கு வழி செய்யத் தெரியாத கணவனிடம் ஏன் இந்தக் கரிசனம்? — என் மூளைக்கு எதுவுமே எட்டவில்லை.

மல்லிக் சாஹுப் பேசாமல் உட்கார்ந்திருந்தார், என் சிந்தனையைக் கிளறி என்னை மௌனமாக்கிவிட்டு! மூளை வலி எடுக்கவே, சிந்தனையிலிருந்து மீண்டவன், ''மல்லிக் சாஹுப்! உங்களுக்கு மெத்த நன்றி. எல்லாவற்றையும் கூறி எனக்கு நன்மை செய்திருக்கிறீர்கள். நான் நிசிகாந்தனுக்குப் பணம் தரப் போவதில்லை!'' என்றேன்.

''கொடுக்கக் கூடாது. சரயு இதைத்தான் என் மூலம் உங்களுக்குச் சொல்லி அனுப்பியிருக்கிறாள்!'' என்றார் மல்லிக் சாஹுப்.

நான் வியப்பில் ஆழ்ந்து போனேன். ''நான் நிசிகாந்தனுக்குப் பணம் தரச் சம்மதித்திருக்கும் விவரம் சரயுவுக்குத் தெரியுமா?'' என்று கேட்டேன்.

''ஏன் தெரியாது? நன்றாகத் தெரியும், நானே நேரில் போய் எல்லாவற்றையும் சொல்லி வந்திருக்கிறேன். தேநீர்க் கடையிலே நடந்த வேடிக்கையைக் கூடச் சொல்லி விட்டேன். அவளுக்கு உங்களைத்தான் நன்றாகத் தெரியுமாமே!'' என்றார் மல்லிக் சாஹுப்.

''ஆமாம். டாலிகஞ்சில் இருந்தபோது அவளை இரண்டொரு முறை பார்த்திருக்கிறேன்!'' என்றேன்.

''சரயு ரொம்ப நல்ல பெண், சார்! இளகிய மனசு; இரக்கமுள்ள நெஞ்சு. இந்தக் குடிகாரனின் கையில் மட்டும் மாட்டிக் கொள்ளாமல் இருந்தால் இவ்வளவு கஷ்டப்பட்டிருக்க மாட்டாள். ஏதோ நடந்தது நடந்துவிட்டது. இனி அதைப் பற்றி வருந்தி என்ன பயன்? பாவம், இப்பொழுதுதான் கொஞ்சம் சுகத்தைக் கண்டிருக்கிறாள். வயிறு நிறைய உணவு கிடைத்து விடுகிறதில்லையா?'' என்றார் மல்லிக் சாஹுப்.

''சரயு இப்பொழுது யாருக்காவது ஆசைக் கிழத்தியாக இருக்கிறாளா, என்ன?''

''சீச்சீ! முதலில் வாயைக் கழுவிவிட்டுப் பேசுங்கள், சார்! அந்த மாதிரிப் பேச்சை இன்னொரு முறை நாக்காலே சொல்லாதீர்கள்! அது மகா பாவம். நிசிகாந்தன் ஊர் சுற்றியாக இருக்கலாம், குடிகாரனாயிருக்கலாம்; தீய நடத்தை உள்ளவனாக இருக்கலாம். ஆனால் சரயுவை அப்படியெல்லாம் தப்பும் தவறுமாக எடை போடாதீர்கள்!'' மல்லிக் சாஹுப்பின் ஒவ்வொரு சொல்லிலும்தான் என்ன அழுத்தம்!

''அப்படியென்றால்...?'' பேசப் புரியாமல் நான் இழுத்தேன்.

''உண்மையைச் சொல்லுகிறேனே உங்களுக்கு. ஒரு நாள் செய்தித்தாளில் ஒரு விளம்பரம் வந்திருந்தது. மனைவியை இழந்த ஒரு முதியவரின் மைனர் குழந்தைகளைப் பார்த்துக் கொள்வதற்கு ஒரு பெண்மணி தேவை. அவள் அவர் குழந்தைகளைத் தன் குழந்தைகளைப் போலப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று! சரயுவும் விண்ணப்பித்துக் கொண்டாள். ஆயிரக் கணக்கில் விண்ணப்பங்கள் வந்திருந்தன. அதிர்ஷ்ட வசமாக அந்தப் பெரியவர் சரயுவையே தேர்ந்தெடுத்தார். நர்ஸ் — கவர்னஸ் என்ற முறையில் அவளைத் தம் வீட்டிலேயே வைத்துக்கொள்வதற்கான ஏற்பாடும் செய்து விட்டார்'' என்றார் மல்லிக் சாஹுப்.

''அதற்குப் பின்...?''

''அதற்குப் பின்னென்ன? நிசிகாந்தனை விட்டு விட்டு சரயு அந்த வேலைக்குப் போனாள். அவள் சம்பாதித்தால் தான் செலவழிக்கலாமே என்று மனப்பால் குடித்தான் நிசிகாந்தன். ஆனால் நாளாக நாளாக இருவருக்குமிடையே தகராறுதான் முற்றியது. ஆரம்பத்தில் நிசிகாந்தன் தினமும் மனைவியைத் தேடிப் போய், அங்கேயே கல்லாக உட்கார்ந்து விடுவான். பணம் கேட்டுப் பணம் கேட்டுத் துளைத்தெடுத்தான். சரயுவும் முதலில் அவன் இழுத்த இழுப்புக்குப் பணம் கொடுத்து வந்தாள். ஆனால் கையில் காசைப்

பார்த்ததும் நிசிகாந்தன் பழக்க தோஷத்தைக் கூட விட முடியாமல் நேரே சாராயக் கடையை நோக்கிப் புறப்பட்டு விடுவான். குடித்துக் கும்மாளம் போடுவான். அவன் தொல்லை தாளாமல் சரயு அவன் கையில் காசு கொடுப்பதையே நிறுத்தி விட்டாள். இப்பொழுதெல்லாம் என்ன கொடுத்தாலும் என் கையில் தான் கொடுக்கிறாள். அடிக்கடி என்னைக் கூப்பிட்டு அனுப்புவாள். நிசிகாந்தனின் நிலையைக் கேட்டு அறிவாள்!'' என்றார் மல்லிக் சாஹப்.

''அதனால் அடிக்கடி நீங்கள் அங்கே போவதுண்டு என்று சொல்லுங்கள்!''

''ஏன் போகக் கூடாது? சொல்லுங்கள்! ஆள் அனுப்பி அவள் கூப்பிடுகிறாள். நான் போகிறேன். அதுவும் நிசிகாந்தன் வீட்டில் இல்லாத சமயமாகப் பார்த்து ஆள் அனுப்புவாள். நானும் போய்ப் பார்த்து வருவேன். நேற்றுக்கூட அவள் ஆள் அனுப்பித்தான் நான் போனேன்!'' என்றார் மல்லிக் சாஹப்.

''நேற்றைக்கா?''

''ஆமாம். நேற்றைக்குத்தான். நான் போயிருந்தேன். போனதும் அவள் கேட்ட முதல் கேள்வி, நிசிகாந்தன் எப்படி இருக்கிறான் என்பதுதான். நான் தேநீர்க் கடையில் நடந்ததை அப்படியே கூறினேன். அப்புறம் உங்களைப் பற்றிச் சொன்னேன். அப்பொழுதுதான் சரயு உங்களைத் தனக்குத் தெரியும் என்று சொன்னாள்!''

''ரொம்பப் பரிச்சயம் என்றில்லை. சாதாரணமாகத் தெரியும். மொத்தம் இரண்டு முறை அவளைப் பார்த்திருக்கிறேன்!'' என்றேன் நான்.

''சரயுவும் அப்படித்தான் சொன்னாள். இருந்தாலும் உங்களை மிகவும் பாராட்டினாள்.''

''என்னைப் பாராட்டினாளா? அப்படிப் பாராட்டும்படியாக நான் ஒரு காரியமும் செய்யவில்லையே!''

''அப்படிச் சொல்லிவிட முடியுமா? பார்க்கப் போனால், இந்தக் காலத்தில் யார் யாரைப் பாராட்டுகிறார்கள்? பிறர் நன்றாக இருப்பதைத்தான் யாராலுமே சகிக்க முடிகிறதில்லையே! இந்த நிலையிலே யார் பிறருக்கு நன்மை செய்வார்கள்? நீங்கள் ஒரு சமயம் சரயுவுக்குப் பெரிய உபகாரம் செய்தீர்களாம். இன்றைக்கும் அவள் அதை மறக்கவில்லை. நீங்கள் நிசிகாந்தனுக்குக் கடன் கொடுக்கப் போகிறீர்கள் என்று நான் சொன்னபொழுது அவள் எப்படித் துடித்துப் போய்விட்டாள், தெரியுமா? 'மல்லிக்ஜி! நாளைக்குப் பொழுது விடிந்ததும் முதல் காரியமாக நீங்கள் அவர் வீட்டுக்குப் போங்கள். எப்படியும் நிசிகாந்தனுக்குப் பணம் கொடுத்து உதவக் கூடாது என்று சொல்லுங்கள். ஒருவருக்கு உதவுவதைத் தடுப்பது பாவம்தான். ஆனால் இது துளிக்கூடப் பாவமில்லை' என்று சொன்னாள். அதனால்தான் அத்தனை வேலைகளையும் அப்படியே போட்டு விட்டு, எழுந்ததும் எழுந்திராததுமாக உங்களிடம் ஓடி வந்திருக்கிறேன்!'' என்ற மல்லிக் சாஹப் புறப்படுவதற்கு நிஜமாகவே எழுந்தார். அந்த நேரம் பார்த்து யாரோ கதவைத் தட்டினார்கள்.

காளுவி கதவைத் திறந்து, வந்தவனோடு என்ன பேசினானோ, தெரியாது. என்னிடம் வந்து ''உங்களை யாரோ பார்க்க வந்திருக்கிறார்கள்!'' என்றான்.

''பெயரைக் கேட்டுக் கொண்டு 'வா!'' என்றேன் நான்.

''நிசிகாந்த பாபுவாம். உங்களைப் பார்க்க வந்திருக்கிறாராம்!'' என்றான் காளுவி.

நிசிகாந்தனின் பெயரைக் கேட்டதும் மல்லிக் சாஹபின் சப்த நாடியும் ஒடுங்கி முகத்தின் நிறமும் மாறி விட்டது. ''இது எனக்கு நல்லதிற்கில்லை. என்ன செய்வது?'' என்று தவித்துப்போனார்.

அப்புறம் அவருக்கே ஏதோ வழி தோன்றி விட்டது போலும். என்னிடம் மெதுவான குரலில், ''உங்கள் உள் அறையில் ஒளிந்து கொள்கிறேன். இல்லாவிட்டால், என்னை இங்கே பார்த்து ரகளை கட்டி விடுவான்!'' என்றார். அடுத்த கணமே என் அனுமதிக்காகக் காத்திராமல், ஒரே பாய்ச்சலாக உள் அறைக்குள் புகுந்து விட்டார்.

காளுவி கதவைத் திறந்து விட்டான். நிசிகாந்தன் உள்ளே நுழைந்தான். (தொடரும்)

உலகிலேயே சந்தோஷமான மனிதர்!

மேற்கு ஜெர்மனியில் வசிக்கும் பேராசிரியர் ரோரிச்சை விடச் சந்தோஷமாக வாழும் ஒரு நபர் உலகிலேயே இருக்க முடியாது! ஏனெனில் அவருக்கு ஜோக்குகள் சேகரிப்பதுதான் பொழுதுபோக்கு! கடந்த பல ஆண்டுகளில் இவர் 40,000 நகைச்சுவைத் துணுக்குகளைச் சேகரித்து அவற்றை ஃபீபெரபர்க் பல்கலைக் கழகத்தில் ஒரு கண்காட்சியாகவும் வைத்திருக்கிறார்.


40,000 ஜோக்குகளுக்கு மேல் இவர் கைவசம் இருப்பதால்தானோ என்னவோ புதிதாக ஒரு ஜோக் உருவாக்குவதென்பது நடக்காத காரியம் என்கிறார். எந்த ஜோக்கைச் சொன்னாலும் தமது சேகரிப்பில் புகுந்து தேடி அதன் பழம் பிரதி ஒன்றை எடுத்துக் காட்டிவிடுவார். இவரிடம் உள்ள சில ஜோக்குகள் கி. மு. முந்நூறும் ஆண்டில் தோன்றியவை! ஜோக் சேகரிப்பை சும்மா தமாஷாக எடுத்துக் கொள்ளாமல் நகைச்சுவை ஆராய்ச்சியிலும் இறங்கியிருக்கிறார் ரோரிச். பல்தரப்பட்ட ஜோக்குகளை விஷய வாரியாக இனம் பிரித்ததுடன் அகர வரிசைப் பட்டியலும் தயாரித்துள்ளார். அதோடு மனிதர்கள் ஏன் சிரிக்கிறார்கள், யாரைப் பார்த்து யார், எந்தச் சூழலில் அதிகம் சிரிக்கிறார்கள் என்று ஆராய்ச்சியும் நடத்துகிறார்.

தொண்ணூறு வயது வரை வாழ்ந்த ஜெர்மானியப் பிரதமர் அடினார் பற்றி 'ஒரு ஜோக்: ''அடினார் ஓர் ஆமைக்குட்டி வாங்கியிருக்கிறார்; ஏன் தெரியுமா? ஆமைகள் முந்நூறு ஆண்டு காலம் வாழும் என்கிறார்களே, அது உண்மைதானா என்று பார்க்க!''

-ஜெர்மன் ட்ரிப்யூன்

—படம்: அடினாரும் ஆமையும்






நீடித்த
அழகுக்குத் தேவை
தூய்மையான மேனி.

லாக்டோ-காலமைன் ஒன்றுதான் உங்கள் மேனியை அனைத்திலும் அருமையாகப் பாதுகாக்கும்.

உங்கள் மேனியைப் பராமரிக்க லாக்டோ-காலமைன். உங்கள் மேனியைத் தூய்மையாகவும் புதுமையாகவும் வைத்திருக்கக் கூடிய சேர்க்கைப் பொருட்கள் விசேஷ முறையில் இதில் கலக்கப் பட்டுள்ளன. எல்லாம் ஒன்றில் இணைந்த அழகுப் பராமரிப்பு-லாக்டோ காலமைன்–அஸ்ட்ரின்ஜெண்ட், மாயிஸ்சரைஸர், ஃபவுண்டேஷன் க்ரீம் மூன்றும் இணைந்த தன்னிகரற்ற அழகு சாதனம்.

அதனை முறையாக உபயோகித்து வரவும். உங்கள் மேனி இயற்கையாக மெருகேறுவதைக் கண்கூடாகக் காண்பீர்கள்.



3 வசதியான சைஸ்களில் கிடைக்கிறது:
110 மி.லி.
60 மி.லி. 28 மி.லி.

க்ருக்ஸ் லாக்டோ-காலமைன், ஒரு ரெஜிஸ்டர்டு டிரேடு மார்க். இதனைத் தவறுகப் பயன்படுத்துபவர்கள் சட்டப்படி தண்டிக்கப் படுவார்கள்.

உண்மையான லாக்டோ-காலமைன் தானு என்று உறுதி செய்து கொள்வதற்கு, எப்போதும் இந்த க்ருக்ஸ் சின்னத்தைப் பார்த்து வாங்குவீர். அதோடு, க்ருக்ஸ் முத்திரையும் உடையாமல் இருக்கிறதா என்று உறுதி செய்து கொள்ளுங்கள்.

டுஃபார்-இண்டர்ஃப்ரான் லிமிடெட்
த.பெ. எண் 6582, பம்பாய்-400 018

க்ருக்ஸ்
லாக்டோ-காலமைன் அதுவே எழில் பராமரிப்பு ரகசியம்.

Sista's-DIL-45-P/76/Tam

ரெடிமேட்!

சரோஜா

நடுப்பகல்.

வெய்யில் உக்கிரமாகத் தகித்துக் கொண்டிருந்தது. பகல் உணவை முடித்துக்கொண்டு தன் வீட்டு வாயில் வராந்தாவுக்கு வந்தாள் மங்களம்.

தார் ரோட்டில் செருப்பும் இல்லாமல், குடையும் இல்லாமல், வியர்வை ஆறுகப் பெருகப் போய்க் கொண்டிருந்தாள் கல்யாணி. மங்களத்துக்கும் கல்யாணிக்கும் வெகு நாளையப் பழக்கம்.

''எங்கேடி கல்யாணி! இந்தப் பதைபதைக்கிற வெய்யிலிலே...?'' எனக் கூப்பிட்டாள் மங்களம்.

கல்யாணி பெருமூச்சு விட்டபடி மங்களத்தின் வீட்டுக்குள் நுழைந்தாள். வெயிலிலிருந்து நிழலுக்குள் வந்ததும் உடல் முழுவதும் குப்பென்று வியர்வை துளிர்த்தது.

''ஏண்டி! பொழுது கொஞ்சம் சாஞ்சப்புறம் போகக் கூடாதா?'' என உரிமையுடன் கடிந்து கொண்டாள் மங்களம்.

''என்ன செய்யறது? குழம்புப் பொடி அறவே தீர்ந்து போய் விட்டது. சாயங்காலம் மிஷின் ஓடறதோ இல்லையோ, அதனாலே இப்போதே போய் அரைத்துக் கொண்டு வந்தேன்!'' என்ற கல்யாணி தான் சுமந்து கொண்டு வந்திருந்த பிளாஸ்டிக் வாளியைக் கீழே வைத்து விட்டு ''அம்மாடி!'' என ஒரு நாற்காலியில் சாய்ந்தாள்.

மிளகாயும் கொத்தமல்லி விதையும் கலந்த கார நெடி அறையினுள் பரவியது.

மங்களம் சிரித்தாள். ''ஏண்டி! நீயே போய் அரைத்து வந்தால் தான் குழம்பு நன்றாக இருக்குமா?''

''வேலைக்காரியை அனுப்பலாம்- தான். ஒன்றுக்கு முக்கால்தான் வருகிறது.''

''நான் அதைச் சொல்லவில்லை. பெட்டிக்குப் பெட்டி அரைத்த பொடி விலைக்குக் கிடைக்கிறதே! வாங்கிக் கொண்டால் என்ன?''

''இப்படி நாமே சாமான்கள் வாங்கி அரைப்பதில் லாபம் உண்டே?....''

''பெரிய லாபத்தைக் கண்டு விட்டாய். வெயிலில் அலைந்து உடம்புக்கு வந்து டாக்டருக்குக் கொட்டிக் கொடுக்கும் செலவு புரியாது....'' என இடித்துச் சொன்னாள் மங்களம்.

கல்யாணி எழுந்தாள்.

''எங்கேயடி அதற்குள் புறப்பட்டு விட்டாய்?'' என்று கேட்டாள் மங்களம்.

''அரிசியும் உளுந்தும் ஊறப் போட்டு விட்டு வந்திருக்கிறேன். போய்த் தோசைக்கு அரைக்க வேண்டும்.''

''போக்க போ! இன்னும் கல்லுரலைக் கட்டிக் கொண்டு அழுவதை விடவில்லையா? உங்கள் தெருவிலேயே ஓர் அரவை மிஷின் இருக்கிறதே. அரை ரூபாய் தூக்கி எறிந்தால் ஒரு மணி நேரம் இடுப்பு வலி மிச்சம்.''

''இதெல்லாம் ஒரு பெண்ணுக்குச் சிரமம் என்றால்...?''

''சிரமம் இல்லாவிட்டாலும் நேரம் வீண் தானே? நமக்கு எல்லாவற்றுக்கும் கணக்கு பார்க்கத் தெரிகிறது. ஆனால் காலத்தின் மதிப்பு மட்டும் யாருக்கும் புரியவில்லை. உம்... நான் சொல்லி நீ எங்கே கேட்கப் போகிறாய்?... கொஞ்சம் எலுமிச்சம்பழ ஜூஸ் சாப்பிட்டு விட்டுப்போ!'' என்றாள் மங்களம்.



மகளிர் பகுதி

குறுந்தொகையில் ஒரு சமையலறைக் காட்சி


நல்லி கெட்டியான தயிரை விரல்கள் நோகப் பிசைந்து நெருப்பில் ஏற்றிப் பாகம் செய்கிறாள். (தயிரைப் பிசைந்து தாளித்துச் செய்யும் ஒருவகைக் குழம்பு நிம்புளிப் பாகர் எனப்பட்டது) இடுப்பில் மாசற்ற தூய ஆடையை அணிந்திருக்கிறாள். சமையல் செய்யும் விரைவில் உடை நெகிழ்கிறது. விரல்களைக் கழுவிக் கொள்ளாமலேயே நெகிழ்ந்த ஆடையைச்



சரிசெய்து கொள்ள வேண்டி யுள்ளது. தாளிதம் செய்யும்போது குழம்பையும் துழாவிக் கொண்டிருக்க வேண்டும். குவளை மலர் போன்று குளிர்ந்த அவளது கண்களில் தாளிப்பின் புகை படிய, நீர் சுரக்கிறது. ஆயின், கணவன், ''நிம்புளிப் பாகர் மிக நன்று'' என்று சொல்லிக் கொண்டே உண்ணும் போது நல்லியின் முகம் மலர்கிறது.

—'சூடாஜெகன்'

காஸ் அடுப்பு வைத்திருப்பவர்கள் புது சிலிண்டர் வந்தவுடன் சரசாக்பீலால் உபயோகிக்க ஆரம்பிக்கும் தேதியை சிலிண்டர் மீதே எழுதி விடவும். எப்போது காஸ் தீரும் என்று தோராயமாக அனுபவத்தில் அறிய இது உதவும்.



— ''சூடாஜெகன்''

''பழம் வாங்கினாயா? என்ன விலை?''

''பழமா! அது எதற்கு? பாட்டில் பாட்டிலாகப் பண்ணி விற்கிறார்கள். ஒரு பாட்டில் இரண்டு மாதம் கூட வரும்!'' என்று அவன் ஜூஸ் தயாரிக்க ஆரம்பித்தாள்.

''பார், கல்யாணி! எனக்கும் சரி... அவருக்கும் சரி... நேரத்தை உபயோகம் இல்லாமல் செலவழிப்பதில் பிடித்தம் இடையாது. வெந்நீர் அடுப்பை ஊதி ஊதிக் கண்ணைக் கெடுத்துக் கொள்ள மாட்டேன். ஒரு ஹீட்டர் இருக்கிறது. பத்து நிமிஷங்களில் வெந்நீர் ரெடி. அடுப்படியில் வெந்து பட்சணம் செய்ய மாட்டேன். கடையில் போனால் நம்மை விட நல்ல பதத்தில் நன்றாகச் செய்து தருகிறார்கள். கிலோக் கணக்கில் நிறுத்து வாங்கி வந்து விடுவார். என் ஸ்பயன்களுக்காக நான் இதுவரை ஒரு தையல் கடையும் ஏறினது இல்லை. எல்லாம் ''ரெடிமேட்'' தான். நல்ல டிசைன். நல்ல தையல்.''

கல்யாணி சிரித்தாள். ''உங்கள் வீட்டில் கையால் எடுத்துச் சாப்பிடுவீர்களா?' இல்லை, யாராவது ஊட்டி விடுவார்களா?'' என்று கேட்டாள்.

''உனக்குப் பரிகாசமாகத்தான் இருக்கும். என் நாத்தனாரும் உன்னைப் போலத்தான். அப்போதைக்கு அப்போதே காப்பிக் கொட்டை அரைத்து டிகாக்ஷன் இறக்கிக் குடித்தால்தான் காப்பி என்பாள். ''இன்ஸ்டண்ட்'' காப்பிப் பொடி இருக்கும் போது ஏன் இந்த அவஸ்தை?''

கல்யாணி ''லெமன் ஜூஸ்'' குடித்தாள். ''நன்றாக இருக்கிறதே'' என்றாள்.

''ஏன் இருக்காது. இதுவே அவர்கள் ''பிஸினஸ்''. நீ போட்ட காப்பி ஒரு நாள் நன்றாக இருந்தால் இன்னொரு நாள் சரியாக அமையாது. இன்றைக்கு நீ அரைத்துப் போடும் பொடி முன்பை விட நன்றாகவும் அமையலாம். மோசமாகவும் போகலாம். ஆனால் அவர்கள் தங்கள் பழக்கம் காரணமாக ஒரே சீராகச் செய்து தருகிறார்கள்.. நாம் ஏன் அலட்டிக் கொள்ள வேண்டும்?''

''அப்போது உன் வீட்டில் எல்லாம் ரெடிமேட்தான்!''

''ஏன்? வீடே ரெடிமேட்தான். கட்டிய வீட்டைத்தான் வாங்கினோம். பிளாட் வாங்கி மரத்துக்கும் சிமெண்டுக்கும் அலைந்து... வெயிலில் உடம்பைக் கறுக்க அடித்துக் கொண்டு என்ன பிரமாதமாகச் சாதித்து விடுகிறார்கள்? ஏமாற்றத் தெரிந்தவன் எப்படியும் ஏமாற்றுவான்!''

''சரி. உன் பிள்ளை ரவி எப்பொழுது அமெரிக்காவிலிருந்து வருகிறான்? போய் ரெண்டு வருஷம் ஆகிறதே.''

''அதைச் சொல்லத்தான் கூப்பிட்டேன். அவனுக்கு அடுத்த மாதம் கல்யாணம். என்றைக்கு வருகிறான் தெரியவில்லை. 'லெட்டர்' எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறேன். தபால்காரர் வரும் சமயம்தான்!'' எனக் கடிகாரத்தைப் பார்த்தாள் மங்களம்.

''அம்மா, போஸ்ட்!'' என்ற குரல் கேட்டது. மங்களம் ஓடிப் போய் வாங்கினாள். வெளிநாட்டுத் தபால் தான். அவசரம் அவசரமாகப் பிரிக்கும் போது உள்ளிருந்து ஏதோ விழுந்தது. கல்யாணி குனிந்து எடுத்தாள். மங்களம் தன் விழிகளைக் கடிதத்தில் ஓட விட்டாள்.

''....உனக்கு நான் சிரமம் வைக்கவில்லை. பெண் பார்த்து, அழைப்பிதழ் அடித்து, ஊரைக் கூட்டும் வேலை வேண்டாம். என் கல்யாணம் இங்கே ''ஸிம்பிளாக'' ஒரு ''சர்ச்''சில் முடிந்து விட்டது. மணமகள் மட்டும் இல்லை. உனக்குப் பேரப்பிள்ளை கூட இருக்கிறான்.''

மங்களம் வெளிறிப் போன முகத்துடன் நிமிர்ந்தாள். கல்யாணி கையில் வைத்திருந்த புகைப்படத்தில் மங்களத்தின் 'ரெடிமேட்'' மருமகள் தன் கைக் குழந்தையுடன் மாமியாரைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தாள்.



பாகல் பிரச்னை

எங்கள் வீட்டில் ஒரு பிரச்னை. தோட்டத்தில் கத்தரி, வெண்டை, புடல் முதலிய காய்களுக்கிடையில் பாகலும் விளைகிறது. அதை விற்பதற்கும் மனம் இல்லை. தினம் தினம் பாகற்காய் பொரியலும், பாகற்காய் குழம்பும் வைத்தால் யாருக்குத்தான் கோபம் வராது? என் கணவர் ''பாகற்காயைத் துவையல் அரைத்துப் பாரேன்'' என்று கூறினார். இதைக் கேட்டதும் ''பாகற்காய் துவையலா?'' என்று வீட்டில் என் மாமியார் முதலியவர்கள் கேலியாகச் சிரித்தனர். எனினும் நான் அவர் கூறியது போல அரைத்துப் பார்த்தேன். விளைவு, அரைத்த எனக்குக் கூட சிறிது துவையல் பாக்கி இல்லை! என் மாமியாரும் ''இந்த யோசனை இதுவரை எனக்குத் தோன்றவில்லையே'' என்று தம் பிள்ளையைப் பாராட்டினார்.

பாகற்காயைச் சிறிய துண்டங்களாக நறுக்கி, நன்கு எண்ணெய் விட்டு வதக்கி வைத்துக்கொள்ளவும். தேவையான அளவு மிளகாய் வற்றல், உளுத்தம் பருப்பு (கூடுதலாகவே இருக்க வேண்டும். தோலி உள்ள பருப்பு சுவையாக இருக்கும்) இவற்றை வறுக்கவும். மேற் சொன்னவற்றுடன் தேவையான அளவு புளி, உப்பு, சர்க்கரை, சிறிது தேங்காய் வைத்து அரைத்துப் பாருங்கள். மிகவும் ருசியாக இருக்கும். கசப்பே தெரியாது.

-சந்திரா லக்ஷ்மணன்

விஷமம் செய்யும் குழந்தைகளைப் பெரியவர்கள், 'வா, அப்பா வந்ததும் சொல்கிறேன்' என்று பயமுறுத்துவது வழக்கம். இப்படிச் செய்வதால், பிஞ்சு உள்ளத்தில் அச்சம் உண்டாவதோடு கோள் சொல்லும் தீய பழக்கமும் மறைமுகமாக ஏற்படுகிறது. இதற்குப் பதிலாக, 'நாம் அப்பாவிடம் போய்க் கேட்கலாம்' என்று கூறுவதால் பிறருக்கும் சம வாய்ப்பு அளிக்கும் மனப்பான்மை வளரும்; நியாயத்தை மதிக்கும் போக்கும் உருவாகும்.

குழந்தை வளர்ப்பு நிபுணர் கூறியது -கே. ஜெயந்தி


சிந்தால்
இந்தியாவில் துர்நாற்றம் நீக்கும் ஒரே சோப்பு!
CINTHOL
Godrej
CINTHOL
DEODORANT AND COMPLEXION SOAP
CINTHOL
வியர்வையால் உண்டாகும் உடல் துர்நாற்றத்தைத் திறனுடன் தடுக்கிறது.
எவ்வொரு சோப்பும் செய்யாத அளவில் உங்களை முழுமையான புத்துணர்வுடன் திகழச் செய்கிறது.
சிறப் பராமரிப்பிற்காக சரும வல்லுநர்களால் சிபாரிசு செய்யப்பட்டது.

குங்குமம் டாக்டர்!

நன்மை விளைவிக்கும்: தொல்லையும் கொடுக்கும்!

"பத்து நாளா ஒரே நமைச்சலா இருக்குதுங்க. சொறிஞ்சு, சொறிஞ்சு இரத்தம் கசிய ஆரம்பிச்சுடுத்து. பகல்லே வேலையிலே கவனமா இருக்கிறதாலே அவ்வளவா சொறியறது இல்லே. இரவு வீட்டுக்கு வந்து சாப்பிட்டுப் படுத்ததும் நமைச்சல் அதிகமாவுது. சொறியக் கூடாதுன்னு தெரிஞ்சும், சொறியும்படியா ஆயிடுதுங்க!" என்று கூறியவாறே பனியனைக் கழற்றிக் கையை மேலே தூக்கி அக்குளைக் காண்பித்தார், பங்காருசாமி.

நான் அவரைப் பரிசோதனை செய்ய ஆரம்பித்ததும், "'கக்கூஸ் படை' தானுங்களே இது? களிம்பு ஏதாச்சும் தடவினா குணமாயிடுங்களா? ஊசி போட்டுக்க வேண்டாமே, டாக்டர்?" என்று கவலையுடன் கேட்டார், பங்காருசாமி.

அதிகமாகச் சொறிந்ததன் விளைவாக இரத்தம் கசியும் வட்ட, வட்டமான புண்களைப் பார்த்ததுமே அது 'ரிங் வோர்ம்'- (Ringworm) எனப்படும் 'ஃபங்கஸ்' (Fungus) தான் என்பது தெரிந்தது. வட்டமான புண்ணின் விளிம்பிலிருந்து சிறிது திசு எடுத்துச் சோதனைக்கு அனுப்பி விட்டு, பங்காருசாமிக்கு மாத்திரைகளும் மேல்பூச்சு மருந்தும் எழுதிக் கொடுத்தேன்.

"படைக்கு அடிப்படைக் காரணமான 'ஃபங்கஸ்' ஒருவகைக் காளான் தானே?"

"ஆமாம். 'கெரடோலிடிக் ஃபங்கஸ்' (Keratolytic Fungus) காரணமாகச் சருமத்தில் படைநோய் ஏற்படுகிறது. 'நான்–கெரடோலிடிக்' (Non Keratolytic) ஃபங்கஸ் காரணமாகச் சருமத்தில் தேமல் ஏற்படும். இது உடலின் பல பகுதிகளில் தோன்றும். சருமத்தின் நிறம் மாறுபட்டுத் தோன்றுவதால் பார்வைக்குச் சற்று விகாரமாக இருக்கலாம். ஆனால், இதனால் உடலுக்குத் தீங்கு ஏதும் இல்லை. பூஞ்சாளம் அல்லது பூஞ்சக் காளம் என்று சொல்லுகிறோமே – அதுவே தான் இந்த ஃபங்கஸ்."

"பூஞ்சக் காளத்திலிருந்து தானே அலெக்சாண்டர் ஃப்ளெமிங் பெனிசிலினைக் கண்டு பிடித்தார்?"

"ஆமாம்; ஃபங்கஸ் நன்மையும் விளைவிக்கும். பெனிசிலினைக் கண்டு பிடிக்க உதவிய இதிலிருந்து சிட்ரிக் அமிலம் தயாரிக்கலாம். சர்க்கரைத் தொழிற்சாலையில 'ஆல்கஹால்' தயாரிக்கவும் இது பயன்படுகிறது. இந்தப் பராஸைட் ஜீவி மனித உடலிலும், விலங்குகளிலும் வளர்கிற மாதிரி மரக்கட்டை முதலிய உயிரற்ற பொருள்களிலும் வளர்ந்து பெருகுவதுண்டு."

"படை நோய்க்குச் சிகிச்சை என்ன?"

"கிரிஸோஃபல்வின் (Grisofulvin) எனப்படும் மாத்திரைகளைச்சுமார் மூன்று வாரங்கள் உள்ளுக்குச் சாப்பிட வேண்டும். நமைச்சலைத் தடுக்க 'ஆண்ட்டி ஹிஸ்டமின்' (Anti histamine) மாத்திரைகள் உதவும். காரம்புச் சத்து குறைவான சோப் உபயோகித்துக் குளிப்பதும் பாதிக்கப்பட்ட பகுதியைக் கழுவுவதும் நல்லது. கிருமிநாசினி (Antiseptic) லோஷன் எதுவும் உபயோகிக்கக் கூடாது."

"இது எப்படிப் பரவுகிறது? வீட்டில் ஒருவருக்கு வந்தால் மற்றவர்களுக்குப் பரவாமல் தடுக்க என்ன வழி?"


"நேரிடைத் தொடர்பினால், குறிப்பாகத் துணிகளின் மூலம் பரவுகிறது இது. சலவைக்குப் போடும் துணிகள் அசுத்த நீரில் துவைக்கப்படுவதால் இந்நோய் பரவுவதன் காரணத்தாலேயே இதற்கு 'டோபி இட்ச்' (Dhobi itch) என்ற பெயரும் ஏற்பட்டுள்ளது. படை கண்டவர்கள் உபயோகிக்கும் துணிமணிகளை அன்றாடம் கொதிக்கும் நீரில் ஊறப் போட்டு உலர்த்துவது அவசியம். தேமலுக்கு, புகைப் படங்களைக் கழுவப் பயன்படும் 'ஹைபோ' (Hypo Solution) உபயோகிக்கலாம். நகச்சுத்தி வந்தால், படைக்குக் கொடுக்கப்படும் 'கிரிஸோஃபல்வின்' மாத்திரைகளைச் சிலர் தாங்களே வாங்கிச் சாப்பிடுகிறார்கள். நகச் சுத்திக்கு இம் மருந்து கூடாது. மாத்திரைகளை டாக்டர் ஆலோசனையின் பேரிலேயே சாப்பிட வேண்டும்."

டாக்டர் எஸ். கோவிந்தராஜன் கூறக் கேட்டு எழுதியவர்: ஆர். பி.



நகைச்சுவை நாடகம்

பாராளுமன்றம் பார்த்த பஞ்சாமிர்தம்!



[எழுத்தாளர் பஞ்சாமிர்தத்தின் வீட்டுக் கூடம். ஒரு பக்கமாகப் பஞ்சாமிர்தத்தின் மனைவி பெரியநாயகி கறிகாய் நறுக்கிக் கொண்டிருக்கிறாள். மறு பக்கம் பஞ்சாமிர்தத்தின் பையன் ராஜு பழைய பேப்பர்களை ஒழுங்குபடுத்திக் கொண்டிருக்கிறான்.]

பெரியநாயகி: ஏண்டா ராஜு! தில்லிக்குப் போயிருக்கிற உங்க அப்பாவைப் பற்றித் தகவலே இல்லே! மனுஷருக்கு ஒரு கடிதாசு எழுதக் கூடவா நேரம் இல்லாமல் போயிடுத்து?

ராஜு: நானும் அதைத்தான் கேட்க வேண்டும் என்று இருந்தேன். அவர் கலந்து கொள்வதற்கென்று போன எழுத்தாளர் மகாநாடுகூட முடிஞ்சு பத்து நாட்களாயிற்றே?

பெரியநாயகி: அவர் இந்த வருஷத்து மகாநாட்டுக்குத்தானே போறதாகச் சொன்னார்?

ராஜு: உனக்கு என்னம்மா இப்படி ஒரு திடீர் சந்தேகம்? அடுத்த வருஷ மகாநாட்டுக்கு இப்பவே அழைப்பை அனுப்பிச்சு வைப்பார்களா?

பெரியநாயகி: இல்லே! உங்க அப்பாவுக்கு அடிக்கடி தேதிக் குழப்பம் வந்துவிடும். இப்படித்தான் ஒரு சந்தர்ப்பத்தில் ஏப்ரல் மாசம் ஐந்தாம் தேதி நடந்து முடிந்து போன கல்யாண அழைப்பிதழைச் சாவகாசமாகப் பார்த்து, மே மாசம் ஐந்தாம் தேதி அந்தக் கல்யாண மண்டபத்துக்கு வரவேற்பு நேரத்துக்குப் போய் நின்றார்.

ராஜு: கல்யாண மண்டபத்திலே ஈ காக்காய் இருந்திருக்காது. காவற்காரன் மாத்திரம் அப்பாவுக்கு ஸ்பெஷல் வரவேற்புக் கொடுத்திருப்பான்!

பெரியநாயகி: அசடு வழியக் கல்யாணப் பைக்குப் பதிலாகக் காரம் பக்கோடாப் பொட்டலத்தை ஹோட்டலில் வாங்கிக் கொண்டு வந்து சேர்ந்தார்! அது மாதிரி இப்போதும்....

ராஜு: போம்மா! நீ ஒண்ணு! அவர் இப்போ தில்லிக்குப் போயிருக்கிற நேரம் கலகலப்பான நேரம். தேர்தல் முடிந்து புது மந்திரிகள் எல்லாம் பதவிக்கு வந்திருக்கிறார்களே! அந்த அமர்க்களத்தையெல்லாம் பார்த்து ரசித்து விட்டு வருவார்!

பெரியநாயகி: பேசாம உங்க அப்பாவும் தேர்தலிலே நின்று ஒரு மந்திரியாப் போயிருக்கலாம்!

ராஜு: அப்படி அவர் தேர்தலிலே குதித்திருந்தாலும் நீயே அவருக்கு வோட்டுப் போட்டிருப்பாயோ? எவர்சில்வர் அடுக்கு வாங்கிக்கொடுத்தால்தான் வோட்டு என்று வீட்டிலேயே பேரம் பண்ணியிருப்பியே?

பெரியநாயகி: நான் அதுக்குச் சொல்லலேடா! ஒரு மந்திரியாயிட்டா, அவர் வாயிலிருந்து உதிருகிற அத்தனை வார்த்தைகளும், அதிலே அர்த்தமே இல்லாதபோனாலும், எல்லாம் அச்சாகிப் பேப்பரிலே பத்தி பத்தியா வந்துடறது. சாதாரண எழுத்தாளராக இருந்து கை வலிக்க எழுதி, எழுதி, அது பத்திரிகையிலே வெளியாகுமான்னு ஏக்கத்தோடு கன்னத்திலே கை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்க வேண்டாம் பாரு!

ராஜு: பேஷ்! பேஷ்! உனக்கு இதுக்காகவாவது ஒரு மந்திரி மனைவி பதவி கிடைத்தால் தேவலை என்று தோன்றுகிறதாக்கும்?

பெரியநாயகி: வாசலில் ஏதோ டாக்ஸி வந்து மீட்டர் போடற சத்தம் கேட்கிறது. யாருன்னு பாரு!

ராஜு: அப்பாதான்! திடீர்னு வந்து குதிச்சுட்டார்! வாங்கப்பா! பிரயாணம் எல்லாம் எப்படி?

(பஞ்சாமிர்தம் கையில் பையுடன் உள்ளே வருகிறார்.)

பஞ்சாமிர்தம்: ஹூம்! ஹூம்! எல்லாம் சௌகரியமாக இருந்தது. அதென்னடா பழைய பேப்பர்களையெல்லாம் அடுக்கிக் கொண்டிருக்கே?... மனுஷன் தலை மறைஞ்சாப் போதும். அகப்பட்டதையெல்லாம் சுருட்டிக் காசாக்கணும்கிற ஆசையா?... அதையெல்லாம் அப்படியே வை!... இந்த மாதிரிப் பல காரியங்கள் இந்த வீட்டிலே நடக்கிறது. இதற்கு ஒரு விசாரணைக் கமிஷனை நியமிக்க வேண்டியதுதான்!

பெரியநாயகி: உங்கப்பா என்னடா வேகமாச் சொல்றார்? விதரணையாகக் காரியம் செய்ய இந்த வீட்டிலே இருக்கிறவாளுக்குத் தெரியலியாமா?...

ராஜு: இல்லேம்மா! அப்பா தில்லியிலிருந்து வந்திருக்கிறாரோ இல்லியோ? அங்கே இப்படித்தான் எதற்கெடுத்தாலும் விசாரணைக் கமிஷன்னு வைக்க ஆசைப்படுவா! இந்தப் பழைய பேப்பர்களை யெல்லாம் விற்று


நீயும் நானும் பண மோசடி பண்ணறோமாம்!

பெரியநாயகி: ஒண்ணொன்னுமும்! உனக்கு எதுக்குடா இந்த வம்பு! வீடு துப்புரவா நீட்டா இருக்கணும்னு ஆசைப்பட்டு அடுக்கிறேன். அது ஒரு பெரிய குற்றமா?...எல்லாக் குப்பையையும் உங்கப்பாவின் காலடியிலே கொட்டு! அவரே அடுக்கிக்கட்டும்! இல்லே, பீஷ்மர் அம்புப் படுக்கையில் படுத்துக் கொண்டிருந்த மாதிரி இவர் பழைய பேப்பர்ப்படுக்கையிலே படுத்துப் புரளட்டும்!

பஞ்சாமிர்தம்: திருமதி பெரியநாயகி அவர்களே!

பெரியநாயகி: ஏது! அழைப்பு அழுத்தம் திருத்தமாக வர்றது. என் பெயர் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது.

ராஜு: அப்பா ஏதோ பாராளு மன்றப் பாணியிலே பேசுறார்னு நினைக்கிறேன். ஒரு நாள் இரண்டு நாள் பார்வையாளர் காலரியில் போய்



உட்கார்ந்திருப்பார். குறுக்கே பேசாம அவர் என்ன சொல்றார்னு கேளு!

பெரியநாயகி: ஆமாம்! எனக்கு வேறே வேலே இல்லே பாரு! அடுப்பிலே சாதம் கொதிக்கிறது.... உங்க அப்பா காப்பியை ஸ்டேஷனிலேயே குடிச்சுட்டு வந்துட்டாரான்னு கேளு! டிகாக்ஷன் மிச்சம் இருக்கிறதாத் தெரியலே!

பஞ்சாமிர்தம்: ரொம்ப அழகாக இருக்கிறது. ஒரு குடும்பத் தலைவனுக்குக் கிடைக்கிற உபசாரம்!

பெரியநாயகி: நீங்க ரெண்டு வாரம் ஊருக்குப் போயிட்டு இப்போ உங்க வீட்டுக்குத் தான் திரும்பி வந்திருக்கிறீர்கள்! ஏதோ

கோமதிஸ்வாமிநாதன்

புதிசாப் பிரதம மந்திரியாகப் பதவிப் பிரமாணத்துக்கு வந்து நிற்கிற தோரணையிலே பேசுகிறீர்களே! காப்பி தயார் பண்ணட்டுமா?

பஞ்சாமிர்தம்: முதலில் 'இப்படி எடுத்தெறிந்து பேசும் உன் குணத்தை நீ மாற்றிக் கொள்ள வேண்டும்! எந்தச் சூழ்நிலையிலே அந்தக் காலத்திலே உன் அப்பா என்னை மாப்பிள்ளையாகத் தேடி உன்னை என் கழுத்தில் கட்டினார் என்பதைத் தெரிந்து கொள்ள ஒரு விசாரணைக் கமிஷன் நியமிக்க வேண்டும் என்று நினைக்க ஆரம்பிக்கிறேன்.

ராஜு: அப்பா! உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமோ? அம்மாவோட தாத்தா அந்தக் காலத்திலேயே உங்களை மாப்பிள்ளையாகத் தேர்ந்தெடுக்க 'அப்ஜெக்ட்' அதாவது ஆட்சேபணை தெரிவித்தாராம். ஆனால் அம்மாவோட—அப்பா தான்...

பஞ்சாமிர்தம்: அதற்கு ஏதாவது எழுத்து பூர்வமாக ஆதாரம் இருக்கான்னு பார்க்கணும்!...

பெரியநாயகி: எங்க தாத்தாவுக்கு எழுதப் படிக்கவே தெரியாதாம்! இப்போ என்ன பண்ணுவேள்?

பஞ்சாமிர்தம்: இதோ பாரு மிஸஸ் பஞ்சாமிர்தம்! இனிமேல் இந்த வீட்டிலே என் கொடிதான் பறக்கும்! நீ மரியாதையாய் ஒதுங்கிக்கணும். உன் அட்டகாசம், அதிகப் பிரசங்கம் எல்லாவற்றையும் கட்டி வைக்கணும்!

பெரியநாயகி: இந்தாடாப்பா ராஜு! பீரோவிலே கலர் கலரா ஏதோ ரவிக்கைத்

துணி மிச்சம் எல்லாம் இருக்கு. அந்தத் துணிகள், சணல் கயிறு, ஒரு கம்பு, வேண்டுமானால் ஸ்டூல் எல்லாவற்றையும் எடுத்து உங்க அப்பா கிட்டே கொடு! கொடியைக் கட்டிட்டு வந்து, கொதித்துக் கொண்டிருக்கும் சாதத்தையும் அவரே வடிக்கட்டும்!... நான் இந்த விநாடியிலேயே ஒதுங்கிக்கிறேன்! ஆமா!

ராஜு: அப்பாவுக்குப் பிரயாணக் களைப்பிலே ஏதாவது சொல்லத் தோன்றும்! நீ கொஞ்சம் சும்மா இரேன்! ஏனப்பா! தில்லியிலேருந்து எப்போ புறப்படுகிறேன் என்று ஒரு கடிதாக போடக் கூடாதா?

பஞ்சாமிர்தம்: நான்தான் கடிதாக போட்டிருந்தேனே! வந்து சேரலே?

பெரியநாயகி: விஷயத்தை எழுதிவிட்டு விலாசம் எழுதறபோது உங்க அப்பா அந்த இடத்திலே 'ஆசிரியர், வெண்ணிலா பத்திரிகைக் காரியாலயம்' என்று தெளிவா எழுதிப் போஸ்ட் பண்ணியிருப்பார். அவருக்குப் பத்திரிகைக் காரியாலயத்துக்குக் கடிதம் எழுதித்தானே பழக்கம்! அங்கே அந்த ஆசிரியர் இந்தக் கடுதாசியை வைத்துக்கொண்டு விழிப்பார்!

ராஜு: வேறு ஒரு தபால் கூட நீங்கள் ஊரில் இல்லாதபோது வர்றலே!

பஞ்சாமிர்தம்: இந்தத் தெரு தபால்காரர் ஒழுங்கா....

ராஜு: அவர் மேலே விசாரணைக் கமிஷன் ஒன்றும் அவசியம் இல்லேன்னு நினைக்கிறேன்! நமக்கு இருந்தால் கொண்டுவந்து கொடுக்காமலா இருப்பார்?... யாரும் போடலே போலிருக்கு!

பெரியநாயகி: வழக்கமாத் திரும்பி வர கதைகளைக் கூடக் காணோம்டா ராஜு!

ராஜு: என்னம்மா! பதினைஞ்சு நாளாப் போடாத சண்டையை ஒரே மணி நேரத்திலே போடணுமா?...அப்பாவுக்குக் காப்பி கொண்டு வா. காப்பி உள்ளே போனால் 'நார்மல்'லாகி விடுவார்!

பஞ்சாமிர்தம்: என்னடா பொடி வைச்சுப் பேசறே? நான் எப்பவும் போலத்தான் இருக்கேன்!

ராஜு: வேறொன்றுமில்லே! கொஞ்சம் வீராவேசத்தோட இருக்கிறீர்கள்! வடக்கே இந்த நேரத்தில் தேர்தல் வெற்றி ஆவேசம் கொஞ்சம் ஜாஸ்தி! அந்தக் காற்று உங்கள் மேலேயும்....

பெரியநாயகி: நான் காப்பி கொண்டு வர்றேன். ஆனால் அது ஸ்ட்ராங்காக இல்லே! வீக்காக இல்லே என்று உங்க அப்பா மறுபடியும் விசாரணைக் கமிஷன் என்று ஆரம்பித்துவிடக் கூடாது.

பஞ்சாமிர்தம்: இப்போ இல்லாத போனாலும் வேறு ஒரு விஷயத்துக்காகவாவது உன்மேல் விசாரணைக் கமிஷன் வைத்துத் தான் தீரவேண்டும் போலிருக்கிறது.

ராஜு: சும்மா இருங்க அப்பா! முதலிலே காப்பி குடிக்கிற வழியைப் பாருங்க.

பஞ்சாமிர்தம்: இல்லேடா! நான் தில்லிக்குப் புறப்பட்ட அன்று உங்க அம்மா என் கையிலே புளியஞ் சாதம் கட்டிக் கொடுத்தாள். அதைச் சாப்பிட்டுத் தொலைத்ததால் என் வயிறு கெட்டு அவஸ்தைப்பட்டேன். அதற்கு அவள்தான் பொறுப்பு. அதற்காக் ஒரு 'ஹை பவர் விசாரணைக்கமிஷனை' வைத்தாகவேண்டும்.

ராஜு: மிளகாய், புளி சப்ளை பண்ணின மளிகைக் கடைக்காரர் கூட விசாரணைக்கு உட்பட வேண்டுமா இல்லையா?

பெரியநாயகி: உங்க அப்பா வயிறு எப்படா சரியாக இருந்தது? கேளேன்! போன மாசம் ஆஞ்சனேயர் கோவில் பிரசாதம் என்று சர்க்கரைப் பொங்கலை விழுங்கி விட்டு இரண்டு நாட்கள் வயிற்று உபாதையால் அவஸ்தைப்பட்டார். அதற்காக ஆஞ்சநேயர் கோவில் மடைப்பள்ளியின் மேலே விசாரணைக் கமிஷனா?

(பக்கத்து வீட்டுப் பங்காருசாமி வருகிறார்.)

பங்காருசாமி: என்ன பஞ்சாமிர்தம் சார்! எப்போ டில்லியிலிருந்து வந்தாப் போலே!

பஞ்சாமிர்தம்: இப்பத்தான் வந்து உட்கார்ந்தேன். இன்னும் பையைக் கூடத் திறக்கலே!

பங்காருசாமி: பார்லிமெண்ட் கூட்டத்தையெல்லாம் போய்ப் பார்த்தீங்களா?

பஞ்சாமிர்தம்: இரண்டு நாள் போயிருந்தேன். பார்வையாளர் பாஸ் கிடைத்தது.

பங்காருசாமி: பரவாயில்லையே! புது அரசு ரொம்ப வேகமாகவே செயல்பட ஆரம்பிச்சிருக்கு இல்லையா?

பஞ்சாமிர்தம்: ஆமாம்! எல்லாப் பழைய விஷயங்களையுமே விசாரணை பண்ணித் தீர்த்துக் கட்ட ஒத்தைக் காலில் நிற்கிறா!

பங்காருசாமி: விசாரணை என்றதும் ஞாபகம் வர்றது!... நீங்க போன வருஷத்திலே இந்த இருபது அம்சத் திட்டங்களைப் பற்றியெல்லாம் சிலாகிச்சு நெருக்கடி நிலையினால் விளைந்த லாபங்களைப் புகழ்ந்து நாலைந்து கட்டுரைகள் எழுதினீர்களோல்லியோ?

பஞ்சாமிர்தம்: ஆமாம்! அத்தனையும் முதல் தரமான கட்டுரைகள். அதைப் பாராட்டி ரொம்பப் பேர் கடிதாக எழுதியிருந்தா.

பங்காருசாமி: அந்த மாதிரிக் கட்டுரைகள் எழுதினவர்கள் மீதெல்லாம் ஏன் ஒருவிசாரணைக் கமிஷன் வைக்கக் கூடாது என்று ஒரு பார்லிமெண்ட் அங்கத்தினர் நேற்று ஒரு கேள்வி கேட்டாராம்! இன்று காலையிலே ரேடியோவிலே சொன்னார்கள். நீங்க நேற்று முழுவதும் ரயிலிலே இருந்திருப்பீங்க. தெரிஞ்சிருக்காது!... நான் சாவகாசமா வந்து தில்லி புராணம் கேட்கிறேன். (போகிறார்)

பஞ்சாமிர்தம்: அக்கிரமமா யிருக்கே! எதுக்குத்தான் விசாரணைக் கமிஷன்னு இடையாது போலிருக்கே!... ராஜு ஒரு பேப்பர் எடுடா! 'ஆசிரியருக்குக் கடிதங்கள்' பகுதிக்கு ஒரு கடிதாக எழுதணும்.

பெரியநாயகி: இந்தாருங்கள் காப்பி! அப்புறம் நம்ம கல்யாணத்தைப் பற்றின விசாரணைக் கமிஷனை எப்போ வைத்துக் கொள்ளப் போகிறீர்கள்? முதலில் புளியஞ்சாதக் கமிஷனை முடிச்சுடலாமா?

பஞ்சாமிர்தம்: தாயே! பரதேவதே! சும்மா இருக்க மாட்டே! பையிலே தாத் பேடா இருக்கு! எடுத்து வாயிலே போட்டுண்டு போய்ச் சாதத்தை வடி! (எழுந்திருக்கிறார்)

சேரமான் காதலி

அத்தியாயம் 22

அதுதான் சமயம்

கண்ணதாசன்

“உன் முடிவு எனக்கு நன்றாகத் தெரிகிறது. நீ நாடும் பெண்களின் முகத்தையும் பார்; இந்த நாட்டையும் பார். இதை நீ காதல் என்று சொல்ல முடியாது. விதி உன் தலையில் ஏறி விளையாடும் விளையாட்டு என்று கருது. கண்மூடித்தனமான ஆசைகளால் ஒரு மாபெரிய வரலாற்றை மாற்றி எழுத நினைக்காதே. கடைசியாகச் சொல்கிறேன். நாடு மன்னனை இழக்கலாம்; ஆனால் தன் நன்மை தீமைகள் அனைத்தையும் எந்தத் தெய்வத்திடம் ஒப்படைத்திருக்கிறதோ, அந்தத் தெய்வத்தையே அடித்தளமாகக் கொண்ட சமயத்தை இழக்க முடியாது'' என்றான் சீர்மாறன்.

''நீங்கள் அனைவருமே சமயத்தைக் காட்டி என் வாழ்வில் குறுக்கிடுவதைப் பார்த்தால் உங்கள் சமயத்தின் மீதே எனக்கு வெறுப்பு ஏற்படுகிறது. நானும் சைவன்தான். ஆனால் கட்டுத் தளைகளும், காவல் வேலியுமாக அது என்னைச் சிறைப்படுத்தும் என்று நான் ஒருநாளும் கருதியதில்லை. எப்படிச் சுற்றி வளைத்தாலும் என் முடிவுக்கே தான் நான் வருவேன். தலைவன் என்பவன் கருத்துக்களை உருவாக்குகிறவனே தவிர, பிறரது கருத்துக்களுக்குத் தன்னை ஒப்புக் கொடுத்து விடுகிறவனல்ல. சீர்வல்லபா! மீன் கொடி, விற்கொடியிடம் காட்டுகிற பரிவுக்கு என் நன்றி. ஆனால் அந்த மீன் வில்லை விழுங்கினாலும் விழுங்கலாம்; என்னை முடியாது'' என்றார் சேரமான் பெருமாள்.

''நான் சொல்வதைக் கேளுங்கள். பெண்ணாசையால் மதியிழந்தான் சேரமான் என்ற பழிச் சொல்லுக்கு ஆளாகாதீர்கள். தம்பிரான் சுவாமிக்கோ, எனக்கோ உங்கள் சொந்த வாழ்க்கையில் குறுக்கிடுவதில் என்ன பயன்? எல்லாம் தக்ஷிண பூமியின் சமயப் பாதுகாப்பைக் கருதியே. தயைகூர்ந்து உங்கள் முடிவை மாற்றிக் கொள்ளுங்கள். அந்தப் பெண்களைத் திரும்பியனுப்புங்கள்!'' என்று பணிவோடு கேட்டான் சீர்வல்லபன்.

''இதில் அர்த்தமில்லை. அதை அங்கீகரித்து விட்டு அடுத்த விஷயத்தைப் பேசு!'' என்றார் சேரமான்.

''அதை அங்கீகரிப்பதற்காகவா நான் முன்னால் வந்தேன்....?'' என்றான் சீர்வல்லபன்.

''பின்னால் யார் வருகிறார்கள்...?'' என்று கேட்டார் சேரமான் பெருமாள்.

''என் படை வருகிறது!'' என்றான் சீர்வல்லபன்.

''ஓகோ!'' என்று உரக்கச் சிரித்த சேரமான், ''தலைவர் இங்கிருக்கப் படை தனியாக வருகிறதோ....?'' என்றார் ஏளனமாக.

''இல்லை படை ஒரு தலைமையோடு தான் வருகிறது. இப்போது அதற்குத் தலைமை தாங்குவது மானிச்சன்!'' என்றான் சீர்வல்லபன்.

''மானிச்சன்! மானிச்சன்!'' என்று தூணிலே ஓங்கிக் குத்திய சேரமான், கொஞ்ச நேரம் அந்தத் தூணிலேயே சாய்ந்து நின்று, ''இனி நாம் பேசுவதற்கு ஒன்றுமில்லை!'' என்று கூறிய படியே திரும்பிப் பார்த்தார்.

அங்கே சீர்வல்லபன் இல்லை.

பிரமை பிடித்தவர் போல் தாம் நின்ற இடத்திலிருந்தே அரண்மனையைச் சுற்றிப் பார்த்தார்.

கண் கலங்கியபடியே ஒரு கதவோரம் காட்சி தந்தாள் பத்மாவதி.

திடமான ஒரு முடிவுக்கு வந்து விட்ட சேரமான் அப்படியே நடந்து பத்மாவதியை நெருங்கினார். அவளை அணைத்தவாறு அறைக்குள்ளே நடந்தார்.

கதவைச் சாத்தினார்.

''நான் குளிக்க வேண்டும்'' என்றார்.

தனது நீராழி மண்டபத்தில் அவர் குளிக்க வந்திருப்பதே ஒரு பெருமையாகக் கருதினாள் பத்மாவதி.

வண்ணக் கலவைகளைச் சலவைக் கல் மேடையின் மேல் அள்ளி வைத்தாள்.

சேரமான் நீரில் இறங்கி நன்றாகக் குளித்தார்.

மூன்று சொம்பு தண்ணீரைத் தலையில் ஊற்றிக் கொண்டே ஒரு வடமொழி சுலோகத்தைச் சொன்னார் சேரமான்.

பத்மாவதிக்கு அதன் பொருள் புரியவில்லை.

'இதோடு இந்த அரண்மனையைத் தலை முழுகுகிறேன்' என்பது அதன் பொருளாகும்.

சிறிதும் சலனமின்றிக் கண்ணாடி முன்னிருந்து தம்மை அழகு படுத்திக்கொண்டார்.

பத்மாவதியையும் மஞ்சள் பூசிக் குளிக்கச் சொன்னார்.

திருமணப் புடவையை அணிந்து கொள்ளச் சொன்னார்.

அப்படியே அவளைத் தம் மார்பில் அணைத்து, கன்னங்களிலும் நெற்றியிலும், இதழ்களிலும் மாறி மாறி முத்தமிட்டார்.

''நீ கொஞ்சம் கூடக் கவலைப் படாதே. என் வாழ்க்கைச் சாலை எப்படியோ போய் விட்டது. ஆனால் ஒரு குலதர்மப் பத்தினி எப்படி வாழ வேண்டுமோ அப்படி நீ வாழ்ந்து காட்டி விட்டாய். நீ பரிபூரண மகிழ்ச்சியடையும்படி நான் ஒருநாளும் நடந்து கொண்டதில்லை. இந்த நாள், அந்த நாளாக இருக்கட்டும்'' என்ற சேரமான் அவளைப் பஞ்சணையில் சாய்த்துப் பக்கத்தில் சாய்ந்தார்.

வெள்ளை வெளேர் என்ற பளிங்கு போலிருந்த அவளது மேனியை, தமது கதகதப்பான அரவணைப்பால் சாந்தப் படுத்தினார். தேகபூர்வமாக அவளை முழு நிம்மதி அடையச் செய்தார்.

அப்போது அவர் பேசிய வார்த்தைகளே தான் எதிர்காலத்தில் கொஞ்சப் போகும் குழந்தைகள் என்பது பத்மாவதிக்குப் புரிந்து விட்டது. அவள் கண்கள் வெள்ளம் நிறைந்த குளமாயின.

நாயகன் வனம் நண்ணனுற்றான்
என்றும்
மேயமண் ணிழந்தா னென்றும்
விம்மலள்
தீய வருந்திலை நீங்குவன்யானென்ற
தீய வெஞ்சொல் செவிசுடத்
தேம்புவாள்

—நாயகன் தன்னிடம் கூட விடை பெறுகிறானே என்று எண்ணிய போது அவள் கண்ணீர் கதறலாக மாறிற்று.

அவன் உறவு கொண்டது அவள் தேக சாந்திக்கு. இப்போது ஆறுதல் சொன்னது அவளது ஆன்ம சாந்திக்கு!



மூன்று நாழிகைகளுக்கு மேல் சேரமான் அவனுக்கு ஆறுதல் சொல்லி விட்டு அறையை விட்டு வெளியேறத் தொடங்கிய போது, தம்மையறியாமல் கீழே குனிந்து அவளது கால்களைத் தொட்டார்.

அவள் பதறிப் போய், 'வீழ்வானை வீழாமுன் மேலெடுத்துத் தான் தாழ்ந்தாள்!'

சேரமான் அறையை விட்டு வெளியேறினார்.

அவர் காதுகளில் கோட்டை வெளியில் இருந்து எழும் பெரும் ஆரவார ஒலி விழுந்தது.

சேரமான் கம்பீரமாக வெளியே வந்து பார்த்தார்.

திருவஞ்சைக் களத்துமக்கள் அங்கே பெரும் அளவில் திரண்டிருந்தார்கள். அனைவருமே பெரும்பாலும் சைவ சமயப் பற்று மிக்கவர்கள்.

'பகவதி மீது ஆணை. மன்னவர் முடி துறக்க வேண்டும்!' என்பதே அந்த ஆரவாரத்தின் நோக்கமாக இருந்தது.

சேரமான் அவர்களிடம் அதிகம் பேசவில்லை. 'நல்லது' என்று தலையை ஆட்டினார்.

கூட்டம் அமைதியடைந்தது: அவர் உள்ளே திரும்பினார்.

பெட்டகத்தைத் திறந்தார். அங்கு கட்டி வைக்கப்பட்டிருந்த சில பொற்கிழிகளை கையில் எடுத்தார். தமது அந்தரங்கக் காவலாளிகளாக இருந்த விசுவாச ஊழியர்களிடம் கொடுத்தார். ஒருவன் காதில் ஏதோ சொல்லி அனுப்பினார்.


அவன் வெளியேறுவதற்கும் மெல்லிளங்கோதையும் திருவிதாங்கோட்டிலிருந்த சேரமானின் இரண்டு சகோதரிகளும் உள்ளே நுழைவதற்கும் சரியாக இருந்தது.

''அண்ணா!'' என்று பதறியபடியே வந்தாள் மெல்லிளங்கோதை.

''காரியங்கள் முடியும் கட்டத்துக்கு வந்திருக்கின்றன. கண்ணீருக்கு இனி வேலையில்லை, சகோதரி!'' என்றார் சேரமான்.

அதுவரை அந்தப்புரத்திலேயே அடைபட்டுக் கிடந்த மற்ற மூன்று சகோதரிகளும் இப்போது கொஞ்சம் தைரியமாக அங்கே வந்தார்கள்.

''இப்போது கூட உங்கள் முடிவை மாற்றிக் கொள்ள முடியும். நீங்கள் நாடு துறக்க வேண்டியதில்லை: முடி



திருக்கோடிகாவல் ஸ்ரீ ஆஞ்சநேயர் திருப்பணி

வேத்ரவனம் என்று புகழப்படும் திருக்கோடிகாவல் க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ மஹா திரிபுரசுந்தரி சமேத ஸ்ரீ திருக்கோடீசுவர ஸ்வாமி தேவாலயத்தின் கிழக்கில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஆஞ்சநேய ஸ்வாமி தேவாலயம் மிகவும் ஜீர்ணமாகி யிருக்கிறது. திருப்பணி வேலை தொடங்க விருக்கிறது.

ஆஸ்திக அன்பர்கள் இந்தப் பணியில் பங்கு கொண்டு ஸ்ரீ ஆஞ்சநேய மூர்த்தியின் அருளுக்குப் பாத்திரர்களாக நாட வேண்டிய முகவரி: ஸ்ரீ பி. ஸ்ரீனிவாஸ அய்யர், பொருளாளர், ஸ்ரீ ஆஞ்சநேய ஸ்வாமி தேவாலயத் திருப்பணிக் கமிட்டி, திருக்கோடிகாவல் நரசிங்கன் பேட்டை-609802. தஞ்சை ஜில்லா.

துறக்க வேண்டியதில்லை!'' என்று அழுதாள் மெல்லிளங்கோதை.

''ஜனனத்தையும், மரணத்தையும் தவிர எந்த முடிவுமே மறுபரிசீலனைக் குரியதுதான். ஆனால் என்னுடைய இந்த முடிவு பரிசீலிக்கக் கூடியதல்ல!'' என்றார் சேரமான்.

''எங்களுக்காகவாவது மாற்றிக் கொள்ளக் கூடாதா?'' என்று கெஞ்சினார்கள் தாவளி சகோதரிகள்.

''இல்லை!'' என்று சொன்ன சேரமான் மெல்லிளங்கோதையிடம் திரும்பி, ''கோதை! உங்களுக்கு ஏதாவது நான் துன்பம் இழைத்திருந்தால் அதை மன்னித்து விடுங்கள். நல்ல வேளையாக என் வாழ்நாளிலேயே அதற்குப் பரிகாரம் தேடிக் கொண்டேன். மார்த்தாண்ட வர்மன் சுகமாக இருக்கிறானா?...ம்... அவன் சைவன்; வேணாட்டு அடிகள்; நானோ எல்லாவற்றையும் விட்டு விட்டே கடல் கடந்து போகப் போகிறேன். ஆமாம். என் முடிவு அதற்குள் எப்படித் தெரிந்து வந்து சேர்ந்தீர்கள்....?'' என்றார்.

''பாண்டிய நாட்டுப் படைகள் திருவிதாங்கோட்டிலே பாடி இறங்கியிருக்கின்றன. அத்தான் மானிச்சன்தான் தளபதியாகப் படை நடத்தி வந்திருக்கிறார். அவர்தான் சொன்னார்'' என்று விம்மல்களுக்கிடையே கூறினாள் மெல்லிளங்கோதை.

''உங்களில் யாரையும் நான் அனாதைகளாக்கி விட்டுப் போகவில்லை. நான் மேற்கொண்ட முடிவுகள் என்னை மட்டுமே கட்டுப்படுத்தக் கூடியவை. இது தத்துவமோ, தகவுடைமையோ நான் ஏற்றுக் கொண்ட விட்ட ஒன்று. யாரும் கலங்காதீர்கள். என்றோ ஒரு நாள் எங்கேயோ நாம் சந்திக்கத்தான் போகிறோம். எல்லோரும் போய் அவரவருக்குப் பிரியமான தேவதையை வழிபடுங்கள்'' என்ற சேரமான் தமது அலுவல் மண்டபத்திற்குள் நுழைந்தார்.

கேரள தேசத்தின் வரை படம் ஒன்றை எடுத்தார்.

அதில் பலவகையான கோடுகளைப் போட்டுப் பார்த்தார்.

ஓர் ஏடும் எழுத்தாணியும் எடுத்தார். அதில் சிலரது பெயர்களைக் குறித்தார்.

அப்போது உள்ளே நுழைந்தான் அவர் ரகசியம் சொல்லியனுப்பிய காவலாளி.

''மன்னவ! அவர்கள் வந்திருக்கிறார்கள்'' என்றான்.

பின்னாலேயே நான்கு மகமதியர்கள் வந்தார்கள்.

அவர்களிடம் சேரமான் ஏதோ ரகசியம் சொன்னார்.

அவர்கள் வெளியேறினார்கள்.

இரண்டு நாழிகைகளுக்கெல்லாம் மகமதியர்கள் தொழுகை மண்டபம் பரபரப்போடு காணப்பட்டது.

சேரமானைச் சந்தித்து விட்டு வந்த நான்கு மகமதியர்களில் ஒருவர்தான் மகமதிய மதத் தலைவர்.

அவர் எல்லோரையும் அமைதியாக உட்கார வைத்துப் பேச ஆரம்பித்தார்.

''சகோதரர்களே! உங்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியைச் சொல்லப் போகிறேன். எண்பது வயதே ஆன நம்முடைய இஸ்லாம் மார்க்கத்துக்கு, பரசுராம பூமியான இந்தக் கேரள தேசத்தில் நல்ல சூழ்நிலை உருவாகி இருக்கிறது. **மன்னவர் மூன்றும் சேரமான் பெருமாள் நாளை இந்நேரம் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவுகிறார்!''** என்று அவர் சொன்னதுதான் தாமதம். கூட்டத்திலிருந்து உற்சாகக் குரல்கள் ஓங்கி எழுந்தன.

செய்தி அப்படியே நகருக்குள் பரவிற்று.

வஞ்சியில் தண்டோரா போடுகிறவர்கள் அனைவரும் பகவதி அம்மனை வணங்குகிறவர்கள். அவர்கள் ஆத்திரமுற்று, யாரும் ஆணையிடாமலேயே, ''மன்னர் மதம் மாறுகிறார்!'' என்று ஊரெங்கும் தண்டோராப் போட்டு விட்டார்கள்.

அந்த ஒலி நாராயண நம்பூதிரியின் காதுகளிலும் விழுந்தது.

ஒரு விரலால் ருத்ராக்ஷத்தைத் தட்டும் நம்பூதிரி, இப்போது ஐந்து விரல்களாலும் தட்டினார். (தொடரும்)

EP-PR13

புதிய

உடனடி-உபயோக

டிக்-20

உடனடியாக மூட்டைப்பூச்சிகளை ஒழிக்கிறது



மண்ணெண்ணெய்
கலப்பதற்கான
மேற்படி செலவு
கிடையாது!



கலக்க வேண்டிய தொல்லை கிடையாது. திறந்து நேரக உபயோகிக்க வேண்டியதுதான். உடனடியாக மூட்டைப் பூச்சிகளை ஒழிக்கிறது. பிளவுகள், பொந்துகள், மெத்தைத் தையற்குழிகள், ஃபர்னிச்சர் ஜாயிண்ட்டுகள், சுவர்களிலுள்ள சட்டங்களின் அடி பாகங்கள் போன்ற பல இடங்களிலும் புதிய டிக்-20 உபயோகியுங்கள்.

புதிய டிக்-20 இப்போது அதிக பாதுகாப்பானது. வீட்டில் வைக்கலாம். காரணம் அது மீண்டும் புதுப்பிக்கப் பட்ட ஃபாமுலா கொண்டதாகும். முன்கூட்டியே மண்ணெண்ணெய் கலக்கப்பட்டு உடனடியாக உபயோகிக்க வசதியாக தயாரிக்கப்பட்டுள்ளது. சர்க்காரின் புதிய நிர்ணயங்கள்படி உள்ளது. உபயோகிப்போரின் பாதுகாப்பை உறுதி செய்கிறது.

இன்றே டிக்-20 வாங்குங்கள்
இன்றிரவே நன்றாக உறங்குங்கள்.

ஒரு ராலிஸ் இந்தியா தயாரிப்பு

RADEUS/RJT-3

சென்னையில் ஜனதா வீரர்கள்

ஏப்ரல் பத்தாம் தேதி மாலை சென்னை மெரினா கடற்கரைக்கு ஜனதா வீரர்கள் வந்து சேர்ந்தார்கள். அதற்கு முன்னால் பலரக கீதங்கள் பாடப்பெற்றன. அவை இன்னும் தேர்தல் பிரசார கால மயக்கத்திலிருந்து ஜனதா விடுபடவில்லை என்று எண்ணச் செய்தன. எதிர்க் கட்சிகளைச் சாடும் பாடல்களையே பாடினார்கள். தேர்தலுக்குப் பிறகு அரசியல் போக்குகளே மாறி வருகின்றன. புதிய சிந்தனைகளும் பிறந்துள்ளன. அப்படியிருக்க, தேர்தல் காலப் பாடல்களுக்கு இப்போது இடம் எங்கே? அரசியல் நாகரிகம் வேண்டாமா?

இதோ! திரு ராஜ் நாராயணன், மேடையில் ஏறுகிறார். பஞ்சகச்சம்! பச்சைக் கலரில் பஜனைக் குல்லாய்! கணுக்காலை எட்டும் ஜிப்பா! கரத்தைக் கூப்பிக் கொண்டே மிக உயரத்தில் இருக்கும் மேடையில் இந்தக் கோடிக்கும் அந்தக் கோடிக்கும் (பழைய கால நாடக மேடை ராஜ பார்ட் மாதிரி) நடந்து பிறகு நாற்காலியில் அமர்கிறார். உட்கார்ந்த வேகத்திலேயே ஏதோ சிறு புஸ்தகத்தை எடுத்துப் படிக்க ஆரம்பிக்கிறார்.

தென் சென்னைப் பகுதித் தலைவர் அன்பு மணியின் தலைமையில் கூட்டம் தொடங்குகிறது. குமரி அனந்தன் மேடைப் பேச்சுக் கலையில் வல்லவர்! மக்களைக் கவரும் வகையில் ஒலி நயத்துடன் ஆரம்பிக்கிறார். பேச்சினிடையே அவர் குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சி நம்மை வேதனையுடன் சிந்திக்க வைக்கிறது.

சுடந்த பிப்ருவரி மாதம் தேர்தல் பிரசாரத்துக்காகச் சென்னைக்கு வந்திருந்த மொரார்ஜி தேசாய் அவர்கள். திரும்பிப் போகும்போது மீனம்பாக்கம் விமான நிலையத்தில் சிறிது நேரம் தங்க வேண்டியிருந்ததாம். அங்கிருந்த பிரமுகர்கள் அறையில்(V.I.P. Lounge) மொரார்ஜி அவர்கள் காத்திருக்க விமான நிலைய அதிகாரிகள் அனுமதிக்கவில்லையாம். காரணம் அவர் பெயர் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் பிரமுகர்கள் ஜாபிதாவில் இல்லையாம்!

களைப்பின் காரணமாகவோ, அலுப்பின் காரணமாகவோ, சக்தி அமைச்சர் ராமச்சந்திரன் அவர்களின் பேச்சு களைகட்ட மறுக்கிறது. ஆங்காங்கு தொய்கிறது. அப்படியும் அரை மணி நேரம் பேசுகிறார். தம்மை ''மின் வெட்டு அமைச்சர்'' என்று குறிப்பிடுகிறார்களே என்று ஆதங்கப்பட்டுக் கொண்டார்.

அடுத்தாற்போல் ராஜ்நாராயணன் மைக்கைத் தட்டிப் பார்க்கிறார். 'மைக் ஜோர்' என்று அவரே சர்டிபிகேட் கொடுக்கிறார். ஹிந்தி லிபியில் சில தமிழ் வாக்கியங்களை எழுதிப் படித்து ஏகப்பட்ட கரகோஷத்தைப் பெறுகிறார். தொடர்ந்து ஹிந்தியில் பேச ஆரம்பிக்கிறார்.

''கிருஷ்ண பகவான் ஜெயிலில் பிறந்த மாதிரி ஜனதாக் கட்சியும் ஜெயிலில்தான் பிறந்தது. கம்சன், கிருஷ்ணனால் தனக்கு ஏதும் ஆபத்து இல்லை என்றுதான் நினைத்தான். ஆனால் கம்ச வதம் நடந்ததே! அது போல ஜனதா கட்சியும் இந்திரா காங்கிரஸ் கட்சியை வதம் செய்து விட்டது'' என்று வாரியார் பாணியில் பேச ஆரம்பிக்கிறார். ஆனால் சீக்கிரமே ஜனதாக் கட்சியின் தேர்தல் அறிக்கையை ஒவ்வொரு அம்சமாகப் படித்து விளக்க ஆரம்பித்தபோது பேச்சு 'போர'டிக்க ஆரம்பிக்கிறது.

அடுத்து அரசியல் ஜேம்ஸ்பாண்ட் சுப்பிரமணிய சுவாமி எழுந்திருக்கிறார். சோழவத்தான் சுப்பிரமணிய சுவாமிக்குத் தமிழ் நாட்டை விட்டு வெளியே போய் ரொம்ப நாட்களாய் விட்டதால் துணிந்து தமிழ் பேசக் கொஞ்சம் அச்சம்! ஐ. ஸி. எஃப். தொழிலாளர்களின் ஆண்டு விழாவிலும் பேசினார். அங்கே, ''நான் ஆங்கிலத்தில் பேசினாலும் தமிழில் மொழி பெயர்க்க வேண்டும். தமிழில் பேசினாலும் தமிழில் மொழி பெயர்க்க வேண்டும்'' என்று ஜோக் அடித்து விட்டு ஆங்



திரு பா. ரா. பேசுகிறார். வலது கோடியில் அரசியல் ஜேம்ஸ்பாண்ட். பஜனைக் குல்லாய் தரித்து அமர்ந்திருப்பவர் யாரென்று கூறவும் வேண்டுமோ?

லத்திலேயே பேசினர். கடற்கரையிலோ பல்லாயிரக் கணக்கான மக்களைப் பரவசப் படுத்தும் வகையில் தமிழிலேயே பேசினர். மழலை கலந்த தமிழ். ஆங்கிலமும் ஆங் காங்கே வருகிறது நுணைக்கு.

அவர் கூறிய மற்றொரு ஜோக்: நெருக்கடி நிலை பிரகடனமான புதிதில் ஒரு பிரயாணி டில்லியிலிருந்து ஆக்ராவுக்கு எக்ஸ்பிரஸ் ரயிலில் கிளம்பினராம்! இரண்டு மூன்று ஸ்டேஷன்கள் தாண்டியதும் அந்தப் பிர யாணி அபாய அறிவிப்புச் சங்கிலியைப் பிடித்து இழுத்தாராம். ரயில் நின்றது. ரயில் கண்டக்டர் வந்து பார்த்து எச்சரித்து விட்டு ரயிலைக் கிளப்ப ஏற்பாடு செய்தார். இன்னும் இரண்டு ஸ்டேஷன்கள் தாண் டியதும் அதே பிரயாணி மீண்டும் அபாய அறிவிப்புச் சங்கிலியைப் பிடித்து இழுத்தார். ரயில் நின்றது. இப்போது கார்டும் கண்டக் டரும் வந்தார்கள். ''நீங்கள் அகாரணமாய்ச் சங்கிலியைப் பிடித்து இழுத்ததற்காக உங் களுக்கு அபராதம் விதிக்க வேண்டி யிருக் கிறது'' என்றார்கள்.

பிரயாணி மௌனமாக அந்தச் சங்கிலி தொங்கும் இடத்துக்கு மேல் எழுதப்பட் டிருக்கும் வாசகத்தைச் சுட்டிக் காண்பித் தார்: In case of emergency pull chain என்று போட்டிருந்தது.

அந்தப் பிரயாணி என்ன தப்பு செய் தார்? எமர்ஜென்ஸிதான் அப்போது அமலி லிருந்ததே!

— பட்டினத்தார்

வட்ட மேஜை

● திரு சந்தானம் தமது தலையங்கக் கட் டுரைகள் மூலம் இன்று நம்மிடையே ராஜாஜி அவர்கள் இல்லை என்ற குறையைப் பெரு மளவு நிவர்த்தி செய்து வருகிறார். ''இந்திய தேசிய பொருளாதாரம்'' என்ற தலையங்கத் தில் அவர் கட்டாயச் சேமிப்பு போன்ற பய னற்ற வேலைச் சுமைகளிலிருந்து அதிகாரிகளை விடுவிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள் ளார். அதற்கு மேலாகப் பின்வரும் இரு காரி யங்களையும் புது அரசு உடனடியாகச் செய்ய வேண்டும். ரூபாய் பன்னிரண்டாயிரம் வரை யில் வருமான வரி விலக்களிப்பது ஒன்று. மற் றொன்று ரேடியோ லைசென்ஸை ஒழித்து விடுவது.

சென்னை—30
7—4—77

மோகன கிருஷ்ணன்

● வட்டமேஜைப் பகுதியில் திரு டி. ஜி. பி. ஹரன் மெல்லிசையைக் குறித்து எழுதி யுள்ள கடிதத்தைப் படித்து மிகுந்த மன வருத்தம் அடைந்தேன். அக்கடிதத்தில் மெல் லிசையைக் காளான் என்றும் ஆபாசக் கூச்சல் என்றும் வர்ணித்துள்ளார். ஏதோ சில பாடல்களைக் கருத்தில் கொண்டு பொதுவாக மெல்லிசையைக் குறித்துத் தரக் குறைவாக எழுதியுள்ளார். கர்நாடக இசையை, அதில் பாண்டித்யம் பெற்ற, அல்லது அது குறித்து ஓரளவேனும் அறிந்தவர்கள் மட்டுமே ரசிக்க முடியும். ஆனால் மெல்லிசையோ பாமரர் களையும் ரசிக்கச் செய்யும் தன்மையுடையது. மேலும் திரு ஹரன் இசையை மெய்யான இசை என்றும், போலி என்றும் பாகுபடுத்தி, மெல்லிசையைப் போலி கரன்ஸி நோட்டுக்கு ஒப்பிட்டு, அது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுவது நகைப்புக்கு இடமளிப்பதாய் உள்ளது. போலி தயார் செய்ய இசை என் பது ஒரு பொருள் அல்ல! நுகர்ந்து அறியக் கூடிய ஒன்று.

மதுரை—16
6—4—77

அ. ஜனகர் ராஜன்

● நீர் வர வ்ர ரொம்ப மோசம். நானும் பார்க்கிறேன். ''பார்த்திபன் கனவு'' ஓர் அத்தியாயத்துக்கு மேல் தொடர மாட்டேன் என்கிறது. இன்னும் ஓர் அத்தியாயமாவது சேர்த்து போட்டால் என்ன குடியா முழுகி விடும்?

வாணியம்பாடி
24-3-77

சி. பீமராஜ்

● திருவல்லிக்கேணி என்றவுடன் மனத்தில் முதலில் தோன்றுவது ஸ்ரீ பார்த்தசாரதி கோயில். அதனையடுத்து எவரும் எண்ணுவது மூவாயிரம் பெண்கள் கல்வி பயிலும் தேசிய பெண்கள் உயர்நிலைப் பள்ளியும், அதிலுள்ள என். கே. டி. கலாமண்டபமும். இப்பெரு மையைத் திருவல்லிக்கேணிக்குத் தேடித் தந் தவர் ஸ்ரீ என். கே. திருமலாச்சாரியார். இவற்றைத் தவிர, மகளிர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஒன்றும், ஆண்கள் உயர்நிலைப் பள்ளி



யொன்றும், இரண்டு ஆரம்பப் பள்ளி களும் அவரது கல்வி தொண்டுக்குச் சான் றுகளாய்த் திகழ் கின்றன. ஐம்பது ஆண்டு கால ஓயா உழைப்பின் பயன் கள் இவை. யாச கத்தாலேயே இத் தனை நிறுவனங்களை யும் நல்ல முறை யில் நிறுவினர் என் பது தனிப் பெருஞ் சிறப்பு. சர் சி. பி. இராமஸ்வாமி ஐயர் இவரை ''வெற்றிகரமான பிச்சைக்காரர்'' (Successful beggar) என்று வாய்க்கு வாய் பாராட்டுவார். அன்னார் தமது 82ம் வயதில் அண்மையில் இறைவனடி சேர்ந்தார்.

மூதறிஞர் ராஜாஜி ஒரு முறை ''தேசியப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியே ஸ்ரீ என். கே. டி. அவர்களுக்கு என்றுமே அழியாத உழைப் பின் சின்னம்'' என்றார். அதுவும் பின்னர் அவர் நிறுவிய ஏனைய ஸ்தாபனங்களும் அவரது புகழுடம்பாய் என்றும் நிலைத்து நிற்கும்.

சென்னை—5
6—4—77

என். எஸ். விசுவநாதன்

தூண்டில் மீன்

தலைப்பில் கவர்ச்சியில்லைதான். ஆனால் கதையில் சத்திருக்கிறது. லக்ஷ்மிக்கேற்ற கதாநாயகிப் பாத்திரம்; கதாநாயகிப் பாத்திரத்துக்கு ஏற்ற லக்ஷ்மி. திருமணத்துக்கு முன்பு இருந்த தன் அவல வாழ்க்கையைச் சீதா மறந்து விட்டாள். ஆனால் அயோக்கியன் ரங்கன் அவளையும் மறக்கவில்லை; அவளது கடந்த கால வாழ்க்கையையும் மறக்கவில்லை. அவளுக்கு ஒரு டாக்டருடன் மணமாகி ஒரு குழந்தைக்குத் தாயான பிறகும் அவளைப் பயமுறுத்திக் கொண்டேயிருந்தான். ரங்கன் சீதாவைக் கேட்டதெல்லாம், ஒரே ஒருநாள் 'உன்னை எனக்குக் கொடுத்து விடு' என்பது தான். இதற்கு அவள் இணங்காமற் போகவே ரங்கன் அவளைப் பலாத்காரமாக அடைய முயல்கிறான்; அவளைப் பயமுறுத்த அவள் தன் கணவனின் ரிவால்வரைக் காட்டுகிறாள். இருவருக்கும் அப்பொழுது ஏற்பட்ட கைகலப்பில் ரிவால்வர் வெடித்து ரங்கனின் மண்டையில் படுகாயம் ஏற்படுகிறது; அவன் கீழே சாய்கிறான். ஆனால் திரைக்கதை சாயவில்லை — அதற்கப்புறம்தான் நிமிர்ந்து நிற்கிறது.

ரங்கனைத் தான் கொன்று விட்டதாகவே நினைத்துச் சீதா பயத்தால் நடுங்குகிறாள். நாளைக்கு வெளியூரிலிருந்து வரப் போகும் கணவன் அறியாமல் இந்தக் கொலையை எப்படி மறைப்பது என்று தவிக்கிறாள். கம்பவுண்டர் கோபியின் உதவியோடு ரங்கனின் உடலைக் கடலில் போட்டு விடுகிறாள். இதற்கு அப்புறம் அவள் பயம் மேலும் அதிகமாகிறது. சீதாவின் பயம் நிறைந்த உள்ளத்தின் ஒவ்வொரு துடிப்பையும் லக்ஷ்மி அதியற்புதமாக வெளிப்படுத்துகிறாள்.

சீதாவின் கணவன் மன நோய் சிகிச்சை நிபுணனான டாக்டர் தியாகராஜனாக வரும் மோகன், ஆள் வாட்டசாட்டமாயிருக்கிறார். இங்குமங்கும் போகிறார், வருகிறார். நிறைய 'டயலாக்' பேசுகிறார். ஏனோ அவர் நடிப்பில் உயிரில்லை. என்ன செய்யலாம்!

சமீபத்தில் வெளியான படங்களிலெல்லாம் 'இடைவேளை'யின் போதே அநேகமாகப் படத்தின் முடிவு தெரிந்துவிடும். இந்தப் படத்தில், கடைசி வரையில் கதை இருக்கிறது. ஆனால், இடைவேளைக்குப் பிறகு படத்தின் ஓட்டம் ரொம்ப மெதுவாக இருக்கிறது. இன்னும் கொஞ்சம் துரிதமாக ஓட்டியிருக்கலாம்.

மேஜர் சுந்தரராஜன், ரங்கன், தம் பாத்திரத்தை மிகவும் பொறுப்போடு செய்திருக்கிறார். மண்டையில் துப்பாக்கிக் குண்டின் காயம் பட்டு நினைவு தவறியதிலிருந்து அவர் நடிப்பு புத்துயிர் பெற்று விட்டது.

ஃபாதராக வரும் சகஸ்ரநாமம் சிறிது நேரமே வந்தாலும் மிக இயல்பாக நடித்திருக்கிறார். கம்பவுண்டர் கருணிராஜன் வெறும் காமெடியனாக மட்டும் இல்லாமல், திரைக் கதையின் மர்மத்தை அறிந்தவராக வந்து நன்றாய் நடிக்கிறார்.

ரா. சங்கரன் ஒரு மர்மக் கதையை அதற்கு ஏற்ற விதத்தில் இயக்கியிருக்கிறார். மூலக் கதை, காலஞ்சென்ற ஜாவர் சீதாராமனின் நாவலை அடிப்படையாகக் கொண்டது என்பதைப் படத்தில் காட்டுவது கௌரவமாயிருக்கிறது.

காதலர் டூயட் பாட்டு, கனவில் ஒரு 'டூயட்' போன்ற ஃபார்முலாக் காட்சிகள் இல்லாமல் இருந்திருந்தால் இந்தப் படம் எங்குமே தொய்ந்து போயிருக்காது.

தூண்டிலில் மீன் சிக்கியதோ, இல்லையோ ''தூண்டில் மீன்'' படத்தில் நல்ல கதையொன்று சிக்கிக் கொண்டிருக்கிறது.

— காந்தன்




புகார் நகரில் கண்ணகி கண்ட கனவு அவனுடைய நினைவுக்கு வருகின்றது. தான் கண்ட கனவைத் தன் தோழியான தேவந்தி யிடம் கூறியபோது,

'' கோவலற்கு உற்றது ஓர் தீங்கு என்று
அதுகேட்டு
காவலன் முன்னர் யான் கட்டுரைத்தேன்''

என்றாள் அல்லவா? தான் கண்ட கனவின்படி கோவலனுக்குத் தீங்கு நேர்ந்து விட்டது. இனி, காவலன் முன்னர் கட்டுரைக்கக் கொலைக் களத்திலிருந்து புறப்பட்டாள். அரசனுடைய அரண்மனையை நோக்கி நடந்தாள்.

கொலைக் களத்தை விட்டுப் புறப்பட்ட பின்னும் அரண்மனைக்குச் செல்லும் வழிநெடுக



மதுரையம் பதியில் உள்ள பெண்களை யும், சான்றோர்களையும், தெய்வத்தை யும் நிந்தித்துப் பிரசாரம் செய்தவண்ணம் சென்றாள் கண்ணகி.

கொடுங்கோலன் நகரான மதுரையிலே கற் புடைப் பெண்கள் இல்லை; அறிவுடைச் சான் றோர் இல்லை; அருளுடைத் தெய்வமும் இல்லை என்ற முடிவுக்கே வந்தாள் கண்ணகி.

கோவலனுக்கு மரண தண்டனை கொடுத்து மன்னன் வழங்கிய தீர்ப்பை ஆட்சேபித்து, அவனிடமே 'அப்பீல்' வழக்குத் தொடுக்க விரும்பி, கண்ணகி, அரண்மனை வாயிலை அடைந்தாள்.

பாண்டி வேந்தனின் அரண்மனை வாயிலை அடைந்த கண்ணகி அங்கு ஆயுதபாணியாக நிற்கும் வாயிற் காவலனைக் கண்டாள். அவன் மூலம் தன் வருகையை மன்னனுக்கு அறி விக்க நினைத்தாள். மன்னனது அழைப்பு தனக்குக் கிடைக்கும் வரையில் அரண்மனை வாயிலிலேயே காத்திருக்க விரும்பினாள். ஆவேசம் கொண்ட நிலையிலும் அவளது அறிவு நன்றாக வேலை செய்தது.

வாயிற் காவலனைப் பார்த்து, ''வாயி லோயே, வாயிலோயே!'' என்று அழைத்த வள், அவன் காப்பது செங்கோலனின் வாயிலை அல்ல; கொடுங்கோலனின் வாயிலைத்தான் என்பதை அவனுக்கு உணர்த்த விரும்பி,

''அறிவு அறை போகிய பொறியறு நெஞ் சத்து இறைமுறை பிழைத்தோன் வாயி லோயே'' என்று கூறினாள்.

''கொடுங்கோலாட்சியில் சேவகம் செய் வதும் குற்றம்'' என்றார் காந்தியடிகள். அந்த ஒத்துழையாமைத் தத்துவத்தைத்தான் கண் ணகியின் மூலம் இளங்கோவடிகளும் உணர்த் தினார், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு! தொடர்ந்து வாயிலோனைப் பார்த்துக் கண் ணகி பேசுகின்றாள்:

'' இணையரிச் சிலம்பொன்று ஏந்திய கையள்
கணவனை இழந்தாள் கடையகத்தாள்
என்று
அறிவிப்பாயே, அறிவிப்பாயே!''

கண்ணகியைப் பார்த்த காவலன் நடுநடுங் கிப் போனான். அவளுடைய தோற்றம் அவ னைப் பயமுறுத்தி விட்டது. அவள் எதிரே அவன் ஊமையாகி விட்டான். அரண்மனைக் குள்ளே ஓடி, அவளுடைய வரவை மன்ன னுக்கு உரைக்கலானான். உரைத்த விதம் புதுமையானது. முதலில், ''வாழி!'' என்று கூறி அரசனை முழுவதையும் வாழ்த்தினான். அதற்கு மேல் ''எம் கொற்கைவேந்தே வாழி!'' என்று கூறி, கொற்கை என்னும் துறைமுக நகரின் வேந் தனை வாழ்த்தினான். மேலும்,

''தென்னம் பொருப்பின் தலைவா வாழி!'' என்றான். பாண்டியனுக்குள்ள சிறப்புக்களிலே ஒன்று, தெய்விகமான பொதிகை மலையை அவன் பெற்றிருப்பது அல்லவா? அதற்கு மேல் தென்னாடு முழுவதையும் அவன் ஆளுகின்ற பெருமையை நினைத்து, ''தென்னவ வாழி!'' என்றும் வாழ்த்தினான். நெடுஞ்செழியன் என் னும் பெயரே பெருமையுடையதாதலால்,

''செழிய வாழி!'' என்றும் கூறினான். அதற்கு மேலும் தன் மன்னனுடைய செங் கோன்மையை நினைத்தவனாகி,

''பழியொடு படராப் பஞ்சவ வாழி!''

என்று வாழ்த்தினான். தொடர்ந்து, ''பழி கூற ஒருத்தி வந்திருக்கிறாள்' என்பதையும் சொல்லத் தொடங்கினான்.

மன்னனைக் காண வந்திருப்பவளின் தோற் றத்தை வருணிக்க விரும்புகின்றது வாயிற் காவலனின் உள்ளம். அவள் அரசவைக்கு வருவதற்கான தோற்றத்தில் இல்லை யல் லவா? அதைச் சொல்லி விட்டால், அப்புறம் மன்னன் விரும்பினால் அழைக்கட்டும் என்று கருதினான் காவலன். (தொடரும்)

(மயிலை இலக்கிய வட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவிலிருந்து)

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600 031.
Managing Editor: T. Sadasivam. Associate Editor: K. Rajendran.



ப்ளீச் செய்யாமலே கருநிற மேனியை சிகப்பாக்கும் க்ரீம்



உலகு காணும் புதுமை: நிறத்தைக் கரைக்காமலே (ப்ளீச் செய்யாமலே) கரு மேனியைச் சிகப்பாக்கும் சாதனம் எக்காலத்திலும் இருந்ததில்லை. சருமத்தைச் சிவப்பாக்க இதுநாள்வரை செய்த முயற்சிகள் எல்லாமே குருட்டு முயற்சிகள், முரட்டு முறைகள். ப்ளீச்சுகளின் சங்கதி உங்களுக்குத் தெரியும்: இருக்கும் நிறத்தையும் கரைத்து வெளிற வைத்து விடும். அடிக்கடி உபயோகிப்பதோ ஆபத்து: காரணம், சருமத்தையே பாதிக்கும் அவற்றின் கடுங்குணம்.

விடிவெள்ளி காட்டும் விஞ்ஞான சாதனையாம் ஃபேர் அண்ட் லவ்லி இரு வழிகளில் வேலை செய்கிறது:

1. உள்ளூர வேலை செய்யும் வைட்டமின் ஒன்று அதிலுள்ளது.

இந்தக் க்ரீமை இடும்போதே, இதிலுள்ள வைட்டமின் சருமத்தினுள் இறங்குகிறது. இழைத்துத் தடவும் போதே உணருவீர்கள் இதன் செயல்வேகத்தை: பரவும் சருமக் கருமையினை மெல்லத் திசைதிருப்புகிறது இது. வேளாவேளை ஆறு வாரங்கள் உபயோகித்துவந்தால் மேனி வண்ணம் மாறக் காண்பீர். பிறரும் காண்பார்.

2. வெளிப்புறத்திலிருந்து பாதுகாப்பதற்கு, சூரிய ஒளி படாதபடி தடுக்கும் சாதனம் அடங்கியுள்ளது.

நிறம் கருப்பதற்குக் காரணமான கதிரொளியை சருமத்தின் மீது படவிடாமல் தடுத்து விலக்கி, மேனியைக் காத்திடுகிறது ஃபேர் அண்ட் லவ்லி.

சிகப்பழகு தந்து, மேலும் பல வகையில் சிறப்பூட்டும் க்ரீம் ஃபேர் அண்ட் லவ்லி.

ஒப்பனைக்கு அடிப்படையாக தினமும் ஒரு முறை இடத்தக்கது ஃபேர் அண்ட் லவ்லி; இரு முறை உபயோகித்தாலோ நிறைவான பலனுண்டு. வேளாவேளை உபயோகித்துவாருங்கள், மங்காத சிகப்பு நிறத் தங்க மேனி மனம்போல் உங்களுக்கே.

சிகப்பான மேனியழகுக்கு மென்மையான வழி- ஃபேர் அண்ட் லவ்லி

தமிழ்நாட்டில் தேர்ந்தெடுத்த சில நகரங்களில் கிடைக்கும்.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

லின்டாஸ்-FALOV-4-140 TM [R]

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 60 மலேசிய காசு